ஜோதி

சித்திர சகிதமான மாதப் பத்திரிகை.

சுடர் 3

கதிர் 7–12

1940ஞு பிப்ரவரிமீ முதல்
1940ஞு ஜூலைமீ வரை

ஆசிரியர்

வெ. சாமிநாத சர்மா.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,
நெ. 47, 31-வது வீதி,
இரங்கூன்.

1940.

வந்தேமாதரம்

"ஜோதி"

மூன்றாவது சுடர் இரண்டாவது பகுதி

பொருள் அடக்கம்

அரசியல்

	கதிர் —பக்கம்
அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?	8 – 36
அன்றும் இன்றும்-உடன்படிக்கை விவரங்கள்	12 – 56
அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?	8 – 45
இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம்	8 – 86
இந்திய சமஷ்டி அரசியல்	8 – 101, 11 – 47
இந்திய தேசிய காங்கிரஸ்—53	9 – 17
எந்தெந்த நாடுகளில் அரசர்கள் இருக்கிறார்கள்?	8 – 19
என்னுடைய வாழ்க்கையின் லட்சியம்?	10 – 91
காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்	10 – 24, 12 – 48
காங்கிரஸ் தலைவர் தேர்தல் விவரம்	8 – 88
குடியேற்ற நாட்டங்களும் வெஸ்ட் மினிஸ்டர் சட்டமும்	8 – 89
சர்வதேச சங்கம்	8 – 27
சில 'இஜம்'கள்	7 – 38
சீனாவைப் பற்றிய சில உண்மைகள்	10 – 9
சுதந்திர பிரதிக்ஞை	7 – 9
சுதந்திரத்தின் தேவைகள் யாவை?	7 – 70, 8 – 64, 9 – 70, 10 – 49, 11 – 25, 12 – 17
சென்ற மஹா யுத்தத்தைப் பற்றியசில விவரங்கள்	12 – 54
தவறுதலும் தண்டனையும்	11 – 22
தற்போதைய யுத்தத்திற்கு என்ன காரணம்?	12 – 43
மனிதனின் முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியா யிருப்பது எது?	8 – 32
யுத்தம் நடக்கிற பிரதேசங்களைப் பற்றி	10 – 85
யுத்தப் பிரதேசங்களைப் பற்றி	11 – 63
ராம்கார் காங்கிரஸ்	8 – 15
லெனினைப் போலவே காந்தி	7 – 24
லெனின் எப்படி வேலை செய்வது வழக்கம்?	8 – 81

கதிர்—பக்கம்

அன்றாட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள் 7 - 81, 8 - 96, 9 - 89, 10 - 87, 11 - 57, 12 - 70

இலக்கியம் கலை முதலியன

அழகுச் செல்வம் .... 10 - 35
அஹிம்சா தர்மத்தின் அந்தரங்க மென்ன? 10 - 67, 11 - 41
அஹிம்சையை ஸ்தாபிப்பது எப்படி? .... 11 - 3
இலங்கையில் ஹிந்து மதம் .... 11 - 52
உலகத்துப் பெரிய வாசகசாலை .... 8 - 12
உனக்கும் அச்சமா? .... 12 - 40
கட்டுரை எழுதுவது இலேசா? .... 11 - 12
சந்ததமும் இளமையோடிருக்க வழியென்ன? .... 9 - 94
சில பெரியார்களின் தற்போதைய வயது .... 7 - 58
டால்ஸ்டாயும் ஆரம்பக் கல்வியும் .... 8 - 107
தன்னம்பிக்கை .... 10 - 38
பரராசனைப் பாடிய புலவர் .... 7 - 47
புறநானூறு .... 10 - 45
மதமும் அரசாங்கமும் .... 10 - 74
வயிரத்தைப் பற்றிய வரலாறுகள் .... 7 - 32
வருங்காலத்து நாகரிகம் .... 7 - 17

சரித்திரம்

ஆங்கிலத்தில் சரித்திரம் எழுதுவானேன்? .... 8 - 17
இந்தியாவும் இங்கிலாந்தும் .... 11 - 41
சக்ரவர்த்தி விஜயராகவாச்சாரியர் .... 9 - 86
சரித்திர ஆராய்ச்சி .... 7 - 6
சித்தரஞ்சன தாஸர் .... 11 - 34
நானூறுவருஷங்களுக்கு முன் பக்கோநகரம் எப்படியிருந்தது? 12 - 51
பண்டித மதன் மோகன மாளவியா .... 7 - 29
மதுரை நாயக்கர்கள் காலத்துச் சேதுபதிகள் .... 12 - 8
மௌலானா அபுல் கலாம் அஸாத் .... 12 - 37
ராம கிருஷ்ண பரம ஹம்ஸர் .... 8 - 20
லாலா லஜபதிராய் .... 8 - 46
விவேகானந்தர் ஸ்ரீ .... 7 - 53
ஹகீம் அஜ்மல்கான் .... 10 - 63

சிறு கதைகள்

அக்கா 7 - 49, 8 - 49, 9 - 49
அரசனும் குருவும் அல்லது புத்தகப் படிப்பும் அநுபூதியும் 12 - 31

	கதிர்—பக்கம்
கண்டதும் காதல்	8 - 83
மலரும் வாழ்க்கையும்	10 - 30
ரஜபுத்திர ரமணி	7 - 64, 8 - 75, 9 - 62
வரன் தேடப் போகிற வக்கீலை	7 - 13
ஞானக் களஞ்சியம்	
வேதாந்த ரகசியங்கள்	7 - 59, 8 - 5, 9 - 57, 10 - 25, 11 - 17.
துலாக்கோல் (புத்தக விமரிசனம்)	
இனி நாம் செய்ய வேண்டுவது யாது?	10 - 82
உலகம் சுற்றும் தமிழன்	11 - 46
எலிசபெத் பிரை பெருமாட்டி	10 - 83
கட்டபொம்மு	11 - 46
கம்பன் கவிதை	10 - 4
கிருஷ்ண காந்தன் உயில்	8 - 37
குசேல வெண்பா	10 - 85
தேவதாஸ்	10 - 83
பர்மா பாடப் பயிற்சி	10 - 65
படியாதவர் படும்பாடு	8 - 7
புதுமைப் பித்தன் கதைகள்	10 - 83
பேஸிஸ்ட் ஜடாமுனி	10 - 81
மதனி	7 - 16
நமது நியாய சபை	
தலையங்கம்	ஒவ்வொரு கதிரின் முதற் பக்கத்தில்
பாடல்கள்	
கற்பனா சக்தி	10 - 34
தமயனின் கடிதம்	7 - 79, 8 - 62
நண்பன் கூடாவிடில்	10 - 48
மலரின் விருப்பம்	12 - 30
வேனிற்கால வெயிலோனுதயம்	7 - 23
பொருளாதாரம்	
அலுமினியம்	10 - 65
சோவியத் ருஷ்யாவில் விவசாயம்	7 - 42
பொருளாதாரமும் புதிய திட்டங்களும்	9 - 77
மனிதரின் பரஸ்பர சம்பந்தம்	11 - 38
விஞ்ஞானம்	
டாக்டர் மெக்நாத் சாஹா	10 - 57

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ தை௴ கதிர் 7

பிப்ரவரி 1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
சரித்திர ஆராய்ச்சி	— சரித்திரக்காரன்	6
சுதந்திர பிரதிக்ஞை	—	9
வரன்தேடப் போகிற வக்கணை	— "வருணன்"	13
துலாக்கோல்	— புத்தகவிமர்சனம்	16
வருங்காலத்து நாகரீகம்	—வ. அ. தியாகராஜன் M A.	17
வேனிற்கால வெயிலோனுதயம் —	வித்வான்—கா. ப. வேங்கட கிருஷ்ணன்	23
லெனினைப் போலவே காந்தி	—ஸ்ரீமதி கிளாரா ஷெரிடன்	24
பண்டித மதன்மோகன மாளவியா—	—"ஒரு காங்கிரஸ்வாதி"	29
வயிரத்தைப்பற்றிய வரலாறுகள்	—ச. முனிஸ்வாமி பிள்ளை	32
சில 'இஜம்' கள்	—ஜி. இ.	38
சோவியத் ருஷியாவில் விவசாயம்—	—எஸ். பி. ராய் B. A.	42

பர ராசனைப் பாடிய புலவர்	—வ. மு. இரத்தினேசுவரையர்	47
அக்கா (தொடர்கதை)	—எம். வி. வேங்கடராமன்	49
ஸ்ரீ விவேகானந்தர்	—"ஆசிரமவாசி"	53
சில பெரியார்களின் தற்போதைய வயது		58
ஞானக்களஞ்சியம்	—ஸ்ரீஸதானந்த சுவாமிகள்	59
ரஜபுத்திர ரமணி	—தனிராம் பிரேம்ஜி	64
சுதந்திரத்தின் தேவைகள் யாவை? — ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் 5	—வெ. சா.	70
தமயனின் கடிதம் 10	—"தேவிதாஸன்"	79
அன்றாட உலகம்		81

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. Lt col. கிரஹாம் சேடன் ஹட்சின் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அனுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராமின் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரம் வெளியிடப் பெறும்.

" ஜோதி "

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள் முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்

நெ. 47, 31-வது வீதி,

இரங்கூன்.

ஜோதி

கதிர் 3 | பிப்ரவரி—1940 | சுடர் 7

விவேகானந்தர்

ஜனவரி மாதம் கடைசி நாளன்று சுவாமி விவேகானந்தருடைய 78 வது ஜன்ம தினம். உலகத்தின் எல்லாப் பாகங்களிலும், இந்தத் திருநாளை அறிஞர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். விவேகானந்தரை காஷாயந்தரித்த துறவியாகவோ, மேனாடுகளுக்கு ஹிந்து மதத்தின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி, அது காரணமாக இந்தியாவின் பெருமையை நிலை நாட்டியவரென்றோ பலர்கொண்டாடலாம். ஆனால் நம்மைப் பொறுத்த மட்டில் அவரை ஓர் அரசியல் சந்நியாசி என்று கொண்டாடுவதிலேயே பெருமை கொள்கிறோம். வாழ்க்கை வேறு, மதம் வேறு என்று பிரித்துக் காட்ட முடியாதென்றும், சமயச் சார்பு பற்றியே மனிதனின் வாழ்க்கை நடைபெற வேண்டுமென்றும் விவேகானந்தர் வற்புறுத்திக் கூறினார். மதத்தை, ஒரு வறட்சியுள்ள பாலைவனமாக அவர் வருணித்துக் காட்டவேயில்லை. நமது அன்றாட வாழ்க்கையானது, ஜீவ சக்தியுடன் பிரகாசித்துக் கொண்டிருப்பதற்கு மதமே உறுதுணையாயிருக்கிறதென்பதை அவர் பல திருஷ்டாந்தங்களின் மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர், ஆன்ம பலம் பெறுவதற்காக தேக பலத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. திடமான தேகத்திலேதான் திடமான மனம் இருக்க முடியுமென்பது அவர் கருத்து. 'மோட்ச மடைவதற்கு கீதையைக் காட்டிலும் சிறந்த மார்க்கம் உதை பந்தாட்டம்' என்னும் கருத்துப்பட அவர் மொழிந்ததில் எவ்வளவோ அர்த்தமிருக்கிறது.

நமது புனிதமான பாரத நாடு, அடிமைச் சேற்றிலே உழன்று கொண்டிருப்பதை சுவாமி விவேகானந்தர் சிறிதுகூட விரும்பவேயில்லை. ஆன்ம சுதந்திரத்தையும் அரசியல் சுதந்திரத்தையும் அவர் ஒன்றுபடுத்தியே பேசினார். சிறப்பாக, இந்திய இளைஞர்களை நோக்கி அவர் செய்துள்ள பிரசங்கங்கள் எக்காலத்துக்கும் பொதுவானவை; பொன்னே

போல் போற்றத்தக்கவை. இந்தப் பிரசங்கங்களை மட்டும் புத்தக வடிவில் ஒன்று திரட்டி, பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாட புத்தகமாக வைக்கப்பட வேண்டுமென்பது நமது விருப்பம்.

மனிதனுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத, அவனுடைய அன்றாட வாழ்க்கைக்கு வழி காட்டாத மதத்தை விவேகாநந்தர் போதிக்கவேயில்லை. இதனாலேயே, அவர் அரசியலைப் பற்றி அடிக்கடி குறிப்பிட வேண்டியவரானார். அவரைப் போன்ற அரசியல் சந்நியாசிகள்தான் இப்பொழுது இந்தியாவுக்குத் தேவை. சாதாரண மனிதனால், பற்றவும் போற்றவும் முடியாத தத்துவங்களை அவர் உபதேசிக்கவேயில்லை. சாதாரண விவசாயி முதல், பங்கு மார்க்கெட்டில் பணத்தைப் பணயமாக வைத்து விளையாடும் பெரிய வியாபாரிவரை, அவரவரும் அநுஷ்டிக்கக் கூடிய மாதிரியான உபதேசங்களையே அவர் செய்தார். இத்தகைய உபதேசங்கள்தான் இப்பொழுது தேவை. விவேகானந்தர் சொற்ப வயது வரைதான் வாழ்ந்தார். ஆனால் அவருடைய சிறிய வாழ்க்கைக் காலத்திற்குள், ஒரு நூற்றாண்டிலே ஏற்படக் கூடிய எண்ணப் புரட்சியை, இந்தியர்களின் மனதிலே உண்டுபண்ணி விட்டார். ஆங்கிலப் படிப்பிலும், மேனாட்டு நாகரிக மோகத்திலும் மூழ்கியிருந்த இந்திய இளைஞர்கள், தங்களுக்கும் தனியானதொரு சக்தி இருக்கிறது; தங்கள் தாய் நாட்டுக்குத் தனியான பெருமை இருக்கிறது; அந்தப் பெருமையிலேதான் நாம் வாழ வேண்டும் என்று உணரத் தலைப்பட்டார்கள். உண்மையில், இந்திய தேசிய வாழ்வுக்கு வித்திட்டவர் சுவாமி விவேகானந்தர் என்பதுவே நமது அபிப்பிராயம்.

சுவாமி விவேகானந்தர் எருது போல் நடந்தார்; சிங்கம் போல் பார்த்தார். ஆனால் அந்த நடையிலும் பார்வையிலும் எவ்வளவு தன்னம்பிக்கை! எத்தகைய அன்பின் விகாசம்! இதுதான் அவருடைய வாழ்க்கையின் ரகசியம். இந்த ரகசியத்தைத்தான் ஒவ்வோர் இந்திய இளைஞனும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நாம் கூறுகிறோம். சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் 'நாளைய நம்பிக்கை புருஷர்களின்' தீர்க்கதரிசியாயிருந்தார். ஆதலால் அவருடைய திருநாளை, பிரதி வருஷமும் நினைவு படுத்திக் கொண்டு, நமது வாழ்க்கையில் ஒரு வித புனிதத் தன்மையைக் காண்போமாக!

* * *

சென்னையில் தமிழ் நாடு காங்கிரஸ் மாளிகையையும், அங்கு நடைபெற்ற பொருட் காட்சியையும், அக்கினி பகவான் தனக்கு இரையாக்கிக் கொண்டதைக் குறித்து வருந்துகிறோம். இதனால், உயிர்ச் சேதம் ஒன்றும் இல்லையாயினும், பொருட்சேதம் பலருக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. பொருளிழந்த பலர்க்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். எரிந்து போன காங்கிரஸ் மாளிகையைப் புதுப்பித்தல் அவசி

உதவி

யம். இதற்காகச் செய்யப்படும் எல்லா ஒழுங்கான முயற்சிகளும் நமது அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றன. பர்மாவிலுள்ள தமிழன்பர்கள், தங்களாலியன்ற வளவு பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

* * *

கலகம்

ஜனவரி மாதம் கடைசி வாரம் (27—1—40) இரங்கூனில் ஹிந்து—முஸ்லிம் கலகம் உண்டாகி பலருக்கு உயிர்ச்சேதமும், காயங்களும் ஏற்பட்டு விட்டதைக் குறித்து நாம் வருந்துகிறோம். சென்ற வருஷம், இதே காலத்தில்தான் ஹிந்து—முஸ்லீம் கலகம் ஏற்பட்டது. இந்த மாதிரி பிரதி வருஷமும் ஏற்பட்டு வருமானல் இதைவிட துக்கிக்கத்தக்க விஷயம் வேறொன்றும் இருக்க முடியாது. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இரண்டு கண்கள் போல் ஒற்றுமைப் பட்டு வாழ வேண்டியவர்கள். இதை காந்தியடிகள் பல முறை வற்புறுத்தியிருக்கிறார். இதையே நாமும் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். இனியாகிலும், பர்மாவிலுள்ள ஹிந்துக்களும்—முஸ்லீம்களும், எவ்வித மத வேற்றுமையும் பாராட்டாமல், இந்தியர்கள் என்ற ஒரே மனப்பான்மையுடனும் சகோதர வாத்சல்யத்துடனும் வாழ வேண்டுமென்று கோருகிறோம்.

* * *

கப்பல் வியாபாரம்

இந்தியாவின் கடலோரக் கப்பல் வியாபாரமும் வெளி நாட்டுக் கப்பல் வியாபாரமும் சேர்ந்து வருஷத்தில் நாற்பது கோடி பவுன் மதிப்புடையதாயிருக்கிறது. மூன்று கோடி டன் நிறையுள்ள சாமான்கள் ஏற்றிச்செல்லப் படுகின்றன. முப்பது லட்சம் பிரயாணிகள் போய் வருகிறார்கள். இவை யெல்லாம் ஒரு வருஷத்துக் கணக்கு இவ்வளவு பெரிய வியாபாரத்தில் இந்தியாவின் பங்கு என்னவென்று நினைக்கிறீர்கள்? அதாவது, இந்தியர்களுக்குச் சொந்தமான கப்பல்களில், மேற்படி கணக்கில் நூற்றுக்கு ஐந்து சத விகிதந்தான் பிரயாணிகளும் சாமான்களும் ஏற்றிச் செல்லப்படுகின்றன. ஒரு காலத்தில், உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சாமான்களுடன் நாகரிகத்தையும் ஏற்றிச் சென்றன இந்தியாவுக்குச் சொந்தமான கப்பல்கள். இப்பொழுது? கப்பல் கேழ்வையாகவும், பிரயாணக் கட்டணமாகவும், இந்தியா, தற்போது, வருஷத்தில் ஐம்பது கோடி ரூபாய் விகிதம், அந்நியக் கப்பல் கம்பெனிகளுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறது. அதாவது, இவ்வளவு பணமும் அந்நிய நாடுகளுக்குச் செல்கின்றன. இதைவிட வருந்தத்தக்க விஷயம் வேறொன்றும் இருக்க முடியாது. உலகத்தில் எந்தச் சிறிய நாட்டை எடுத்துக் கொண்டாலும் அதற்கென்று சொந்தமான வியாபாரக் கப்பல்கள் இருக்கின்றன; அவற்றின் மூலமாகவே அந்த நாட்டின் வியாபாரம் நடக்கிறது. ஆனல் 'குடியேற்ற நாட்டந்தஸ்து' பாதையிலே தவழ்ந்து விளையாட விருக்கும் இந்தியாவுக்குச் சொந்தமான வியாபாரக் கப்பல்களையோ, கப்பல் கம்பெனி

களையோ, விரல்விட்டுக்கணக்கெண்ணி விடலாம். இந்தியா அரசாங்கம் இதைப்பற்றிக் கவனிக்கவேயில்லை. ஆனால் அதைக் குறைகூறி என்ன பயன்? இந்தியா அரசாங்கம், இந்தியர்களுடைய அரசாங்கமாயிருந்தால் தானே!

* * *

அரசியல் நிர்ணய சபை

இந்த அரசியல் நிர்ணய சபை (கான்ஸ்டிடியுவெண்ட் அஸெம்ப்ளி) பேச்சுத்தான் இப்பொழுது அதிகமாக அடிபடுகிறது. சிறப்பாக, காங்கிரஸ் தலைவர்களின் பிரசாரத்தில் இதுவொரு முக்கிய இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இதுவிஷயமாக அரசியல் அறிஞர்களுக்குள் பலத்த அபிப்பிராய பேதங்களும் சந்தேகங்களும் இருக்கின்றன. அறிஞர் கே. டி. ஷா என்பவருடைய அபிப்பிராயத்தை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

“இந்த அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவது யார்? சரித்திர ரீதியாக நாம் பார்த்தோமானால், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதனைக்கூட்ட மாட்டார்களென்பது நிச்சயம். தவிர, தேசத்தின் நன்மையை முன்னிட்டு, இந்தச் சபை கூட்டும் வேலையை அந்நியர் வசம் ஒப்புவிப்பதும் நல்லதல்ல. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனத்தை மாற்ற வேண்டுமென்று நமது தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்த மன மாற்றம் என்பது, அளந்து காண முடியாத ஒரு விஷயம். இந்த அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும் தகுதியுடைய ஏதேனும் ஒரு ஸ்தாபனம் இருக்குமானால், அது காங்கிரஸ்தான். காங்கிரஸ் தலைவர்களால் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் முடியும். ஆனால் அவர்களுக்கு எதிராக அநேக சங்கடங்கள் ஏற்படக்கூடும். அவர்கள் நிர்ணயிக்கும் அரசியலை, கடைசியாக அங்கீகரிப்பது யார் என்ற பிரச்னை தோன்றினால், அது சிக்கலாகவல்லவோ இருக்கும்?”

* * *

ஜீவநாடி

‘கதர், அஹிம்சையின் சின்னம் மட்டுமல்ல; இந்திய தேசியத்தின் ஜீவநாடி’ என்கிறார் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா. இதை யாரும் ஆட்சேபம் செய்யவில்லை. ஆனால் இதொன்றே, இந்தியாவுக்குச் சுயராஜ்யக் கோயிலைத் திறந்து காட்டுமாவென்பதுதான் பலருடைய சந்தேகம். இந்த மாதிரியான ‘சந்தேகப் பிராணிகள்’ எந்த இயக்கத்திலும் எந்தக் காலத்திலும் இருப்பார்களென்பதை நாம் மறக்கவேயில்லை. ஆனால் சென்ற இருபது வருஷ காலத்து இந்திய தேசிய வாழ்க்கையில், கதரியக்கம் எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கிறதென்று ஆராய்ச்சி செய்கிற நிஷ்பட்சபாதிகள், இந்தச் சந்தேகப் பேர்வழிகளுடன் சேர்ந்து ‘மைனாரிட்டி’ யாகிவிடப் போகிறார்களேயென்பதுதான் நமது அச்சம்.

பதவி

1940ம் வருஷம் பிப்ரவரி மாதம் பதவி ஏற்பாளர்களுக்கு ஒரு நல்ல மாதமாயிருக்குமென்று, ஒரு வானம்பாடி தனது இனிய குரலில் நமது செவியில் வந்து ரகசியமாகச் சொல்லிப் போகிறது. இந்த மாதம் முதல் வாரத்தில்—அதாவது காந்தி—லின்லித்கோ சம்பாஷணைக்குப் பிறகு—காங்கிரஸ் கட்சியினர், மீண்டும் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளப் போகிறார்களாம். இஃது உண்மையா யிருக்குமா? நம்மைப் பொறுத்த மட்டில், இந்த ஊகத்தை நம்பவுமில்லை; ஆனால் நம்பாமலுமில்லை. ஸ்ரீ ஆஸ்க்வித்தின் பிரபல வசனப்படி, 'பொறுத்துப் பார்ப்போம்'!

* * *

சுதந்திரம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கட்டளைக் கிணங்க, 1940ம் வருஷம் ஜனவரி மாதம் 26ந் தேதி இந்தியா வெங்கணும் சுதந்திர தினம் கொண்டாடப் பெற்றது. அதுவரையில் நமக்குச் சந்தோஷமே. ஆனால் சுதந்திர பிரதிக்ஞையைப் பற்றி அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கின்றன வென்பதை ஒளித்து வைப்பதில் பயனில்லை. லட்சியத்தைக் குறிக் கோளாகக் கொண்டது பிரதிக்ஞை. அந்த லட்சியத்தை அடைகிறவரை, பிரதிக்ஞை மாற முடியாது; மாறவும் கூடாது. குறித்த அந்த லட்சியத்தை யடைய நாம் கையாளும் முறைகள் காலத்திற் கேற்றவாறும் சந்தர்ப்பத்திற் கேற்றவாறும் மாறிக் கொண்டிருக்கலாம். அப்படி மாற்றுவதும், லட்சியத்தை யடைவதாக நாம் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞைக்கு முரணாகாது. இந்தத் திருஷ்டியுடன், சுதந்திர பிரதிக்ஞையை நோக்குவோர்க்கு, அஃது ஒரு தீர்மானமாகத்தான் புலப்படுமே தவிர ஒரு பிரதிக்ஞையாக—சங்கல்பமாகப் புலப்படாது. தீர்மானங்களைப் பிரதி வருஷமும் கூட்டியும் குறைத்தும் நிறைவேற்றிக் கொள்வதனால் யாருக்கும் ஆட்சேப மிருக்க முடியாது. ஆனால் பிரதிக்ஞையையும் இப்படி மாற்றிக் கொண்டு போவது சரியா வென்பதுவே பலருடைய கேள்வி. ஐக்கிய மாகாணத்து மாஜி மந்திரி சுவாமி சம்பூர்ணானந்தர் இதே கருத்தைத்தான் வெளியிட்டிருக்கிறார். இது சிந்திக்கத் தக்கதுதானே.

ராம்கார் காங்கிரஸ் எப்பொழுது?

1940ம் வருஷம் மார்ச் மாதம்

14, 15, 16 தேதிகளில்—காரியக் கமிட்டி கூட்டம்

17, 18, 19 தேதிகளில்—அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டமும் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டமும்

19, 20, 21 தேதிகளில்—காங்கிரஸ்

சரித்திர ஆராய்ச்சி

—சரித்திரக்காரன்

இந்தியாவில் சரித்திர நூல்களே இல்லையென்பது மேனாட்டார் எண்ணம். அஃது எவ்விதத்திலும் ஒப்பத் தகுந்ததல்ல. இந்தியாவின் பண்டை நாகரிகத்தை நன்குணர்ந்து அதன் நூல்களைச் செவ்வனே ஆய்ந்த அறிஞர் அங்ஙனம் கூறத் துணியார்.

இந்தியாவில் சரித்திர ஞானம் இல்லையென்றால், உலகத்திலேயே அஃது இல்லையென்று சொல்லவேண்டும். உலக முழுவதற்கும் சரித்திர ஞானத்தை அளித்தது இந்தியாவே. ஆனால், நமது தாய் நாட்டின் மீதுள்ள ஆர்வத்தால் இங்ஙனம் கூறுவதாகக் கொள்ளக் கூடாது. நடுநிலைமையுடன் நோக்கினால் 'நாகரிகம்' என்கிற சக்கரம் இந்தியாவினின்றுதான் முதன் முதல் புறப்பட்டது என்று தெற்றென விளங்கும். ஆனால் மேனாட்டுக் கொள்கையைத் தழுவும் சிலர் க்ரீஸ் என்ற தேசந்தான் உலகத்திற்கு நாகரிகத்தை வழங்கியதென்றும் இந்தியா கிரேக்கர்களிடமிருந்தே நாகரிகத்தைப் பெற்றுக் கொண்டதென்றும் கூறுவர். அதற்கு ஆதாரமாகச் சில காரணங்களையும் எடுத்துக் காட்டுவர். என்னே! மாஸிடோனிய தேசத்தின் அரசனான அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்து வரும் போது பல கிரேக்கர்களை அழைத்துக் கொண்டு வந்தான்; அவர்களிடமிருந்து இந்தியர்கள் கிரீக் நாகரித்தைக் கற்றுக் கொண்டனர். அது முதற் கொண்டே இந்தியா சிறிது சிறிதாக நாகரிக முதிர்ச்சி பெறலாயிற்று. இதுவே அன்னார் கூற்று. ஆனால் அஃது ஏற்றுக் கொள்ளற்பாலதன்று. அலெக்ஸாண்டர் இந்தியாவில் சில காலம் தங்கியிருந்த போது இந்தியாவின் நாகரிகத்தைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து பேசினான். இன்னும், அவன் இந்தியாவினின்றும் திரும்பிச் செல்லும் போது ஆயுர்வேத வைத்தியர் பலரை அழைத்துச் சென்றான்.

இந்தியாவிலிருந்து பல நூல்களையும் அறிஞர்களையும் அவன் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான் என்றும் தெரிய வருகிறது. ஆதலின் இந்தியாவிலிருந்து சென்ற அலெக்ஸாண்டரின் பிற்காலத்திலேயே க்ரேக்கர்கள் சிறந்த நாகரிகர்களானார்கள். அலெக்ஸாண்டருடன் சென்ற இந்திய அறிஞர், இந்திய நாகரிகத்தை க்ரீஸ் தேசத்தில் பரப்ப

லாங்கிருந்து யூரோப்பா கண்டம் முழுவதும் பரவிற்று. 'நாகரிகம்' என்ற பதத்தின் உண்மைப் பொருள் இந்தியாவினின்றுமே உண்டாயிற்று. இது நிற்க இந்தியர்களுக்குச் சரித்திரஞானம் உண்டோ இல்லையோ என்பதைப்பற்றி ஆராய்வோம்.

மேனாட்டார் 'சரித்திரம்' என்பதற்கு என்ன பொருள் கொண்டிருக்கின்றனரோ தெரியவில்லை. சரித்திரநூல் எனின் ஓர் அரசன் அரியாசனம் ஏறிய வருஷம், மாதம், தேதி, மணி முதலியவைகளைக் குறிப்பிடுவதே என்று அவர் கொண்டிருக்கின்றனர் போலும். அந்த எண்ணம் அவருக்கிருந்ததே யெனின் அது பெரும் பிழையேயாகும். ஓர் அரசன் காலத்தில், அவனாண்ட நாடு எங்ஙனமிருந்தது; அவன் காலத்தில் பிறநாடுகள் எங்ஙனமிருந்தன; குடிகளின் நிலைமை, அக்காலத்திருந்த நாகரிகம், இவைகளைப் பற்றித் தெரிவிப்பன தேசசரித்திரமாகுமன்றி, அவ்வரசன் பிறந்த தேதியும் இறந்த தேதியும் கொண்டது சரித்திரமாகாது. இதை மேனாட்டார் நன்குணரல் வேண்டும். உற்று நோக்கினால் சரித்திரத்தின் எந்தப் பாகத்தைக் கொண்டு நாம் ஆராய்ந்து பார்த்தாலும் இந்தியரை விட மேனாட்டார் சரித்திர ஞானத்தில் குறைந்தே இருக்கின்றனர் என்று துணிவாகக் கூறலாம்.

இனி மேனாட்டார், சரித்திரம் என்பதற்கு என்ன பொருள் கொண்டிருக்கின்றனரோ அதைப் பற்றியே ஆராயலாம். அவர், தேதி, மாதம் முதலியவைகளைப் பற்றிக் கூறுவதே சரித்திரமென்கின்றனர். சரித்திரத்தின் அக்கிளையிலாவது அவர் தேர்ச்சி பெற்றிருக்கின்றனரோ! இல்லை. ஜெகப்பிரியர் என்று உலகெலாம் புகழ்ந்து கொண்டாடப்பட்ட ஆங்கிலக் கவிச்சக்ரவர்த்தியாகிய ஷேக்ஸ்பியரின் பிறந்த காலம் இன்னும் சரியாகக்கூறப்படவில்லை. அறிஞர் பலர் அதைப்பற்றி இன்னும் வாதம் செய்து கொண்டிருக்கின்றனர். பதினாறும் நூற்றாண்டில் இருந்த ஒரு கவிச் சக்கரவர்த்தியின் பிறந்த காலம் இன்னும் சரியாகத் துணிந்து கூறப்படவில்லையெனின், மேல் நாட்டாரின் சரித்திர அறிவு சாலவு நன்று! இந்தியர்கள் இத்துறையில் பின் வாங்கினார்களோ? கிறிஸ்து பிறப்பதற்கு முந்திய நூற்றாண்டுகளில் நடந்ததையும் மாதம், தேதி, நக்ஷத்திரம் முதலியவைகளோடு சேர்த்துக் கூறுவார்கள். உதாரணமாக மணிமேகலையில் புத்தர் பிறந்த வருஷம், மாதம் நக்ஷத்திரம் முதலியன விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. சோழ அரசர்களில் தலைசிறந்து நின்றவனும், பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவனுமான கரிகாற் பெருவளத்தான் என்பான் காவிரி நதிக்கு இருகரை கட்டியது எவ்வருஷத்தில் என்பது பின் வரும் வெண்பாவால் விளங்கும்.

'தொக்க கலியுகத்து மூவாயிரத்துத் தொண்ணூற்றில், மிக்க கரிகால் வேந்தனுந்தான், பக்கம் அலைக்கும் புகழ்ப் பொன்னியாறு கரை கட்டினான்' என்பது. இதனால் காவிரியின் இரு கரையும், கி. மு. 10வது வருஷத்தில் கட்டப்பட்டது என்பது நன்கு விளங்கும். இன்னும் தமிழ்க் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனின்

காலத்தை 'எண்ணிய சகாத்தம் எழுநூற்றேழின் மேல் சடையன் வாழ்வு' என்ற தொடக்கத்துச் செய்யுளாலும் அறியலாம். இம்மாதிரி அநேக உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். இங்ஙனமெல்லாம் இருக்க இந்தியர், முக்கியமாய்த் தமிழ் நாட்டார் சரித்திரத்தை அறியாதவர் என்று எப்படித் துணிவாய்க் கூறுகின்றனர்? சரித்திரத்தின் மற்றொரு துறையில் இறங்கி ஆலோசிப்போமாயின் இந்தியரைவிட மேனாட்டார் எவ்வளவோ தாழ்ந்த நிலையில் இருக்கின்றனர். எனனே ? பண்டைக் காலத்து நாகரிகத்தையும், அப்பொழுது நாடு முதலானவைகள் இருந்த தன்மையையும் பற்றிக் கூறும் நூல் மேனாட்டில்-முக்கியமாய் ஆங்கிலப் பாஷையில் எங்கு இருக்கின்றது? ஆங்கிலப் பாஷைக்கே ஒருவாறு ஊற்றுக்களமாய் இருக்கும் ஷேக்ஸ்பியரின் நூல்களெல்லாம் நாடகங்களே. (நாடகத்தை நான் இழிவுபடுத்திக் கூறுவதாக நினைக்க வேண்டாம்) சரித்திர சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரிதும் உபயோகப்படா.

தமிழ் நூல்களை எடுத்துக் கொள்வோம். சங்க இலக்கியங்களெல்லாம் சரித்திரங்களே. மற்றெந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அது சரித்திர சம்பந்தமாகவே இருக்கும். ஆனால் மேனாட்டிற்கும் இந்தியாவிற்கும் என்ன வேற்றுமை யென்றால், இந்தியாவில் (தமிழ்ப் பாஷையில்) சரித்திரம் என்பதற்குத் தனியான நூலொன்றில்லை; அந்நூலில் எல்லாம் அடங்கியிருக்கும். உதாரணமாகப் பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். அந்நூல், சரித்திரம் போதிக்கின்றது; ஒழுக்கத்தின் உயர்வை எடுத்துக் காட்டுகின்றது; கற்பின் திறனையும், இல்லறத்தின் மேன்மையையும் எடுத்து காட்டுகின்றது. இன்னும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத யாவும் அந்நூலில் காணலாம். இங்ஙனமே தமிழில் உள்ள எல்லா நூல்களிலும் ஒருவாறு காணலாம். பஞ்சகாவியங்களிலுமுள்ள சரித்திர சம்பந்தமானவைகளைத் தொகுத்து எழுதினால் எத்தனையோ புஸ்தகங்கள் ஆகுமே. ஆங்கிலத்தில் இங்ஙனம் உண்டோ? சரித்திரம் என்று பிற்காலத்து ஆசிரியர் எழுதிவைத்ததேயன்றிப் பண்டை நூல் ஏதேனும் உண்டோ? பிற்காலத்தார் எழுதிய சரித்திரங்கள் கூட அரசர் ஒருவரோடொருவர் போர் புரிந்ததையே முக்கியமாய்த் தெரிவிக்குமன்றி பிற விஷயங்களைத் தெரிவியா. இதைப்பற்றி அதிகமாய்க் கூற வேண்டுவது எற்றுக்கு? இன்னும் இந்திய நாட்டுச் சாஸனங்கள் யாவும் சரித்திரங்களே. இவைகளையெல்லாம் கண் கூடாகக் கண்டிருக்க, மேனாட்டார் இந்தியாவில் சரித்திரங்களே இல்லையென்று எங்ஙனம் வாய் கூசாது கூறுகின்றனரோ? சரித்திரம் என்று தனியாகவே ஏதேனும் நூல் இருக்கின்றதோ என்று சிலர் கேட்கக் கூடும். ஆம். பல நூல்கள் சரித்திரங்கள் என்ற பெயர் புனைந்து இருக்கின்றன. வடமொழியில், உள்ள 'ராஜ தரங்கிணி' என்னும் நூல் சரித்திரமே. பாலி பாஷையிலுள்ள இலங்கைத் தீவின் சரித்திரங்களாகிய மஹா வமிசமும் தீப வமிசமும் சரித்திரங்களே. பர்ஷிய பாஷையில் சரித்திர நூல்கள் பலவுள.

சுதந்திர பிரதிக்ஞை

பத்து வருஷத்திற்கு முன்னும் பின்னும்

1940ம் வருஷம் ஜனவரி மாதம் 26ந் தேதி இந்தியா வெங்கணும் சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது. அப்பொழுது, புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட சுதந்திர பிரதிக்ஞையைப் பலரும் எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பிரதிக்ஞையைப் பற்றி நாட்டின் பல இடங்களிலும் அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கின்றன வென்பதை யாரும் மறுக்க முடியாது. அதாவது, 1930ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட சுதந்திர பிரதிக்ஞையைக் காட்டிலும், 1940ம் வருஷத்துச் சுதந்திர பிரதிக்ஞை எவ்விதத்திலும் முற்போக்குள்ளதாயில்லை யென்று ஒரு சிலரும், இன்னுஞ் சிலர் 'அப்படியில்லை; இது முற்போக்குள்ள தென்றும்' கூறுகிருர்கள். ஆதலின், 1940ம் வருஷத்துப் பிரதிக்ஞையையும் 1930ம் வருஷத்துப் பிரதிக்ஞையையும் சேர்த்து இங்கு வெளியிட்டிருக்கிரும். 'ஜோதி' வாசகர்கள், தாங்களே இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வர இஃது உதவியா யிருக்குமல்லவா?

1940ம் வருஷத்துச் சுதந்திர பிரதிக்ஞை

மற்ற ஜனங்களைப் போல் இந்திய மகா ஜனங்கள் சுதந்திரம் பெற்று, தங்கள் உழைப்பின் பயனை நுகர்ந்து, வாழ்க்கையின் தேவைகளை அடைந்து, இவற்றின் விளைவாகப் பூரண வளர்ச்சியடையும் சந்தர்ப்பங்களைப் பெற உரிமை யுடையவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். மேற்படி உரிமைகளை எந்த அரசாங்க மேனும் மறுத்து, ஜனங்களை ஹிம்சிக்குமானல், அந்த அரசாங்கத்தை மாற்றவோ, அழிக்கவோ மேற்படி ஜனங்களுக்கு உரிமையுண்டு என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கமானது, இந்திய மகா ஜனங்களுக்கு உரிமை யில்லாமற் செய்து விட்டதோடுங் கூட, தனது ஆட்சி முறையை, பாமர ஜனங்களைச் சுரண்டுதல் என்னும் அஸ்திவாரத்தின் மீது அமைத்துக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக பொருளாதாரத்திலும், அரசியலிலும், கலைஞானத்திலும் பாரமார்த்திகத்துறையிலும் இந்தியா, அழிக்கப் பட்டுக் கிடக்கிறது. ஆகையால், இந்தியா, பிரிட்டிஷ் தொடர்பை அறுத்துக் கொண்டு பூரண சுயராஜ்யம் அடைய வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். நாம் சுதந்திரம் பெற வேண்டுமானல் அது பலாத்காரத்தின் மூலமாக வல்ல வென்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். சமாதான முறைகளையும் நியாயமான முறைகளையும் இது வரையில் கையாண்டு இந்

தியாகபலமும் தன்னம்பிக்கையும் பெற்று சுயராஜ்ய பாதையில் அதிக தூரம்முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்த முறைகளைக் கையாளுவதினாலேயே நமது நாடு சுதந்திரம் பெறமுடியும். இந்தியாவின் சுதந்திரத்திற்காக நாங்கள் மீண்டும் பிரதிக்ஞை செய்து கொள்கிறோம். இந்தியா, பூரண சுயராஜ்யம் பெறுகிற வரையில் சுதந்திரப் போராட்டத்தை அஹிம்சா தர்ம முறையில் நடத்த உறுதி கொள்கிறோம்.

அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு போராட்டத்தை நடத்துவதற்கு முன்னர் கதர், சமூக ஒற்றுமை, தீண்டாமை விலக்கு ஆகிய நிர்மாண வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும். ஆதலின், நாங்கள், ஜாதி, வகுப்பு வேற்றுமையின்றி, எல்லா வகுப்பாரிடத்திலும் நல்லெண்ணத்தை உண்டு பண்ணுவோம். இதுகாறும் ஜன சமூகத்தினின்று புறக்கணிக்கப்பட்டவர்களை, அவர்களுடைய அறியாமையினின்றும் வறுமையினின்றும் கை தூக்கி விடுவோம். பின்னடைந்த வகுப்பினரென்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரென்றும் கருதப்படுவோரின் நலன்களை உயர்த்துவோம். ஏகாதிபத்திய முறையை ஒழிக்க நாம் முற்பட்டிருக்கிறோமாயினும், இங்கிலீஷ்காரரிடத்தில்—அவர்கள் உத்தியோகஸ்தர்களாயினுஞ் சரி, உத்தியோகஸ்தரல்லாதாராயினுஞ் சரி—எவ்வித துவேஷமும் எங்களுக்கு இல்லை. ஹிந்துக்களென்றும் ஹரிஜனங்களென்றும் வித்தியாசங்கள் இருப்பது ஒழிய வேண்டுமென்பதை நாங்கள் அறிவோம். ஹிந்துக்கள், தங்கள் தினசரி வாழ்க்கையில் இந்த வேற்றுமைகளை மறக்க வேண்டும். நம்முடைய மத நம்பிக்கைகள் வெவ்வேறாயிருந்த போதிலும், அஹிம்சா தர்ம முறையில் நாம் காரியங்களைச் செய்வதற்கு இந்த வேற்றுமைகள் முட்டுக்கட்டையாயிருக்கின்றன. ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அரசியல், பொருளாதாரம் முதலியவைகளில் ஒரே நிலையிலுள்ளவர்கள் என்றமுறையில் எல்லாரும் பாரதமாதாவின் புதல்வர்கள் என்ற எண்ணத்துடன் நாம் பரஸ்பரம் அன்றாட வாழ்க்கையில் நடந்து கொள்வோம். இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும், ஜனங்களின் கொடிய வறுமையை ஒழிப்பதற்கும், கைராட்டினமும், கதரும் நமது நிர்மாண திட்டத்தில் இன்றியமையாத அம்சங்களாயிருக்கின்றன. ஆதலின், நாங்கள் ஒழுங்காகக் கைராட்டினத்தில் நூல் நூற்போம். எமது சொந்த உபயோகத்திற்குக் கதரையே உபயோகிப்போம். கூடிய வரையில், கிராமங்களிலே உற்பத்தியான பொருள்களையே உபயோகிப்போம். இப்படி உபயோகிக்கும்படி பிறரையும் செய்வோம். காங்கிரஸ் கொள்கைகளையும் முறைகளையும் ஒழுங்காக அநுசரிப்போம். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை நடத்த, காங்கிரஸ் எப்பொழுது அழைப்பு அனுப்புமானாலும் அதற்குத் தயாராயிருப்போம்.

1930ம் வருஷத்துச் சுதந்திர பிரதிக்ஞை

உழைப்பின் பலனை ஆண்டு அனுபவிக்கவும், சுகவாழ்வினுக்குரிய தேவைகளைப் பெறவும், ஏனைய

தேச மக்களைப்போல் இந்திய மகா ஜனங்களுக்கும் சுதந்திரமுண்டு. அப்பொழுதுதான் இந்திய மக்கள் உலக வாழ்வில் முன்னேறுவதற்குரிய பூரணமான சந்தர்ப்பங்கள் வாய்க்கும். இது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். மேலே சொல்லிய உண்மைகளையும் சந்தர்ப்பங்களையும் எந்த அரசாங்கமேனும் பறிக்குமாயின், அந்த அரசாங்கத்தை மாற்றவோ அல்லது மாய்க்கவோ மகா ஜனங்களுக்கு உரிமையுண்டு.

இந்தியாவில் ஆட்சி செலுத்தும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் சுயேச்சையையும், சுதந்திரத்தையும் பறித்துளது; அன்றியும் பாமர ஜனங்களைச் சுரண்டி அவர்களது நலபலன்களை ஏகபோகமாக அனுபவிப்பதையே அடிப்படையாகவும் கொண்டுளது; மேலும் பொருளாதாரம், ராஜீயம், ஞானமார்க்கம், ஆத்மார்த்தம் ஆகிய துறைகளிலும் இந்தியாவை நாசப்படுத்தி விட்டது. ஆதலால் இந்திய மகா ஜனங்கள் அத்தகைய பிரிட்டிஷ் தொடர்பை அறவே கைவிடுத்து பரிபூரண சுயேச்சையை அடைதல் வேண்டும்.

செல்வ அபிவிருத்தி வகையில் இந்தியா தேசம் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றது. நமது மக்களிடமிருந்து வாங்கப்படும் வரிப் பணமோ வருவாய்க்கு மிகவும் மிதமிஞ்சியதாகும். நமது சராசரி வருமானம் அன்றாடம் ரூ. 0—1—9 தான். நம்மவர் செலுத்தும் பளுவான வரிகளால் நூற்றுக்கு இருபது பங்கு விவசாயிகளிடமிருந்து நில வரியாக வாங்கப்படுகிறது. இன்னும் அவ்வரிகளில் நூற்றுக்கு மூன்று பங்கு உப்பு வரியாகும். அந்த உப்பு வரி ஏழை மக்களுக்கு ஒரு பெருஞ் சுமையாகும்.

'ராட்டையில் நூல் நூற்றல் போன்ற கிராமத் தொழில்கள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. அதனால் ஏழை மக்கள் வேறு குடிசைத் தொழில் இல்லாமல் ஆண்டு தோறும் நான்கு மாதம் சோம்பிக்கிடந்து அறிவு குன்றுகின்றனர். கிராமக் கைத்தொழில்கள் நாசம் செய்யப்படின் ஏனைய தேசங்களிலே அம் மக்களுக்கு அரசாங்கம் வேறு தொழில் தேடித்தரும். நம் தேசத்திலோ அரசாங்கம் அவ்வாறு வேறு தொழில் ஒன்றும் ஏழை விவசாயிகளுக்குத் தேடித் தரவில்லை.

'விவசாயிகளின் தலையில் இன்னும் சுமையைத் தூக்கி வைக்கும் முறையில் கடல் சுங்கமும், நோட்டுச் செலாவணியும் வகுத்து அமைக்கப்பட்டுள்ளன. நமது தேசத்தில் இறக்குமதியாகும் பொருள்களிலே பெரும்பாலானவை பிரிட்டிஷ் சாமான்களேயாம். கடல் சுங்க வரிகளுமே, வெளிப்படையாகப் பட்சபாதத்துடன் பிரிட்டிஷ் சாமான்களுக்கு நன்மை தருவனவாக விருக்கின்றன. தவிர அக்கடல் சுங்க வருமானத்தைக் கொண்டு பாமர மக்களின் வரிச்சுமையைக் குறைக்காமல் அபாரமாக செலவுக்கு இடமாகவுள்ள நிர்வாகத்தை நிலை நிறுத்துவதற்கான செலவு நடக்கிறது. நாணயமாற்று எனப்படும் பரிவர்த்தனை விகிதத்தில் கையாளப்படும் திரிசமனோ மேற்சொல்லியதைவிட இன்னும் கேள்வி முறையற்றதாகும். அதன் விளைவாக இத்தேசத்தி லிருந்து லட்சக்

கணக்கான பணம் வெளி நாடுகளுக்குக் கொள்ளை போய்விடுகிறது.

‘இந்தியாவின் ராஜீய வாழ்வோ பிரிட்டிஷ் பரிபாலனத்தின் கீழ் மிகவும் கேவலமாகும். இத்தகைய இழிநிலை இதற்கு முன் எக்காலத்திலும் இத்தேசத்திற்கு நேர்ந்ததில்லை. எந்தச் சீர்திருத்தமும் நமக்கு உண்மையான அரசியல் அதிகாரத்தை அளிக்கவில்லை. நம்மவரில் மிகவும் மகிமை வாய்ந்தவர்கள் கூட அன்னிய ஆதிக்கங் கண்டு தலை குனிய நேருகின்றது. தாராளமான பேச்சுச் சுதந்திரமும், பரஸ்பரம் நாம் கூடி வாழ்வதற்கான சங்க சுதந்திரமும் நமக்கு அளிக்கப்படாமல் மறுக்கப்பட்டுள. நமது மக்களிலே பலர் தேசப்பிரஷ்டர்களாய் வெளி நாடுகளில் வசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுளது. அவர்கள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பி வர வகையில்லை. அரசியல் துறையில் நமக்குள்ள விசேஷமான சாமர்த்தியத்தைக் கையாள வகையின்றி அது மாய்க்கப்பட்டுளது. ஜனங்களோ கிராம உத்தியோக வேலையும், குமாஸ்தா வேலையும் கொண்டே திருப்தியடைய நேர்ந்துளது.

‘ஞான மார்க்கமாகப் பார்த்தாலோ, அறிவுத் துறையில் நெடுங்காலமாக நடுநாயகம் வகித்து வந்த நம்மைத் தற்காலக் கல்வி முறை கீழே வீழ்த்தி விட்டது. அன்றியும் நமக்குக் கிடைக்கும் கல்வியில் பயிற்சி பெற நம்மைக் கட்டிப் போட்டிருக்கும் அடிமைச் சங்கிலியில் மோகம் கொண்டு கிடக்கும்படி செய்கிறது.

‘நமக்கு ஆயுதம் தரிக்க வகையில்லை. அதனால் நாம் ஆண்மையற்றவர்களாகி விட்டோம். நம்மை ஓங்க வொட்டாமல் தடுத்து, நம் தேசத்தைப்பற்றி நிற்கும் அன்னியச் சேனை நம்மை எப்பொழுதும் நசுக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. அன்னியரின் படையெடுப்பை எதிர்த்து நிற்க நம்மால் இயலாது. கள்வரும் கொள்ளைக்காரரும் கயவர்களும் நமது வீடுகளில் புகுந்து நமது மனைவி மக்களைத் தாக்கினால் அம்மனைவி மக்களைக் காக்கவும் நமக்கு வலுவில்லை என்ற எண்ணமே நமக்கு உண்டாகும்படி செய்துவிட்டது.

‘ஆதலால், மேலே சொல்லிய வண்ணம், நான்கு வகையிலும் நம் தேசத்திற்கு அனர்த்தம் விளைத்திருக்கும் ஆட்சிக்கு நாம் இனி ஒரு கணமும் உட்பட்டிருக்க முடியாது; உட்பட்டிருப்பின் அது மக்களுக்குப் பாவம் இழைத்ததாகும்; ஆண்டவனுக்கும் குற்றம் புரிந்ததாகும். எனினும் நமது சுதந்திரத்தை அடக்குவதற்குரிய திறமையான மார்க்கம் ஹிம்சையில் அன்று என்பதை நாங்கள் அறிவோம். ஆதலால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வலுவில் உதவிபுரிவதை நம்மால் கூடியவரையில் நிறுத்திக் கொள்ள நாம் நம்மைத் தயார்செய்து கொள்ளுவோம்; மேலும் வரி கொடாமை உள்பட சட்டமறுப்புச் செய்யவும் நாம் ஆயத்தமாவோம்.

‘ஆத்திரமூட்டப்பட்ட போதிலும் ஹிம்சை வழியிலிறங்காமல் அரசாங்கத்துக்கு வலுவில் உதவியாயிருப்பதை விடுத்து, வரி மறுப்பும் செய்யக் கூடுமாயின் கருணையற்ற ஆட்சி முறை ஒழிந்து போவது நிச்சயம் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டுளோம். ஆகவே பூரண சுயராஜ்யத்தை நிலை நாட்டுவதற்காக அவ்வப்பொழுது காங்கிரஸ் மஹா சபை வெளியிடும் அறிக்கையின்படி நடக்க நாங்கள் இப்பொழுது திரிகரண சுத்தியாய் தீர்மானம் செய்கிறோம்.’

வரன் தேடப்போகிற வக்கீலை

—"வருணன்"

'தை மாதம் பிறந்து விட்டது. கையிலோ செப்பாலடிக்க காசு ஒன்றுகூட இல்லை. பெண்ணுக்கோ, பதினாறு வயது முடிந்து பதினேழாவது வயது நடக்கிறது. ஊர் சிரிக்காதா இந்த வருஷமும் கலியாணம் பண்ணாவிட்டால்?' இவ்வாறெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தார் ஆபத் தோத்தாரண ஐயர்.

காலை வேளை. அப்பொழுதுதான் சூரியன், தன்னை மூடிக் கொண்டிருந்த மேகத் திரையைக் கிழித்து அப்புறப் படுத்தி விட்டு, பிரபஞ்ச நாடக மேடையில் காட்சி யளிக்கத் தொடங்கி யிருக்கிறான். வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, ஐயர் சூரிய ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறார். இன்னும் பல் துலக்கவில்லை. இருங்காவேளூர் அக்கிரகாரத்தில், அவ்வளவு சீக்கிரமாக யாரும் பல் துலக்குவது வழக்கமில்லை. அவரவருடைய வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு, வாயில் தம்பலத்தை அடக்கிய வண்ணம், முந்திய நாள் இரவு யாரார் எந்தெந்த விதமாகத் தூங்கினார்கள் என்பது முதல், இன்றைய தினம் பகல் சாப்பாட்டுக்கு என்னென்ன கறிகாய் தினுசுகள் இருக்கின்றன என்பது வரையில், உலகத்து அரசியல், பொருளாதார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ஒரு தினுசாகப் பரிசீலனை செய்து விட்டு, பிறகுதான் பல் துலக்க வாய்க்காலுக்கோ தண்ணீர்த் துறைகளுக்கோ செல்வார்கள். இவர்களுடைய சம்பாஷணைகளில் பெரிய பெரிய கலெக்டர்களெல்லாம் தவிடு பொடியாவார்கள். உலகத்தில், எந்தெந்த ஜாதி ஸ்திரீகள் அழகுள்ளவர்கள் என்பதைப்பற்றி இவர்கள் ஆராய்ச்சி செய்கிற போது, இருங்காவேளூரிலுள்ள எந்த ஸ்திரீயும் அந்தப் பக்கமாகத் தலை நிமிர்ந்து செல்ல முடியாது. இந்த மாதிரியான அக்கிராசார கோஷ்டியைச் சேர்ந்தவர்தான் நமது ஆபத் தோத்தாரண ஐயர்.

அன்று, நமது ஐயர் சம்பிரதாயமான இந்தச் சம்பாஷணையில் கலந்து கொள்ளவில்லை. வீட்டில் விவாக வயதடைந்த ஒரு பெண் இருந்துவிட்டால், அந்தப் பெண்ணைப்பெற்ற தகப்பனுக்கு கலகலத்த சம்பாஷணையேது? இராத்திரியில் தூக்கமேது? கால் செருப்புக்குத்தான் ஓய்வேது? ஆபத் தோத்தாரண ஐயர், அன்றைக்கு முந்திய நாளிரவுதான், இரண்டு மூன்று வரன்களைத் தேடிக் கொண்டு, பல இடங்களுக்குச் சென்று அலைந்து விட்டு வந்தார்.

சென்ற விட மெல்லாம் இவருடைய மரியாதைக்குத்தான் குறைவு ஏற்பட்டதே தவிர காரியசித்தி ஒன்றும் ஏற்படவில்லை.

பிள்ளையைப் பெற்றவர்கள், பெண் கேட்க வந்தவர்களிடம் முகங்கொடுத்துப் பேசுகிறார்களா என்ன இந்தக் காலத்தில்? வரதட்சணை எவ்வளவு என்று கண்டிப்பாகக் கேட்பது ஒரு புற மிருக்கட்டும். பெண்ணின் தகப்பனார் எப்படி இருக்கிறார்; எந்த ஆபீசில் எவ்வளவு சம்பளத்தில் என்ன உத்தியோகம் பார்க்கிறார் என்பன போன்ற வரலாறுகளை யெல்லாந்தானே பிள்ளை வீட்டுப் பெண்டுகள் விசாரிக்கத் தொடங்கி விடுகிறார்கள். பெண்ணின் சுபாவ மெப்படி, குடித்தனத்தை செட்டாக நடத்துவாளா என்பவைக ளெல்லாம் கூட முக்கிய மல்ல; அவள் காதிலே லோலாக்கும், கண்ணிலே கண்ணாடியும் போட்டுக் கொண்டிருக்கிறாளா? நேர் வகிடு எடுத்துக் கொள்கிறாளா அல்லது கோணல் வகிடு எடுத்துக் கொள்கிறாளா? அவளுக்கு எந்தப் புஷ்பத்திலே பிரியம்? மஞ்சள் கனகாம்பரத்திலா அல்லது நீல கனகாம் பரத்திலா? இந்த மாதிரியான சந்தேகங்கள் தான், பிள்ளை வீட்டாருக்கு ஒன்றின் பேலொன்றாய் உதிக்கத் தொடங்கி விடுகின்றன.

ஆனால் பிள்ளை வீட்டார் மட்டுந்தான் இப்படி யென்று நினைக்க வேண்டாம். பெண் வீட்டார் இதற்கு மேலேதான். பிள்ளைக்கு என்ன இருக்கிறது? பி. ஏ. வரையிலாவது படித்திருக்கிறானா? வெறுமனே படித்திருந்தால் மட்டும் போதுமா இந்தக் காலத்தில்? படித்தவர்களெல்லாருந்தான் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களே சரி; அப்படித்தான் ஏதாவதொரு வேலையில் இருந்தாலும் அது போதுமா? உத்தியோகத்திலிருந்து கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு இப்பொழுது காலட்சேபம் நடத்த முடிகிறதா? ஏதாவது சொத்து பத்துகள் இருக்க வேண்டும்; ஒரு வீடாவது சென்னையிலேயோ, அல்லது திரிசிராப் பள்ளி அல்லது மதுரை ஏதேனும் ஓர் ஊரில் இருக்க வேண்டும். ஆனால் இவ்வளவெல்லாம் இருக்கிற அந்தப் பிள்ளை ஒரு பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும்; கூடப் பிறந்தவர் சேரப் பிறந்தவர் இருக்கவே கூடாது. அவர்களோடெல்லாம் நம்மள பெண் மாரடிக்க முடியுமா என்ன? இப்படி யெல்லாந்தான் பெண் வீட்டார் கோருகிறார்கள்.

நமது ஆபத்தோத்தாரண ஐயருக்கும் இந்த மாதிரியான எண்ணங்கள் தான் இருந்தன.

'பிள்ளை, மூக்கும் முழியுமா இருந்தால் போதும்' என்பாள் ஐயர்வாளின் சம்சாரம்.

'மூக்கும் முழியும் இருந்து என்ன பண்ணுறது? வாசாலகமாகப் பேசத் தெரிய வேண்டும்; எப்படியாவது இரண்டு காசு சம்பாதிக்கத் தெரிந்தவனாயிருக்க வேண்டும்' என்பார் ஐயர்.

'நம்மள் வீட்டிலேயே இருக்கிறவனாயிருக்க வேண்டும்' என்பது பெண்கள் கட்சி.

'எங்கே யிருந்தால் என்ன? பெண்ணைப்படுத்தாமல் வைத்துக் கொண்டி

ருந்தாளானால் நல்லது' என்பது ஆண்கள் கட்சி.

இப்படியாக, ஆபத்தோத்தாரண ஐயர் வீட்டில் அடிக்கடி தர்க்கப் போட்டிகள் நடைபெறும்.

இருங்காவேளூருக்கு இரண்டு காத தூரத்தில் இந்தளாம்பேட்டை என்றொரு கிராமம். இதன் ஜமீன்தார் புஷ்ப சாஸ்திரிகள் பரம வைதிகர். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. மேற்படி ஜமீனைத் தவிர, பக்கத்துக் கிராமங்களில் சுமார் இருநூற்றைம்பது வேலி நிலம் இருக்கிறது. ரொக்கமாக ஒரு லகாரத்திற்கு மேல் இருக்கிறது. ஆனால் இவையெல்லாம் யாருக்கோ அடமானமாம். இப்படித்தான் ஊர் வதந்தி. இதில் எவ்வளவு தூரம் பொய்யும் மெய்யும் கலந்திருக்கிறதோ தெரியாது. மேற்படி புஷ்ப சாஸ்திரிகளுக்கு ஒரே பிள்ளை. மார்க்க சகாயம் என்று பெயர். சென்னை கிறிஸ்டியன் காலேஜில் பி. ஏ. வகுப்பில் படிக்கிறான். அந்த வகுப்புக்கும் இவனுக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டு. வகுப்பு, இவனை விட மாட்டேனென்கிறது; இவன் வகுப்பை விட மாட்டேனென்கிறான். இப்படியாகச் சுமார் ஐந்து வருஷ காலமாக இருவருக்கும் விடாப்பிடியாகச் சண்டை. பையனுக்கு 23 வயதுக்கு மேல் ஆகிறது. ஆனாலும் மூஞ்சி முற்றவில்லை. பார்ப்பதற்கு இளங் கன்றுக் குட்டி மாதிரி இருக்கிறான். சென்னைக் கடற்கரையோரம் ஜலத்தின் பக்கமாக அந்த நொய் மணலில் இவன் குதித்துக் குதித்து ஓடுகிற போது—எல்லாம் தேக பலம் விருத்தியாவதற்குத்தான்—நடை வண்டி பிடித்துக் கொண்டு நடை பழகுகிற குழந்தை போல் இருக்கும்.

மார்க்க சகாயத்திற்கு, அவனுடைய தகப்பனார் மாதா மாதம் இருநூறு ரூபாய் படிப்புச் செலவுக்காக அனுப்பிக் கொண்டு வந்தார். ஜமீன்தாருடைய பிள்ளையல்லவா? அந்த அந்தஸ்துக்குத் தகுந்தாற் போல் இருக்க வேண்டாமா? மாதா மாதம், இரண்டு அல்லது மூன்றாந் தேதி, மணியார்டர்காரன் வருகிற மார்க்கத்தை மார்க்க சகாயம் பார்த்துக் கொண்டிருப்பான். ஆனால் இவனுக்கு பி. ஏ. பரீட்சையில் தேறுவதெப்படி என்ற மார்க்கம் மட்டும் தெரியவில்லை.

மார்க்க சகாயத்திற்குத் தன் பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்பது ஆபத்தோத்தாரண ஐயருடைய எண்ணம். ஆனால் ஐயருடைய சம்சாரத்திற்கு அந்த இடம் அவ்வளவு பிடித்தமில்லை. ஏனென்றால் புஷ்ப சாஸ்திரிகளின் சம்சாரம்—மார்க்கத்தின் தாயார்—ரொம்ப இளையவள். இப்பொழுதுதானே நாற்பத்திரண்டு வயதாகிறது. இன்னும் எத்தனை வருஷ காலம் இருப்பாளோ தெரியாது. அவளிடம் தன் பெண் போய் எவ்வளவு காலந்தான் கஷ்டப்படுவது? ஏதோ கொஞ்சம் வயசான மாமியாராக இருந்தால், கொஞ்ச காலத்திற்குள் மூட்டையைக் கட்டிக் கொண்டு யமதரிசனத்திற்குச் சென்று விடுவாள். அப்புறம் தமது பெண் பிக்கல் பிடுங்கல் இல்லாமல் குடும்பத்தை நடத்திக் கொண்டு போகலாம். மாமனார் மட்டும் இருந்தால் பரவாயில்லை. அவர் பாட்டுக்கு ஒரு மூலையில் உட்

கார்ந்து கொண்டிருக்கப் போகிறார். அவரால் ஒரு தொந்திரவும் இராது.

இந்த மாதிரியாகத்தான் ஆபத்தோத்தாரண ஐயருடைய சம்சாரத்தின் மனப்போக்கு இருந்தது. என்ன செய்வார் ஐயர்? புஷ்ப சாஸ்திரிகளுடைய பையனைத் தவிர வேறு நல்ல வரன் கிடையாது என்று சொல்லி விட்டார் ஐயர். இராத்திரி சாப்பிட்ட பிறகு, இரண்டு பேருக்கும் தினந்தோறும் வரன் சம்பந்தமாகச் சச்சரவுகள் நிகழ்ந்து வந்தன. சில சமயங்களில் மனஸ்தாபம் முற்றிவிடும்.

'நீயே எங்கே யாவது உன் பெண்ணுக்கு இடந் தேடிக் கொள்' என்று கோபித்துக் கொண்டு ஐயர் படுக்கைக்குப் போய் விடுவார்.

'உன்னாலேதானே இந்த வசவு திட்டுகளெல்லாம்' என்று சொல்லி, ஐயரின் சமசாரம், தன் பெண்ணின் தலை மேல் ஒரு குட்டு குட்டுவாள். அவளும் விக்கி விக்கியழுது கொண்டு படுக்கப் போவாள்.

'இப்பொழுது தானே தை மாதம், பிறந்திருக்கிறது. இன்னும் நாள் இருக்கிறதே. நல்ல இடமாகப் பார்த்துப் பண்ணலாம்' என்று அம்மாள் தானே ஆறுதல் செய்து கொண்டு குறட்டை விடத் தொடங்குவாள்

ஆபத்தோத்தாரண ஐயர் வீட்டில் இந்தத் தை மாதம் பிறந்த பிறகு, தினசரி நடக்கிற உற்சவம் இது.

மதனி

வங்காளியில் ஸ்ரீசரத் சந்திர சட்டர்ஜி எழுதியது. தமிழில் மொழி பெயர்த்தவர்; ஸ்ரீ அ. கி. ஜெயராமன்; வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜார்ஜ் டவுன், சென்னை; ராயல் அளவு 1x8; 32 பக்கங்கள்; விலை, நான்கு அணா

நமது 'ஜோதி'யில் இந்தக் கதை, 'நல்ல புத்தி' என்ற பெயரைத் தாங்கி ஸ்ரீ எஸ். கிருஷ்ணன் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்திருக்கிறது. கதையின் போக்கைப் பற்றியோ, சுவாரஸ்யத்தைப் பற்றியோ 'ஜோதி' வாசகர்களுக்கு நாம் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை.

வருங்காலத்து நாகரீகம்

—வ. அ. தியாகராஜன்
M. A.

ப்ளேட்டோ என்னும் கிரேக்க அறிஞர் 'குடியரசு' (Republic) என்னும் புஸ்தகத்தில் 'நியாயம்' என்பது என்னவென்று ஆராய்ச்சி செய்கிறார். இதில் ஒருவர் 'நியாயம்' என்பது பலசாலிகளாய் இருப்பவர்கள் தம்முடைய சவுக்கியத்தையும் சுயநலத்தையும் முன்னிட்டு ஏற்படுத்தின விதி என்று சொல்லுகிறார். இதை ஸாக்ரடீஸ் என்னும் பிரபல அறிஞர் எதிர்த்து, 'நியாயம்' என்பது ஒரு தேசத்துக்கு சாந்தியைக் கொடுக்கும் நடுநிலைமை என்றும், ஒரு தேசத்தில் நியாயம் இருக்க வேண்டுமானால், அந்த தேசத்தில் தீரமும், தயையும், ஒற்றுமையும், சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட நியாயத்துக்குட்பட்ட அரசாங்கத்தை நிலைப்படுத்துவதற்கே ப்ளேட்டோ தம்முடைய புஸ்தகத்தை எழுதினார். அதன் பிறகு பல பேர் எதிர்கால வாழ்க்கையைப்பற்றிப் பல விதமாய் எழுதி இருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து நமக்குத் தெரிவதென்னவென்றால் மனிதன் பழைய காலத்திலிருந்தே வருங்கால நாகரீகத்தை முன்னேக்குகிறான் என்பது தான். இது நமக்குப் பின்னால் வருபவர்கள் நம்மை விட க்ஷேமமாய் இருக்க வேண்டும் என்று எல்லாரும் எண்ணும் பொதுவான கொள்கையிலிருந்து பிறந்ததே. இந்த விருப்பம் மனிதத் தன்மைக்கு ஏற்ற ஒரு சாதாரண விருப்பம். இந்த விருப்பத்தை முன்னிட்டு நாமும் வருங்கால நோக்குடன் சற்று பார்ப்போம். ஆனால் கடவுள் செய்த உலகத்தை விட்டு வேறே ஒரு உலகத்தைச் செய்ய வேண்டியதில்லை. நம்மெதிரில் இருக்கும் உலகத்தை இருக்கிறபடியே எடுத்துக் கொள்வோம். இதில் இருக்கும் நாகரீகங்களையும் அவற்றின் பின் நிற்கும் நாகரீக தத்துவங்களையும் கவனிப்போம். இதன் பிறகு ஏன் உலகத்தில் யுத்தம் உண்டாகிறது என்பதைக் கவனிப்போம். கடைசியாக யுத்தமில்லாத நாகரீகம் வருங் காலத்தில் எப்பொழுதாவது இருக்குமா என்றும், அப்படி இருக்குமானால் நாம் இப்பொழுதிருந்தே என்ன செயய வேண்டும் என்பதையும் கவனிப்போம்.

முதலாவது இப்பொழுது நிலவி வரும் நாகரீகங்களை எடுத்துக் கொள்வோம். இவை மூன்று விதமாய் இருக்கின்றன. முதலாவது ஜனநாயகத்தின் பெயரில் சில பணக்காரர்கள்

ஆள்வது. இரண்டாவது போர்வீரர்கள் ஆட்சி. மூன்றாவது பொது உடைமைக் கட்சி யாருடைய ஆட்சி. முதலாவது மாதிரி அரசாங்கம் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் காணப்படுகிறது. இரண்டாவது மாதிரி ஜெர்மனியிலும், மூன்றாவது ருஷியாவிலும் காணப்படுகிறது. நாம் நம்முடைய கணக்கில் சுதந்திரமாய் இருக்கும் நாடுகளை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறரால் ஆண்டு, பிறருக்காக வசிக்கும் நாடுகளை விட்டு விட வேண்டும். ஏனென்றால் பறவைகள் எப்படி வசிக்கின்றன என்று ஒருவன் தெரிந்து கொள்ள விரும்பினால், பறவைகள் சுயேச்சையாய் இருக்கும் போது எப்படி இருக்கின்றன என்று கவனிக்கிறானே யொழிய ஒரு மிருக சாலையில் பறவைகள் எப்படி வசிக்கின்றன என்று கவனிப்பதில்லை. மனிதநாகரீகத்திலும் இது போலவே. இப்படிப் பார்ப்போமானால் உலகில் மூன்று விதமான நாகரீகங்களை நமக்குக் காணப்படுகின்றன. இப்பொழுது இந்த நாகரீகங்கள் ஒவ்வொன்றுக்கும் பின்நிற்கும் தத்துவங்களைக் கவனிப்போம்.

முதலாவதாக இங்கிலாந்தில் இருக்கும் முதலாளித்துவ அரசாங்கத்தை எடுத்துக் கொள்வோம். இந்த நாகரீகம் வியாபார நாகரீகம் என்று சொல்வதில் எந்தவிதமான தடையும் இல்லை. இங்கிலீஷில் ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது 'வியாபாரத்தில் டச்சுக்காரர்களிடம் ஒரு தப்புதான்—கொடுப்பது மிகக் குறைவு. கேட்பது மிக அதிகம்' என்பதாகும். இந்த தப்பு டச்சுக்காரர்களுக்கு மட்டுமல்ல. எல்லா வியாபார நாகரீகங்களுக்குமே பொருந்தியது. இப்படிப்பட்ட நாகரீகங்களின் செழிப்பு கோபுரத்தைப்போல்மேலுக்கும் மேலுக்கும் போய்க்கொண்டே இருந்த போதிலும், நாளா வட்டத்தில் மேல் பளு அதிகமாய்க் கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்பதைச் சிறிது கவனிப்போம். வியாபாரி சுதந்திரத்தை விரும்புகிறான். அரசாங்கம் லாபம் சம்பாதிப்பதைத் தடுக்கக்கூடாது என்று கருதுகிறான். வியாபாரியின் தத்துவம் என்னவென்றால் ஒவ்வொருவனும் சுய நலத்தைக் கருதுகிறான். அதனால் ஒவ்வொருவனும் தன் சுய நலத்தை ஒருவிதமான தடையும் இல்லாமல் கவனிப்பானானால், தேசமே க்ஷேமப்படும் என்பதுதான். ஆனால் இதில் ஒரு தப்பு இருக்கிறது. அது என்னவென்றால், இப்படிப்பட்ட நாகரீகம் கெட்டிக்காரனையும் முட்டாளையும், பணம் இருப்பவனையும் பணம் இல்லாதவனையும் ஒரே நிலையில் நிறுத்துகிறது. இது பலசாலியையும் நோயாளியையும் ஒரே நிலையில் நிறுத்தி ஓட்டப்பந்தயம் விடுவதுபோல் ஆகும். இந்தப் பந்தயத்தில் ஜெயிப்பவர் சிலர். தோற்பவர் பலர். தோற்பவர் தோளின் மேல் ஜெயிப்பவர் ஏறி நின்று கொண்டு தோற்றுப்போனவர்களைத் தம்மிஷ்டம்போல் போகச்செய்கிறார்கள். இத்தகைய நாகரீகத்திலும் பல தோஷங்களை கார்ல் மார்க்ஸ் என்பவர் எடுத்துக் காட்டி இருக்கிறார். அதனால் இதைப் பற்றி அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை.

பல விஷயங்களில் இதற்கு நேர் விரோதமாய் இருப்பது ருஷியாவில் இருக்கும் பொது உடைமைக் கொள்கையாகும்.

'பொது உடைமை' என்ற உடனே,

நாம் நமது ஜேபியில் பணம் இல்லாவிட்டால் பக்கத்தில் இருப்பவன் ஜேபியிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளலாம் என்று அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. இங்கு 'பொது உடமை' என்னும் பதத்திற்குத் தனி அர்த்தம் உண்டு. எல்லாச் சொத்துக்களுக்கும் மூல தனங்களாய் இருப்பவை எல்லாருக்கும் பொதுவாய் இருக்க வேண்டும் என்பதே. சூரிய வெளிச்சத்தை எடுத்துக் கொள்வோம். இது எல்லாருக்கும் பொது. அதே சூரிய வெளிச்சத்தால் காடுகள் உண்டாகின்றன. அவை யாருக்குச் சொந்தம்! தேசத்திற்கே சொந்தம். பல கோடி வருஷங்களுக்கு முன்னால் சூரிய வெளிச்சத்தினால் உற்பத்தியான மரங்கள் நிலத்தின் கீழே முழுகிப் போய் நிலக்கரியாய் விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அந்த நிலக்கரி யாருக்குச் சொந்தம்? பொது உடமையார் சொல்வதென்ன வென்றால், அவை தேசத்திற்கே சொந்தம் என்பது தான். இங்கிலாந்து முதலிய தனி உடமையார் சொல்வதென்னவென்றால், அவை எவன் நிலத்தில் அகப்படுகிறதோ அவனுக்கே சொந்தம்; மற்றவர்களுக்கு இவற்றில் எந்த விதமான உரிமையும் கிடையாது என்பது தான். இந்த இரண்டுவித கொள்கைகளுக்கு உள்ள ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால், பொது உடமைக் கொள்கைப்படி தேசம்தான் எல்லாவற்றிற்கும் மூல காரணம் தேசத்துக்குத்தான் எல்லாச் சுதந்திரமும் உண்டு. தனி மனிதனுக்கு தேசத்துக்கு விரோதமான உரிமைகள் ஒன்றும் கிடையாது. தேசத்தை ஒரு பெரிய இயந்திரத்துக்கு ஒப்பிட்டால், தனி மனிதனை அந்த இயந்திரத்திலிருக்கும் ஒரு சிறிய சுள்ளாணிக்கு ஒப்பிடலாம். இயந்திரம் சுற்றும் விதமாகத் தானே சுள்ளாணியும் போக வேண்டும்? சுள்ளாணி மாத்திரம் எப்படித் தனியாகச் சுழலமுடியும்? இப்பொழுது இருக்கும் ருஷிய நாகரீகத்துக்கும் இங்கிலீஷ் நாகரீகத்துக்கும் ஏன் ஒருவிதமான பேச்சில்லாத மனஸ்தாபம் இருந்துகொண்டே இருக்கிறது என்பது தெரிகிறது. தனி உடமை தேசங்களில் பணம் உள்ளவர்கள், ருஷிய நாகரீகம் வேண்டாம் என்று பயப்படுகிறார்கள். பணம் இல்லாதவர்கள் ருஷிய நாகரீகம் வந்தால் பிறர் பணத்தில் ஒரு பகுதி தமக்கே வந்துவிடும் என்று தப்பு எண்ணத்துடன் ஆவலாய் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த இரண்டுவிதமான நாகரீகங்களுக்கும் ஒத்துழைப்பு அதிகமாய் இருந்தது கிடையாது. இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் ஏற்படாவிட்டாலும், ருஷியாவுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டு இருக்குமானால் இங்கிலாந்து மிகவும் விசனப்பட்டு இராது என்று சொல்லலாம்.

ஏன் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டு இருக்கக் கூடும் என்பதை நாம் இப்போது கவனிப்போம். ஹிட்லரின் 'எனது போராட்டம்' என்னும் சுயசரித்திரத்தைப் படிப்பவர்கள் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஹிட்லர் இந்தப் புஸ்தகத்தில், 1870ல் ஜெர்மனி பிரான்சுடன் யுத்தம் செய்தது தப்பு என்றும், அதற்குப் பதிலாக ருஷியாவுடன் போராடி ருஷிய தேசத்தைக் கைப்பற்றி ஜெர்மானியரை அங்கே குடியேறச்செய்திருக்கவேண்டும் என்றும்

எழுதி யிருக்கிறான். மறுபடியும் பல இடங்களில் இவன் இத்தாலியை அவமதித்தும், இங்கிலாந்தைப் புகழ்ந்தும் எழுதி இருக்கிறான். இன்னும் பல இடங்களில் என்றைக்கு ஜெர்மனியும் ருஷியாவும் ஒன்று சேருமோ அன்றைக்கே ஜெர்மனி அழிந்துவிடும் என்றும் எழுதி இருக்கிறான். இவன் கிழக்கே போய் ருஷியாவுடன் யுத்தம் செய்யாமல் ஏன் மேற்கு மூலைச் சுவற்றில் மோதிக் கொள்கிறான் என்று கேட்கலாம். இதற்கு இரண்டு விடைகள் உண்டு. முதலாவது எல்லாம் கால தேவதையின் லீலை என்று சொல்லி விடலாம். வாழ்க்கையில் முக்கால் பாகம் சீட்டு; கால்பாகம் ஆட்டம். கையில் சீட்டு வந்தபடியே தானே ஆட்டம் ஆட வேண்டும்? ஒருவன் சமுத்திரத்தில் நீந்துவதற்கு இறங்கினால், இவன் ஒரு புறம் போக விரும்பினால், அலை இன்னொரு புறம் இழுத்துப் போகலாம். இது ஒரு காரணம். இரண்டாவது ஜெர்மானிய இத்தாலிய தேசங்களின் நாகரீகக் கொள்கைகளே காரணம், நாஜீயம் சில விஷயங்களில், இங்கிலாந்திலிருக்கும் நாகரீகத்தையொட்டி இருக்கிறது. இருவரும் முதலாளித்தனம் இருக்க வேண்டும் என்றும், பொது உடமை கூடாது என்றும் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால், இன்னொரு விஷயத்தில் ஜெர்மானிய நாகரீகமும் ருஷிய நாகரீகமும் ஒத்து இருக்கின்றன. அது எதில் என்றால் 'அரசாங்கமே முக்கியம்; தனிமனிதன் ஒரு தேசத்திலுள்ள அணுவைப் போலவேதான்; இவனுக்கு உரிமைகள் தேசத்தின் நன்மைக்காகவே யொழிய இவனுக்காக இல்லை.' என்பதிலாகும். அரசாங்கத்தை ஒன்று என்று வைத்துக் கொள்வோம். ஜனங்கள் அதற்குப் பின் வரும் பூஜ்யங்கள் போல். பூஜ்யங்களுக்குத் தனி மதிப்பு ஏது? ஆனால் எவ்வளவுக் கெவ்வளவு பூஜ்யங்களை அதிகரிக்கிறோமோ, அவ்வளவுக்கு அவைக்கு முன் நிற்கும் எண்ணிக்கைக்கு மதிப்பு அதிகம். இப்பொழுது நாஜீய அரசாங்கத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு அதன் மதிப்பு என்னவென்பதைக் கவனிப்போம். நாஜீயம் போர் வீரர்களால் ஆளப்படுகிறது. இந்தப் போர் வீரர்கள் சென்ற யுத்தத்தில் தோல்வி யடைந்த அவமதிப்பு இவர்களால் பொறுக்க முடியவில்லை. யுத்தத்தின் பிறகு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை இவர்களை மிகவும் புண்படுத்தி விட்டதாகவும், பழைய தப்புகளை சரிப்படுத்துவதற்காக இவர்கள் இப்போது சண்டை போடுவதாகவும் இவர்கள் உலகத்துக்கெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஐரோப்பிய நாடகமேடையில் இப்போது மூன்று விதமான கொள்கைகள் எதிருக்கெதிர் நிற்கின்றன. அவையே முதலாளித்துவம்; நாஜீயம்; மார்க்ஸீயம் அல்லது பொது உடமைக் கட்சி. இந்த எதிர்ப்பினால் வருங்காலத்து நாகரீகம் எப்படிப் பட்டதாயிருக்கக் கூடும்? இரண்டு கட்சியார் போர் புரிந்தால், யார் ஜெயிப்பார், யார் தோற்பார் என்று சொல்லலாம், மூன்று பேர் ஒருவர்க்கொருவர் எதிர் நிற்பாரானால் இம்மூன்றில் இருவர் ஒன்றாய்ச் சேரும் வரை ஒன்றுமே நடக்காது. இதன் பிறகு எந்த இருவர் ஒன்றாய்ச் சேர்கிறார்களோ அவர்கள் வெற்றியடைவார்கள். எப்படி ஒரு முக்கோணத்தில் எந்த இரண்டு பக்கங்

களை எடுத்துக் கொண்டாலும், அவை இரண்டும் சேர்ந்து மூன்றாவது பக்கத்தைவிட நீளமாய் இருக்குமோ அப்படியே அரசாங்க விஷயங்களிலும் இதே விதிதான். யுத்தத்தில் ஜெயிக்கும் தேசத்தின் நாகரீகம் வருங்காலத்தில் உலகத்தின் நாகரீகமாய்ப் பரவும்.

கடைசியாக வருங்காலத்து நாகரீகம் யுத்தமில்லாத நாகரீகமாய் இருக்குமா வென்பதைக் கவனிப்போம். இப்பொழுது கால தேவதை ஆட்டிவைக்கும் நாடகம் துயிரமாகி நாடகமாய் முடியுமா அல்லது சந்தோஷமாய் முடியுமா என்று கேட்கலாம். இதற்குப்பதில் யாரால் சொல்ல முடியும்? ஆனால் ஒன்றுமாத்திரம் சொல்லலாம். சரித்திரத்தை ஒரு நாடகத்திற்கு ஒப்பிட்டோம். நாடகங்களில் என்ன நடக்கிறது? ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும், ஹார்டி என்பவர் எழுதிய நவீனங்களிலும் ஒரு ஸ்திரீ இரண்டு புருஷர்களிக்கிடையிலாவது ஒரு புருஷன் இரண்டு ஸ்திரீகளுக்கிடையிலாவது இருந்தால் கதை எப்படி முடிகிறது? ஒதெல்லோ நாடகம் எப்படி முடிகிறது? ஆனால் சரித்திர நாடகம் இப்படியே முடியும் என்பதில்லை. சில நாடகங்களில் கடைசி காட்சியில் நான்காவது புருஷன் ஒருவன் தோன்றுகிறான். அப்பொழுது நாடக பாத்திரங்கள் இரண்டிரண்டாய்ப் பிரிந்து விடுகிறார்கள். இரண்டு ஸ்திரீகளும் இரண்டு புருஷர்களும் இருக்கும் நாடகங்களில், கடைசி காட்சியில் இரட்டைக் கலியாணம் நடைபெறுகிறது. சரித்ர நாடகம் சந்தோஷமாய் முடிய வேண்டுமானால் நான்காவது புருஷன் வேண்டும். சேம்பர்லின், ஹிட்லர், ஸ்டாலின் மூவரே இருந்தால் போதாது. புது விதமான நாகரீகமும், அதன் தலைவனும் இதில் ஈடுபட வேண்டும். பழைய யுத்தத்தில் வில்ஸன் ஈடுபட்டதுபோல் இதிலும் புதிய மனிதன் ஒருவன் ஈடுபடவேண்டும். அப்படிப்பட்ட புருஷன் யார்? நமக்குத் தெரிந்த வரையில் காந்தி என்றே தோன்றுகிறது. காந்தி, யுத்தமே கூடாது என்றும், எல்லாச் சச்சரவுகளையும் சமாதானத்தால் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார். அதனால் உலகம் காந்தீயத்தை வழிபடும் வரை உலகத்தில் க்ஷேமம் ஏற்படாது என்றே சொல்லலாம். வருங்காலத்து நாகரீகம் அதிகமாய் காந்தீயத்தை ஒட்டி இருக் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால் பிற நாகரீகங்கள் தங்களுடைய வகுப்பு, தேசம் முதலிய சிறிய கொள்கைகளை முதற் படுத்தி இவற்றிற்காகப் பெரிய கொள்கைகளை இழந்தன. காந்தீயம் மனிதனை முக்கியம் என்றுக் கொள்கிறது. "தர்மமே ஜயம்" என்று நாம் நினைக்கும் வரை, காந்தீயத்திற் கழிவில்லை. தர்மமானது காலம், இடம், பொருள் இவைகளில் பற்றில்லாமல், இவைகளைத் தன்னுடைய கருவிகளாக உபயோகிக்கிறது.

வருங்காலத்து நாகரீகம் காந்தீயத்தையே கைப்பற்ற வேண்டுமானால், நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனிப்போம். காந்தீயம் யுத்தமில்லாத நாகரீகத்தை நமக்குக் கொண்டு வருமானால், யுத்தம் ஏன் ஏற்படுகிறது என்பதையும் சற்று கவனிப்போம். மனித சமூகத்தில் யுத்தம் ஏற்படுவது இயற்கையில் பூகம்பம் ஏற்படுவதற்கு ஒப்பிடலாம். பூகம்பம் ஏன் ஏற்படுகிறது? நமது

தரைக்கடியில் ஏதோ தப்பு இருக்கிறது. நாளா வட்டத்தில் இந்தத் தப்பு அதிகமாகி நமது கீழிருக்கும் தரை உடைந்து போகிறது. அது போலவே அரசாங்க விஷயங்களிலும். மற்றொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நூல் உருண்டை சிக்காய் விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நாம் என்ன செய்கிறோம்? முடிந்த வரை சிக்கை அவிழ்க்கப் பார்க்கிறோம். முடியா விட்டால் நூலை அறுத்து விடுகிறோம். அது போலவே அரசாங்க விஷயங்களில் ராஜதந்திரிகளால் முடியாதது போர் வீரர்கள் கையில் போய் முடிகிறது. ஒரு தேசத்தின் வாழ்க்கை, சிக்கல் இல்லாமல் இருக்க முடியுமா?

இயற்கையில் புரட்சி இருந்து கொண்டே இருக்கிறது. சில, சிறிய சிறிய புரட்சிகளாய் கண்ணுக்குத் தெரியாமலே நடந்து கொண்டு வருகின்றன. மற்றவை பெரிய புரட்சிகளாய் நாளா வட்டத்தில் நடைபெறுகின்றன. நமது தேசத்திலேயே இப்படிப்பட்ட புரட்சிகள் நடக்கின்றன. நாம் மூச்சுவிடும் போதெல்லாம், கெட்டுப் போனது வெளியே போய் நல்லதாய் இருப்பது உள்ளே வருகிறது. இந்தப் புரட்சி சிறிய சிறிய அணுக்களாய் இருப்பதால் நமக்குத் தெரிவதே இல்லை. ஆனால் நாம் வாரத்துக் கொருமுறை நகத்தைக் கத்தரிப்போமானால் இது பெரிய புரட்சியாகும். இது போலவே அரசாங்க விஷயங்களிலும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வகையினானே; வழுவல' என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான விதி. வாழ்க்கையில் புரட்சி ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். அதனால் ஏற்படும் மாறுதலால் உண்டாகும் கெடுதிகளை அப்போதுக் கப்போதே நீக்கா விட்டால், அவை ஒன்று சேர்ந்து 50 அல்லது 100 வருஷங்களுக் கொரு முறை பெரிய புரட்சியாய்த் திரண்டுவரும். அதனால் நாம் அறிவது என்ன வென்றால் புரட்சியின் காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றை அடிக்கடி நீக்கிவிட வேண்டும். அரசாங்கம் எவ்வளவுக் கெவ்வளவு தனி மனிதனுடைய முக்கியத்துவத்தை கவனிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, இது, புரட்சியின் காரணங்களைசில்லரையாய் அறுத்து விடுகிறது. தனி மனிதன் தன் பாகத்தில், தான் பொது நன்மைக்காக இருக்கிறான் என்று தானே அறிந்து, தன்னுடைய ஒவ்வொரு நடத்தையிலும் பொது நன்மையைப் பாதிக்கக்கூடியவற்றை நீக்கி விட்டு எல்லோருடனும் ஒத்து வாழக் கற்றுக் கொள்வானானால் யுத்தமில்லாத உலகத்தில் நாம் வாழலாம். இதே, வாழ்க்கையில் யுத்தமில்லாத வெற்றி. மனிதன் அறிவிலும் அன்பிலும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு வருங்காலத்து நாகரீகம் க்ஷேமமானதாய் இருக்கும். ஆனால் வருங்காலத்து நாகரீகம், கடியாரத்தின் மணி அடித்துக் கொண்டு ஒருநாள் காலை நமக்கு வந்து சேரும் என்று எண்ண வேண்டியதில்லை. வருங்காலத்து நாகரீகம் நிகழ்காலத்து நாகரீகத்தின் பலன். நிகழ் காலத்திலேயே நாம் சிக்கல்களுக்குக் காரணத்தைப் போக்கிவிட்டால், வருங்காலத்து நாகரீகத்துக்கு நாமே காரணமாவோம் என்பதில் சந்தேகம் இல்லை.

வேனிற் கால வெயிலோ னுதயம்.

வித்துவான். கா. ப. வேங்கட கிருஷ்ணன்

தடத்து ளொருபாற் றாமரை மலர
ஆம்ப லணிமல ரொருபாற் குவியக்
கொழுநரைக் கண்ட குலமகள் களிப்பும்
அவரை யகன்ற வரிவைய ரவலமும்
அவனிக் கெந்த மறிவுறக் காட்ட,

காக்கை குடம்பையிற் காகா வென்ன,
கோழிச் சேவல கொக்கோ கொட்ட,
கூ கூ வென்றே குயிலொலி கூட்ட,
பல்வகைப் புள்ளொலி பரந்தெங் குமெழ,
குளத்துட் பெரியோர் குடைந்து நீராடிக்

கோதிலா னாமங் குழைந்திடக் கூற,
அணிமனை மகளி ரமளி நீத்துப்
பங்கய முகமொடு பதமுங் கரமுஞ்
செவ்விதின் விளக்கிச் சேமங் கோரி
உதய ராக முவப்புடன் பாடி

வெள்ளிய பொடியால் வீதி விளக்க,
வானம் பாடி வாழ்த்தொலி செய்ய,
உழவ நுழுபடை தோளிற் சுமந்து
காளை யோடுங் கழனிக் கேக,
கன்று தனைவிட்டுக் காராக் கறந்து

பாற்குடத் தோடும் பாவையர் போத,
நுண்டுளி கெழுமிய நுவலும் மென்கால்
சிலுசிலு வென்று செழுமை யூட்ட,
புல்லி னுனியிற் பொலியு முத்தின்
தண்பனித் துளிகள் தகையுடன் விளங்க,

இல்லந் தோறுந் நல்லான் கூட்டி
ஆயர் கோலுட னார்வந் தோற்றச்
சீழ்க்கை யடித்துச் செழும்புனஞ் சேர,
பாதிரி புன்னை பாரி சாதம்
இன்மண நறுமல ரெங்கு மிறைக்க,

இருளை விழுங்க வருணன் விடுக்க
இருநீ ரெழுந்த வெரியின் கோளமோ!
என்றே யாவரு மெதிர்கொண் டிறைஞ்சச்
செங்கரம் விரித்துச் சேயொளி பரப்பி
வேனிற் கால வெயிலோன்
துணைகடற் றோன்றுவன் கூறுங் காலே.

லெனினைப் போலவே காந்தி

—ஸ்ரீமதி கிளாரா ஷெரிடன்

உருவத்திலே சிறிய, ஆனால் உயர்விலே பெரிய மஹாத்மா காந்தியை நேரில் சந்திக்காதவர்கள் யாரும் அவருடைய பெருமையை சரியாகத் தெரிந்து கொள்ள முடியாது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவரைப் பற்றி வேண்டுமென்றே திரித்துக் கூறுகின்றன. அவரைப் பற்றிய செய்திகள் சரியானபடி பத்திரிகைகளில் வெளி வருமானால் சர்வாதிகாரிகளைப் பற்றி வெளியாகும் செய்திகளையொத்ததாகவே இருக்கும். உலகத்து மஹா ஜனங்கள் ரேடியோவைத் திருப்பி வைத்து விட்டு யாரோ ஒருவருடைய பேச்சைக் கேட்டு அச்சமுறுவதையோ, திடுக்கிடுவதையோ விட்டு மஹாத்மா காந்தியின் உயரிய உண்மைத் தத்துவங்களைக் கேட்டு சாந்தியடைந்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. உண்மைகளை எவ்வளவு தெளிவாக அவர் எடுத்துக் கூறுகிறார்! மனித வாழ்க்கையின் லட்சியத்தை எவ்வளவு அழகாக அவர் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்! அவரிடத்தில் துவேஷமோ, பலாத்கார எண்ணமோ கிடையாது.

ஒரு சமயம் லார்ட் லண்டன்டெரி* என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது 'காந்தி நம் எல்லோரையும் துவேஷிக்கிறாரில்லையா?' என்று கேட்டார்.

ஒரு தனிப்பட்ட மனிதரையோ, ஒரு ஜனசமூகத்தையோ அவரால் துவேஷிக்க முடியும் என்று நினைப்பவர்கள் அவரைப்பற்றித் தவறாக அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் நான் சொல்லுவேன்.

வட்ட மேஜை மஹாநாடு நடைபெற்ற காலத்தில் அவரை நெருங்கிப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய சிநேகிதை ஸ்ரீமதி சரோஜினி தேவியின் மூலமாக காந்தியைப் போல் உருவச்சிலை அமைக்கும் சந்தர்ப்பமும் எனக் கிடைத்தது. அது சுலபமான காரியமாகவும் இருக்கவில்லை. அவர் ஓரிடத்தில் பொறுமையாக உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டார். அது, தன்னடக்கத்தினாலேயோ, அதிக வேலையினாலேயோ, அல்லது சித்திரக் கலையில் அவருக்கு ஆர்வம் இல்லாததினாலேயோ அல்லது மூன்றும் சேர்ந்

* இவர் பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவராயிருந்தவர்—1935.

தோ என்ன காரணத்தினாலேயோ நான் உருவச்சிலை வரைவதற்கு அனுகூலமாக என் எதிரில் உட்கார்ந்து கொள்ள மறுத்து விட்டார். அப்பொழுது லெனினுடைய ஞாபகம் எனக்கு வந்தது. 1920ம் வருஷம் லெனினுடைய உருவச் சிலையைச் சமைக்கும் பொருட்டு நான் ருஷ்யாவில் க்ரெம்லின் என்ற அவருடைய வாசஸ்தலத்திற்குச் சென்றேன். அவரும் இதே போல் தான் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க மறுத்து விட்டார். இந்த இரண்டு பேரும் பலாத்காரத்தை மதிப்புப் போடும் வகையில் வித்தியாசப்படலாம். ஆனால் இருவரும் லட்சிய புருஷர்கள்.

முதன் முதலாக மஹாத்மாவிடம் போய் 'நான் உங்கள் உருவத்தை வரைய வேண்டும். கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று சொன்னேன். அவர் லெனின் சொன்னது போலவே 'உங்களுக்காக நான் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது. நான் என் பாட்டுக்கு வேலை செய்து கொண்டிருப்பேன். உங்கள் திறமையைக் காட்டி நீங்கள் சித்திரம் வரைந்து கொள்ளலாம்.' என்று சொன்னார்.

காந்தி தரையிலே உட்கார்ந்து கொண்டு கைராட்டினம் சுற்ற ஆரம்பித்தார். லெனினோ தமது உத்தியோக நாற்காலியில் படித்துக் கொண்டிருந்தார். இந்த இரண்டு பேருமே நான் உருவச்சிலை சமைப்பதில் வெறுப்புக் காட்டினவர்கள் போல் இருந்தார்கள். ஆனால் பின்னர் இருவரும் என்னிடம் அதிக நட்புக் காட்டினார்கள். ஒரு நாள் காந்தி லெனினைப் போலவே பரிகாசமாகச் சிரித்து 'ஓ! வின்ஸ்டன் சர்ச்சிலுடைய சகோதரியா தாங்கள்' என்றார்.

ஒரே மாதிரியான பரிகாசப் பேச்சுதான். சர்ச்சிலின் உறவினர் ஒருவர் அவருடைய பரம சத்துருவுடன் சிநேகம் கொள்வதா! மேற் கண்ட வாக்கியத்தைச் சொல்லி விட்டு, மேலும் அவர் கூறினார்:—அவர் (சர்ச்சில்) என்னைப் பார்க்க மறுக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆனால், உங்களைப் பார்க்க நான் எவ்வளவு சந்தோஷ முள்ளவனாயிருக்கிறேன் என்பதை அவரிடம் தெரிவிப்பீர்களா?'

இதே மாதிரிதான் லெனினும் 'உங்களுடைய சகோதரரிடம் சொல்லுங்கள்' என்று சொன்னார்.

லெனினுடைய தலைப் பாகத்தையும் காந்தியின் தலைப்பாகத்தையும் செய்து முடித்து விட்டு முறையே, 'இந்த உருவ அமைப்பைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று இருவரையும் கேட்டேன். இரண்டு பேரும் ஒரே விதமான பதிலைத்தான் சொன்னார்கள்:—'எனக்குத் தெரியாது. என்னுடைய முகத்தைப்பற்றி நானே தீர்ப்புக் கூற முடியாதல்லவா? சித்திரக் கலையைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனால் நீங்கள் நன்றாக வேலை செய்திருக்கிறீர்கள்.'

இந்த இரண்டு மகா புருஷர்களில் யார், உலகத்தில் தங்கள் வாழ்க்கையின் முத்திரையை அதிகமாக இட்டுச் செல்வார்கள் என்பதைப் பற்றி நான் சில சமயங்களில் சிந்திப்பதுண்டு. ருஷ்யாவைப்

பொறுத்த மட்டில் லெனின் எவ்வித மான முத்திரையையும் இட்டுச் செல்லவில்லை யென்றுதான் தெரிகிறது. அவருடைய ஸ்தூலதேகம் மட்டுந்தான் ஒரு கண்ணாடிப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் விஷயத்தில் இவ்வளவு சீக்கிரமாகத் தீர்ப்புக்கூறிவிடவும் முடியாது. கிறிஸ்தவ தர்மம், ஜனங்களுடைய மனதில் படிய இருநூறு வருஷங்களுக்கு மேலாயிற்றல்லவா?

காந்தியோ, இன்னும் சுறு சுறுப்பாக வேலை செய்கிறார். அவருடைய உழைப்பு, இப்பொழுதுதான் பலனளித்துக் கொண்டு வருகிறது.

இந்த இரண்டு மகா புருஷர்களும், உலகத்திற்கு, அழியாத ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தான் என் அபிப்பிராயம். பிறரால் புறக் கணிக்கப்பட்டவர்களும், மனஞ் சோர்ந்து போனவர்களும் இவர்களுடைய செய்திகளைக் கேட்டு உற்சாகம் பெறுகிறார்கள்; தலை குனிந்தவர்கள் தலை நிமிர்ந்து பார்க்கிறார்கள்; உலகத்தில் தங்களுக்கும் ஒரு ஸ்தானம் உண்டு என்ற தன்னம்பிக்கையைப்பெறுகிறார்கள்.

காந்தியின் உபதேசத்தில் ஒருவித பாரமார்த்திகம் ஒளிர்கிறது. இதனால் அந்த உபதேசம் மகத்துவமடைகிறது.

லெனினுடைய இயக்கத்துக்காக மடிந்தவர்களை வீரர்களென்னலாம்; காந்தியின் இயக்கத்திற்காக மடிந்தவர்களை வீரர்களாகவும் தியாகிகளாகவும் போற்ற வேண்டும்.

காந்தியின் தலைப் பாகத்தை மட்டும் உருவஞ்சமைத்த ஜோ டேவிட்ஸன் என்ற அமெரிக்க சித்திரக்கலைஞரோடு நான் சம்பாஷித்திருக்கிறேன். அவர் உலகத்துப் பிரபலஸ்தர்களையெல்லாம் உருவமமைத்திருக்கிறார். இந்தப் பெரிய மனிதர்களையெல்லாம் முதலில் சந்திக்கிற போது 'இவ்வளவுதானா?' என்ற அலட்சிய புத்தி ஏற்படும். ஆனால் காலியாகப்போன அரண்மனைகளின் பின்னணியாக வைத்து அவர்களைப் பார்க்கிறபோது அவர்களுடைய பெருமை நன்குபுலப்படும். ஆனால் காந்தியோ, எல்லா மஹா புருஷர்களைக் காட்டிலும் பெருமையுடையவராக எனக்குத் தென்படுகிறார். முழங்கால் வரையில் ஆடையுடுத்திக் கொண்டு மேலுக்கு சால்வை போர்த்திக் கொண்டு மிக எளியவராகக் காணப்படும் காந்தியினிடத்தில் நிரம்பிய பெருமை யிருக்கிறது. அவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரிடத்தில் நமக்கு ஒருவித பக்தி ஏற்படுகிறது. அவரை விட்டு நாம் பிரிகிறபோது அவர் கைக்கு நான் முத்தம் கொடுத்தேன். என்னை அவர் ரொம்ப நேசிப்பதாகவும், நண்பர்களைத் தாம் எப்பொழுதும் மறப்பதில்லை யென்றும் அவர் கூறினார்.

சம்மணம் கட்டிக்கொண்டு கைராட்டையில் நூல் நூற்பது போன்ற அவருடைய உருவம் என் மேஜையை அலங்கரிக்கிறது. உண்மையில் அவர் நூல் நூற்பதிலேதான் கவனம் செலுத்துகிறார். ஆனால் புத்தரைப் போல்தான் அவர், அந்த உருவத்தின் மூலமாக எனக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் லண்டனில் தங்கியிருந்த போது அவருடைய வாசஸ்தலம் ஒரு தனி உலகமாகவே இருந்தது. பிரதி தினமும் காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை பல பேருக்கு பேட்டியளித்து அன்புடன் பேசிக் கொண்டிருப்பது அவர் வழக்கம். அனைவரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இனிமையாகவும் ஆனால் கண்டிப்பாகவும் அவர் பதில் கூறி வந்தார். நீண்டநேரம் தங்கி அநாவசியமான கேள்விகளைக் கேட்டு தொந்திரவு செய்கிறவர்களை அவர் மரியாதையாக வெளியேற்றியும் வந்தார். பல நாட்டினர், பல மதத்தினர் அவரை வந்து பார்த்தனர். எல்லோருக்கும் நகைச் சுவை ததும்பிய ஆனால் கருத்தடங்கிய சிறிதுகூட பொறுமையிழக்காமல் பதில் சொல்லி வந்தார் மகாத்மா. ஒரு சமயம் ஒரு நண்பர் வந்து 'மகாத்மாவே, தாங்கள் அமெரிக்காவுக்கு எப்பொழுது வரப்போகிறீர்கள்?' என்று கேட்டார். 'இப்பொழுது இல்லை' என்றார் மகாத்மா. 'உங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எங்கள் எல்லோருக்கு மிருக்கிறதே' என்றார் அந்த நண்பர். காந்தி அதற்கு கண் சிமிட்டிக் கொண்டு புன்னகையுடன் 'நான் அங்கு வந்தால் என்னை மிருகக் காட்சி சாலைக்கன்றோ கொண்டு போய் விட்டுவிடுவார்கள்' என்றார். அங்கிருந்தோரனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். இந்தச் சமயத்தில் சி. எப் ஆண்ட்ரூஸ் அங்கு வந்து அடுத்த நாள் காந்தியடிகள் கவனிக்க வேண்டிய விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாவற்றிற்கும் சரி, சரி என்றார் காந்தி. 'இன்று மாலை நிகழ்ச்சியை மறந்துவிடப் போகிறீர்கள். பாதிரிமார்கள் உங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்களல்லவா? சரியாக ஏழு மணிக்கு லண்டன் பிரதம பாதிரியும் உங்களைச் சந்திக்க வருகிறார்' என்றார் ஆண்ட்ரூஸ். 'அப்படியானால் மாலைப் பிரார்த்தனையை என்ன செய்வது?' என்றார் காந்தி. அதற்கு ஆண்ட்ரூஸ் 'அதை முன்னேயாவது செய்து முடித்து விட வேண்டும்; அல்லது பின்னுக்காவது தள்ளி வைத்துக் கொள்ளலாம்' என்றார். 'அதெல்லாம் முடியாது. போகிற போதே மோட்டார் வண்டியில் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு விடுவோம்' என்றார் மகாத்மா கண்டிப்பாக.

ஒரு நாள் மாலைப் பிரார்த்தனை நடந்து கொண்டிருக்கையில் எங்களைப் பார்த்து காந்தி சொன்னார்:—'உங்களில் யாருக்காவது விடியற் காலை 3 மணி பிரார்த்தனைக்கு வரவிருப்பமிருந்தால் தாராளமாக வரலாம். ஆனால் அவரவர்களும் தங்கள் கம்பளிப் போர்வைகளைக் கொண்டு வர வேண்டும். இங்கு நாங்கள் எல்லோரும் ஏழைகள்.' அப்படியே ஒரு நாள் நான் அவருடைய வாசஸ்தலத்திற்கு காலைப் பிரார்த்தனைக்காகச் சென்றேன். மீராபாய் எனக்கு வழி காட்டி வேண்டியன உதவி புரிந்தார். வழக்கம் போல் பிரார்த்தனை நடந்தது. காந்தி ஒரு சிறு விரிப்பின் மீது உட்கார்ந்து கொண்டு பிரார்த்தனையை நடத்தினார். அப்பொழுது ஏதோ ஒரு கனவு உலகத்தில் இருப்பதாக நான் எண்ணினேன். பிரார்த்தனை முடிந்ததும் நான் மறுபடியும் தூங்கப்போய் விட்டேன். சரியாக ஐந்து மணிக்கு

மீராபாய் என்னை வந்து எழுப்பினார். ஏனென்றால் அதுதான் காந்தி உலாவப்போகும் சமயம். அவருடன் நெருங்கிப் பேசுவதற்கு நல்ல சந்தர்ப்பம். எனக்கும் அவருடன் தனியாகச் சம்பாஷணை செய்ய வேண்டுமென்ற ஆசை. நல்ல மூடுபனி. வேறு யாருக்கும் இந்த சீதோஷ்ண ஸ்திதி ஒத்துக்கொண்டிராது. ஆத்ம சக்தியுள்ள ஒருவரால்தான் இந்த சீதோஷ்ண ஸ்திதியைத் தாங்கிக் கொண்டிருக்க முடியும். எனக்கோ முதல் நாளிரவு தூக்கமில்லை. மிகவும் சோர்ந்து கிடந்தேன். ஆயினும் காந்தியைப் பின் தொடர்ந்து நடந்தேன். ஆனால் காந்தியோ மிகவும் வேகமாக நடந்தார். நானும் மற்றவர்களும் பின்னால் ஓட வேண்டியதாயிற்று. அவரைச் சதா நிழல் போல் தொடர்ந்து வந்து கொண்டிருந்த துப்பறியும் உத்தியோகஸ்தர்களோ மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க ஓடிக் கொண்டு வந்தனர். முன் பின் அறியாத வழியில் எவ்வளவு வேகமாகச் சென்றார் காந்தி! அவர் போகிற வழி அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. மீராபாயோ, என்னை முன்னுக்குத் தள்ளி, 'அவருடன் பேசு, பேசு' என்று கூறினார். அவருடன் நான் என்ன பேசுவது? அவருடன் கூடயிருப்பதனாலேயே நமக்கு ஒருவித சாந்தி யேற்படுகிறது. அவருடைய பக்கத்தில் இருந்து கொண்டு தியானிப்பதிலேயே நிம்மதி ஏற்படுகிறது.

அவரைச் சந்தித்து இப்பொழுது ஏழு வருஷங்களுக்கு மேலாகின்றன. அந்தச் சந்திப்பு இப்பொழுதும் ஒரு கனவு போல் என் மனக் கண் முன் உலவிக் கொண்டிருக்கிறது. அந்த பாக்கியம் மீண்டும் கிடைக்காதா என்ற ஆவல் ஏற்படுகிறது. அவருடைய சந்திப்புக்குப் பிறகு நான் ஒரு புதிய சக்தி பெற்றவளாயிருக்கிறேன்.

இந்தியாவில் பார்க்க வேண்டிய விஷயங்கள் மூன்றுதான். அவை முறையே ஹிமாலயமலை, தாஜ்மகால், மகாத்மா காந்தி.

—ஓர் அமெரிக்க அறிஞர்

பண்டித மதன்மோகன் மாளவியா

ஜனனம் 1861

—"ஒரு காங்கிரஸ்வாதி"

மகாத்மா என்ற கௌரவத்தைப் பொதுஜனங்கள் காந்தியடிகளுக்கு வழங்கினார்கள். ஆனால் காந்தியடிகளோ, பண்டித மதன்மோகன் மாளவியாவுக்கு 'தர்மாத்மா' என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறார். இதனால், காந்தியடிகள் இவரிடத்தில் எவ்வளவு மரியாதை செலுத்துகிறார் என்பது நன்குபுலப்படுகிறது. அலஹாபாத் 'லீடர்' என்னும் பிரபல மிதவாதப் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ சி. ஒய். சிந்தாமணி, மாளவியாவைப் பற்றிக் கூறுகிறபோது, 'மாளவியா ஜீக்கு உடம்பு முழுவதும் இருதயமாகவே இருக்கிறது' என்று வர்ணனை செய்தார். அதாவது அவ்வளவு விசாலமான இருதயமுடையவர் என்று அர்த்தம்.

மாளவியா குடும்பத்தின் முன்னோர்கள், ஆதியில் மாளவ தேசத்திலிருந்து அலகாபாத்துக்கு வந்து குடியேறியவர்கள். இவர்கள் சமஸ்கிருதத்தில் மகா பண்டிதர்கள். நமது மாளவியாவின் பூஜ்யபிதாவான பண்டித வ்ரஜநாதர், வடமொழியில் பெரிதும் விற்பத்தியுடையவர். இவர் சில சமஸ்கிருத நூல்களையும் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட மஹா வித்துவானுடைய புத்திரராக மதன் மோகனர், அலகாபாத்தில் 1861ம் வருஷம் டிசம்பர் மாதம் 25ந் தேதி ஜனனமானார். அப்பொழுது அலஹாபாத்தில் சமஸ்கிருத பாஷையை அனைவருக்கும் கற்பித்து வந்த தர்மவர்த்தனி சபை பாடசாலையில் பாலியத்தில் இவர் கல்வி பயின்றார். பின்னர் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலில் சேர்ந்து படித்து, 1871ம் வருஷம் கல்கத்தாவில் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பின்னர் அகமதாபாத்தில் படித்து பி. ஏ. பரீட்சையில் தேறி, எம். ஏ க்குப்படிக்கத் தொடங்கினார். ஆனால் தொடர்ந்து படிக்க முடியாமல் பாதியில் நிறுத்தி விட்டு, அலகாபாத் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலிலேயே மாதம் ஐம்பது ரூபா சம்பளத்தில் ஓர் உபாத்தியாயராக வேலைக்கமர்ந்தார். இப்படி வேலை பார்த்துக் கொண்டிருக்கிற போது, காலாகங்கார் சமஸ்தானத்து அரசரான ராஜா ராம்பால் சிங் என்பவர்,

'ஹிந்துஸ்தான்' என்ற ஓர் ஆங்கில தினசரிப் பத்திரிகையைத் தொடங்கினார். அதற்கு மாதம் ரூபா 250 சம்பளத்தில் நமது மாளவியா ஆசிரியராகப் போயமர்ந்தார். இவருடைய அறிவு ஆற்றல் முதலியன வற்றைக்கண்ட இவருடைய நண்பர்கள், இவரை வக்கீல் பரீட்சைக்குப் படிக்குமாறு கூறினார்கள். பத்திரிகைத் தொழிலைப் பார்த்துக் கொண்டே இவர், வக்கீல் தொழிலுக்கும் படித்துக் கொண்டு வந்தார். அதில் தேறி, 1893ம் வருஷம் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். நல்ல வழக்குகள் இவர் கைக்கு வந்தன. அவற்றில் திறமையாக வாதாடி வெற்றி பெற்றார். இதனால் பண வருவாயும், பொதுஜன அபிமானமும் இவருக்குக் கிடைத்தன. ஆனால் பண வருவாயை இவர் முக்கியமாகக் கருதாமல், பொதுஜன சேவையையே முக்கியமாகக் கொண்டாடினார்.

சிறப்பாக, இவர் இளைஞர்களுடைய கல்வி அபிவிருத்தியிலேயே அதிக சிரத்தை காட்டினார். 'அலஹாபாத் இலக்கியக் கழகம்' என்ற ஒரு ஸ்தாபனத்தையும், 'ஹிந்து சமாஜம்' என்றதொரு ஸ்தாபனத்தையும் இவர் ஸ்தாபித்து, அவை மூலமாக, கல்வித் துறையிலும், ஹிந்து தர்மத்தைப் புனருத்தாரணம் செய்யும் வகையிலும் உழைத்து வரலானார். 1886ம் வருஷம் கல்கத்தாவில் இரண்டாவது காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் கூடியது. அந்தக் காங்கிரஸுக்குத் தான் முதன் முதலாக இவர் விஜயஞ் செய்தது. அது முதற் கொண்டு, ஏறக்குறைய எல்லாக் காங்கிரஸ்களுக்கும் இவர் விஜயஞ் செய்து வந்திருக்கிறார். இவர் பேசுவதில் மகா சமர்த்தர். எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டு பேசினாலும், கேட்பவர்கள் மனதில் பதியும்படி பேசுவார். வடமொழி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் வாசாம கோசரமாய்ப் பேசுவார்.

அரசியலில், மாளவியாவை மிதவாதி என்றே அனைவரும் அழைப்பர். ஆனால் காங்கிரஸை விட்டு எப்பொழுதும் பிரிந்ததே கிடையாது. சூரத் காங்கிரஸிற்குப் பிறகு, தீவிர வாதிகள் காங்கிரஸை பகிஷ்கரித்திருந்த காலத்திலும், பின்னர் மஹாத்மா காந்தியின் ஆதிக்கம் காங்கிரஸில் ஏற்பட்ட பிறகு மிதவாதிகள் அதனைப் பகிஷ்கரித்த போதும், மாளவியாஜீ மட்டும் காங்கிரஸைப் புறக்கணித்ததே கிடையாது. தவிர, அரசாங்கத்தை எதிர்க்கிற போதும், சில சமயங்களில் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகத்தான் நடந்து கொள்ள வேண்டியிருந்தால் அந்தச் சமயங்களிலும் இவர் தயை தாட்சண்யமின்றித் தமது அபிப்பிராயங்களைச் சொல்லி வந்தார். மகாத்மா காந்தி, ஒத்துழையா இயக்கம் தொடங்கிய காலத்திலும், உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலத்திலும், இவர் அதில் பூரணமாக ஈடுபட்டு சிறைத் தண்டனையும் அடைந்தார்.

இவர் ஹிந்துதர்மத்தின் புனருத்தாரணத்திற்காக அரியபாடுகள் பட்டிருக்கிறார். தீண்டாமையை பலமாக எதிர்க்கிறவர் இவர். தாழ்ந்த வகுப்பினரில் பலருக்கு மந்திர தீட்சை செய்து வைத்திருக்கிறார். பூணூலும் தரிக்கச் செய்திருக்கிறார். வட இந்தி

யாவில் ஹிந்துக்களின் அதிநாயகனாக இவர் போற்றப்பட்டு வந்திருக்கிறார்.

இவருடைய சிறந்த தொண்டு, காசியில் ஹிந்து சர்வகலாசாலையை ஸ்தாபித்ததுதான். இதற்காக இவர் ஆரம்பத்திலிருந்து அநேக கஷ்டங்களை அடைந்திருக்கிறார்; எண்ணரிய தியாகங்களைச் செய்திருக்கிறார். சுதேச மன்னர் பலரிடம் பிட்சா பாத்திரம் ஏந்திச் சென்று லட்சக் கணக்கில் பணம் வசூல் செய்திருக்கிறார். இப்பொழுது இந்தியாவின் பெருமையை, கலங்கரை விளக்கம் போல் உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது இந்தச் சர்வகலாசாலை.

ஹிந்தி பாஷை, இந்தியாவின் ராஷ்ட்ரபாஷையாக வேண்டுமென்பதில் இவர் மிகவும் சிரத்தை கொண்டவர். ஹிந்தி இலக்கியம் மேன்மேலும் செழித்தோங்குவதற்கு இவர் பெரிதும் உழைத்திருக்கிறார். இவருடைய முயற்சியால்தான், அலகாபாத்தில் 'பிரயாகை சாஹித்ய சபை' என்றொரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. 1908ம் வருஷம் 'அப்யுதயம்' என்ற பத்திரிகையை இவர் ஆரம்பித்து வைத்தார். இப்பொழுது அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. 1910ம் வருஷம் 'மரியாதை' என்ற மாதப் பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தினார். 'லீடர்' பத்திரிகை தோன்றியதற்கும் இவரே முக்கிய காரணராயிருந்தார்.

காங்கிரஸுக்கு இரண்டு முறை தலைமை வகித்த கௌரவம் பண்டித மாளவியாவுக்கு உண்டு. 1901ம் வருஷம் லாகூரில் கூடிய காங்கிரஸுக்கும் 19 8ம் வருஷம் டெல்லியில் கூடிய காங்கிரஸுக்கும் இவர் தலைமை வகித்துச் சிறப்பாக நடத்தினார்.

இவர், இப்பொழுது தமது மூப்பின் காரணமாக, ஹிந்து சர்வகலாசாலை வேலையிலும் பொதுஜன சேவையிலும் அதிகமாக ஈடுபட்டுக் கொள்ள முடியவில்லை. ஆயினும் இவரை இந்திய மகாஜனங்கள் பக்தி சிரத்தையோடு போற்றி வருகிறார்கள்.

பண்டித மாளவியா நீடூழி வாழ்க!

ரோமாபுரியிலுள்ள போப்பரசருக்கு ஏராளமான கடிதங்கள் வருகின்றன. இவற்றைக் கவனிக்க முப்பத்தைந்து காரியதரிசிகள் தேவையா யிருக்கின்றன.

வயிரத்தைப்பற்றிய வரலாறுகள்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

நவரத்தினங்களுள் வயிரமணியே மிகப் பிரதானமாகக் கொண்டாடப்படுகிறது. வயிரத்தைப் பரிசிலனை செய்துபார்த்த ரசாயன சாஸ்திரிகள் கால்காசும் பெறாத நிலக்கரியே ஒளிபெற்றுக் காலக்கிரமத்தில் விலைமதிக்கவும் முடியாத வயிரமணியாய்த் திகழ்கின்றதென்கிறார்கள். தெய்வீக அமைப்பு இருக்குமாறு என்னே! உலோகங்களுள் கடினத்திலும் சுடர் பெற்று விளங்குவதிலும் வயிரமணி இணையற்றதாகும். வயிரத்தைப்பற்றிய குணகுணங்கள்தொன்றுதொட்டே நம்மவர்களுக்குத் தெரிந்திருப்பதாகக் கருத வேண்டியிருக்கிறது. இந்திரனுடைய ஆயுதத்துக்கு 'வஜ்ராயுதம்' எனப்பெயர் வழங்குவதே இதற்குச் சான்றாகும். வயிரமணி நிலககரியின் அம்சம்தான் என்பது நம்மவர்களுக்குத் தெரியாமலில்லை. கருட புராணத்திலும், மஹா புராணத்திலும், 'ப்ருஹத்ஸம்ஹிதையிலும்', 'ஜ்யோதிஷ ஸம்ஹிதையிலும்' வயிரத்தைப்பற்றிய வரலாறு சிறிதளவு தெரியக்கிடக்கின்றது. மகா பராக்ரமம்பெற்ற வலாசூரன் என்னும் கொடிய அரக்கன் இந்திரனுடைய கபடவேண்டுகோட்கிணங்கியாகப் பசுவானபோது அவனுடைய தேகத்திலிருந்து வயிரம் உண்டானதென்று புராணவாயிலாய்த் தெரிகிறது. ததீசி மகா முனிவர் இறக்க அவரது எலும்பிலிருந்து வஜ்ராயுதம் உண்டானதென்று இன்னொரு வரலாறு கூறுகிறது. அளிக்கும் கடவுளாகிய ஸ்ரீ மகா விஷ்ணு அணிந்திருக்கும் கௌஸ்துபமணியும், கண்ணபிரானது சியமந்தகமணியும் இணையிலா இரண்டு வயிரமணிகளன்றோ?

வயிரத்தைப்பற்றிய குறிப்புகள் நமது பாரத மக்களிடமிருந்தே கிரேக்கர்களும் ரோமர்களும் கற்றிருக்க வேண்டும்.

எகிப்தியருடைய நாகரிகமும் பாபிலோனியர்களுடைய நாகரிகமும் நமது இந்தியாவின் புராதன நாகரிகத்துக்கும் பழைமையானதாகும் என்று அறியாதார் சொல்வார்கள். எகிப்தை ஆண்டு வந்த 31வது பரம்பரை 'பரோவா' (Pharoah) அரசர்களுள் ஒருவராவது வயிரமணி அணிந்திருந்ததாகச் சொல்லப் படவில்லை. பாபிலோன் தேச சரித்திரத்திலும் சுமார் 40 நூற்றாண்டுகள் வரை வயிரமணியைப்பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 327 வருஷங்களுக்கு முன்னர் அலெக்

சாக்தர் சிந்து நதிப் பிரதேசத்தைத் தாண்டி எதிர்க்க வந்த காலத்துக்குப் பிறகே கிரேக்கர்களுக்கு வயிரமணியைப் பற்றிய விபரம் தெரிய வந்ததாகும். ரோம ராஜ்யம் அதிகச் செல்வாக்குடன் விளங்கிய காலத்திலும் ரோமாபுரியிலிருந்த செல்வந்தர்களிடம் வயிரமணி இருந்ததாகத் தெரியவில்லை. பைஜண்டினர் முன்னேற்ற காலத்திற்கும், இத்தாலியர் கடற்படை ஸ்தாபித்து ராஜ்யாதிகாரம் செலுத்திய காலத்திற்கும், ஸ்பெயின் தேசத்தை மூர்ஸ் (Moors) ஜயித்த காலத்திற்கும் பின்பே மேல்நாட்டினர்க்கு வயிரமணியைப் பற்றிய விபரம் தெரியவந்து அவர்களால் ஒரு சிறிது கொண்டு போகப்பட்டது என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

மேனாட்டு நூல்களில் வயிரத்தைப் பற்றிய முதலாவது குறிப்பு கிறிஸ்து பிறந்த 16-வது வருடத்தில் வெளியேறிய (Manilus) மணிலஸ் என்னும் நூலில்தான் காணப்படுகிறது. அதற்குப் பின்னர் நூறுவது ஆண்டிலிருந்த (Pliny) பிளினி என்பவர் வயிரத்தைப் பற்றிக் கூறும் பொழுது 'இது மிகவும் அருமையான மணி; ரத்னங்களுள் சிறந்தது; அரசர்களுக்கே உரியது' என எடுத்துக் காட்டியிருக்கிறார். அவருக்குப் பின் வந்த ரோம ஆசிரியர்கள் நமது இந்தியாவில் இன்னின்ன நதிகளில் வயிரம் கிடைக்கும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சுரங்கங்களில் மட்டுமன்றி வயிரம் நதிக்கரையோரத்திலேயும் பெரும்பாலும் கிடைத்து வந்ததாகவும் தெரிய வருகிறது.

பூமியிலிருந்து எடுக்கப்படும்போது இயற்கையில் வயிரத்துக்கு அவ்வளவு சுடர் காணப்படுவதில்லை. பழுப்பு நிறமும், மஞ்சள் நிறமும், வெண்மைச் சாயலும் கொண்ட வயிரங்களே சாதாரணமாகக் கிடைக்கக் கூடியவை; சிவப்புச் சாயலும், பச்சைச் சாயலும் ஊதாச் சாயலும், கறுப்புச்சாயலும் கொண்ட வயிரம் கிடைப்பது அருமையாகும். இவற்றுள் மஞ்சள் சாயல் கொண்ட வயிரங்களே விலை சகாயமாகக் கிடைக்கக் கூடியவை. சுத்த வெண்மையும் ஊதா சாயலும் கொண்ட வயிரங்களே அதிக விலை மதிப்பு பெறத்தக்கவைகளாகும்.

ஸர் வில்லியம் குரூக்ஸ் என்னும் பெயர்போன ரசாயன சாஸ்திரி வயிர மணிகளுக்கு மிகுதியான உஷ்ணம் கொடுப்பதினால் அவைகளின் இயற்கையான சாயலை மாற்ற முடியும் என்று சில வருடங்களுக்கு முன் காட்டினார். ஆனால் சூடு தணிந்தும் இயற்கையான சாயல் திரும்பவும் வந்து விடுவதாயிற்று. மங்கலான மஞ்சள் சாயல் கொண்ட வயிரக்கல் ஒன்றை ரேடியம் புரோமைட் (Radium Bromide) உடன் சுமார் இரண்டு மாதம் வரை ஒன்றுபட வைத்திருந்ததின் பயனாய் நல்ல ஊதா சாயல் கொண்ட வயிர மணியாக அது மாறிற்றாம். 1797ம் வருடத்தில் 'ஸமித்ஸன் டெனன்ட்' (Smithson Tennant) என்பவரே வயிர மணி, நிலக்கரியின் அம்சமாகும் என்பதை மேனாட்டில் நிரூபித்து நிலைநாட்டியவர்.

இயற்கையில் வயிரத்துக்கு ஒளி மங்கியிருக்கும் என்பதை முன்னரே

குறிப்பிட்டுள்ளோம். மணியை சதுரக்கோணல்களாகவோ உருண்டைக் கோணல்களாகவோ அதற்கேற்பட்ட விதமாய் சாணையிலேற்றி உருவமாக்கி மெருகுகொடுத்த பிறகே நன்றாகப்பிரகாசிக்கின்றது. 'மார்ஸ்' (Morse) என்னும் துரைமகன் இன்னின்ன விதமான கற்களுக்கு இன்னின்ன விதமான கோணல்கள் கொண்டுள்ளதாகச் செய்தால் ஒளி பெருகி ஜ்வலித்து நிற்கும் என்று ஏற்படுத்தியுள்ள வரையறுப்பே இப்போது பெரும்பாலும் கையாளப்பட்டு வருகிறதாம். இந்தப் பயிற்சி நம்முன்னோர்களுக்கும் தெரிந்ததே. தற்காலத்தில் 'ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) என்னும் ஊரில்தான் இந்தப் பயிற்சி பெரும்பாலும் இருந்து வருகிறதென்னலாம். அங்கு யூதர்களே அதைத் தொன்று தொட்டுக் கையாண்டு வருகிறார்கள். லண்டனிலும், ஆண்ட்வர்ப்பிலும், பாஸ்டனிலும் அடுத்தபடியாக இந்தத் தொழில் நடந்து வருகிறது.

வயிரம் ஏராளமாகக் கிடைக்கப்பெறும் இடங்கள்.—இந்தியாவில் புராதன காலந்தொட்டு 19-வது நூற்றாண்டு வரைக்கும் வயிரம் ஏராளமாகக்கிடைத்திருக்கிறது. 18-வது நூற்றாண்டில் தென் அமெரிக்காவில் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் அங்கேயும் கிடைத்து வருவதாயிற்று. மூன்றாவதாக, 1870ம் ஆண்டிலிருந்து தென் ஆபிரிக்காவே வயிரம் தருவதில் முதன்மையாய் விளங்கி வருகிறது ஆகவே பழமையான பெயர் போன வயிர மணிகள் இந்தியாவின் சொத்துக்களேயாம்.

இந்தியாவில் ஸிம்லா பிரதேசமும், காங்க்ரா பள்ளத்தாக்குமே வயிரத்துக்குப் பெயர் போனவைகளாயிருந்தன. அதற்குப் பின் பெண்ணாற்றங்கரையிலிருக்கும் கடப்பைக்குப் பக்கத்திலுள்ள சென்னூர் என்னும் இடமும், கர்நூல் ஜில்லாவும், பெஜவாடா பக்கத்திலுள்ள கொல்லார் என்னும் இடமும், மத்திய மாகாணத்தில் மகா நதிக்கரையோரமாயுள்ள ஸம்பல் பூர் என்னும் இடமும், அலஹாபாத்துக்குச் சமீபமான பன்னா என்னும் இடமும், வயிரமீயும் பிரதேசங்களென்று தெரிவதாயிற்று. 1638 முதல் 1665ம் வருடங்கள் வரைக்கும் பலமுறை நமது தேசத்திற்கு டாவர்னியர் (Tavernier) என்னும் பிரபல பிரெஞ்சு ரத்ன வியாபாரி விஜயம் செய்துள்ளார். அவர் எழுதிவைத்திருக்கும் குறிப்புகளுள் அக்காலத்தில் இந்தியாவின் வயிரச் சுரங்கங்களில் 60,000 கூலியாட்களுக்கு மேலேயே வேலை செய்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு ஒரு காலத்தில் ஒப்பிலா வயிரமணிகளுக்கு உற்பத்திஸ்தானமாயிருந்த நம் பாரத பூமியில் தற்சமயம் வயிரம் கிடைப்பது அரிதாகிவிட்டது. எவ்வளவு பரிதாபம்! யார் செய்த புண்ணியத்தினாலோ 1881-ம் வருடத்திலும் பல்லாரி ஜில்லாவில் பிரசித்தமான வயிரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாம். அந்த மணியின் பெயர் 'கார்டோ நார்' என்பதாம். வயிரத்தினுடைய ஒப்புயர்வற்ற கடினத் தன்மையினால் அதன் உபயோகங்களும் பலவாயின. வயிரத்தைக் கொண்டுதான் வயிரத்தைத் தேய்க்க முடியும்! இதர ரத்னங்களும் வயிரத்தினாலேயே அறுக்கப்படுகின்றன. கண்ணாடி முதலிய

கடினபதார்த்தங்களை அறுப்பதற்கும் வயிரம்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் முக்கியமாக ஆபரணங்களுக்கு உதவுவது போல அது வேறெதற்கும் பயன்படுவதில்லை.

உலகம் பூராவும் உபயோகத்திலிருக்கும் வயிரமணிகள் சுமார் 46,355,474 காரட்டுகள் இருக்கக் கூடும் என்று ஒரு நிபுணர் கணக்கிட்டிருக்கிறார். அதாவது மொத்த எடை சுமார் 12½ டன்; அதாவது 23,520 ராத்தல். இந்த எல்லா வயிரமணிகளையும் ஒரு குவியலாக்கினால் அடிப்பாகம் 8 அடியும் மேல்பாகம் 5 அடியும் கொண்ட குவியலாகுமாம். ஆகவே, சராசரியில் காரட் ஒன்றுக்கு விலை 300 ரூ வீதம் விலை மதித்துப் பார்த்தால் ஏறக்குறைய 1,400 கோடி ரூபாய் மதிப்பாகிறது. ஆனால் இப்போது நடமாடும் விலை வீதம் பார்த்தால் இன்னும் அதிகப்படும்.

உலகத்திலுள்ள எல்லாரைக் காட்டிலும் வயிரங்களைப் பெருவாரியாகத் தற்போது வாங்கி வருவது அமெரிக்காவில் உள்ள ஐக்கிய மாகாணங்களே. சில வருடங்கள் வரைக்கும் தென் ஆபிரிக்கா சுரங்கங்களிலுண்டான வயிரத்தில் 100க்கு 60 வீதம் அமெரிக்கா வாங்கி வந்தது. சமீபத்தில் நடந்த யுத்தத்தின் காரணமாக அதற்கேற்பட்ட செல்வப் பெருக்கினால் அது இவ்வளவு அதிகமான வயிரங்களை வாங்கியதாகச் சொல்லப்படுகிறது. உலகத்தில் கிடைக்கக் கூடிய வயிரங்களில் 100க்கு 98 வீதம் உற்பத்தி செய்து வருவது தென் ஆபிரிக்காவேயாம். தென் ஆபிரிக்காவிலுள்ள வயிரங்களின் விலை மதிப்பு சுமார் 405 கோடி ரூபாயிருக்கலாம் என்பதாக ஒருவர் கணக்கிடுகிறார். ஒரு தேசத்தின் செழிப்பு வயிரமணி வியாபாரத்தால் அறியலாம் என்று ஒருவர் சொல்கிறார். வயிரமணி மன்னாதி மன்னர்கள் அரண்மனைகளிலும், மிகப் பெரிய செல்வந்தர்கள் வீட்டிலுமே முன்பு காணலாகும். ஆனால் தற்காலத்தில் அது சாதாரண ஜனங்களிடத்திலும் காணப்படுகிறது. அதிகமாக இல்லாமற் போனாலும் தமது சக்திக்கேற்ப ஒரு சிறு வயிர ஆபரணமேனும் மிகப் பலர் வாங்கி வருவது சகஜமாகி விட்டது.

மற்ற மணிகளைப் போலவே வயிரத்தினிடத்தும் பல அருமைக்குணங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அணிபவர்க்குச் சுபமுண்டாகும். விஷஜந்துக்கள் அணுகா, நோய் பிடிக்காது, அணிபவரை நீடூழி வாழச் செய்யும், என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். கணவனையும் மனைவியையும் ஒருமித்து உவந்து வாழச் செய்யவும் வல்லது இது என்கிறார்கள். நன்மைகள் இவ்வாறாக, வயிரத்தினால் உண்டான களவுகள் எண்ணில; கொலைகளும் மிகப்பல; யுத்தங்களும் பல; சிந்தின இரத்தப் பெருக்கும் கொஞ்சமன்று.

உலகில் தொன்று தொட்டுப் பேர் பெற்ற வயிரங்கள் இந்திய மணிகளே என்று முன்னமேயே குறித்திருக்கிறோம். அவைகளுள் ஒரு சில பிரபல மணிகளைப் பற்றி இங்கு எடுத்துக் கூறுவது அவசியம். இந்து தேச சரித்திரத்தை உற்று நோக்குவார்க்கு பரம்பரையாய் மாளவ தேசத்தரசரிடம் இருந்து வந்த 'கோஹினூர்' என்னும் வயிரமணி

யை, 1304-ம் வருடத்தில் சுல்தான் அல்லாவுதீன் என்பவர் அக்காலத்து மாளவ தேசத்து அரசரைப் போரில் தோற்கடித்த பின் தம்மதாக்கிக் கொண்டாராம். பிறகு 1526ம் வருடத்தில் பேபர் குமாரரான ஹுமாயூன் சுல்தான் அல்லாவுதீனை வென்று அம்மணியைக் கைப்பற்றினாராம். பிறகு அவுரங்கசீப் அரசரான காலத்தில் தம்மிடமிருந்த பெயர் போன மயில் ஆசனத்தில் மேற்படி கோஹினூர் மணியை மயிலின் ஒரு கண்ணாகச் செய்து வைத்துக் கொண்டாராம். பின்னர் 1731ம் வருஷத்தில் அவுரங்க சீப்பின் வமிசத்தினரான மகம்மது ஷாவை நாதர்ஷா வெற்றி கொள்ளவே, மகம்மதுஷா மேற்படி கோஹினூர் மணியை பத்திரமாக எடுத்து, சத்துருவுக்குத் தெரியாமல் தமது தலைப்பாகையில் ஒளித்து வைத்துக் கொள்ள, நாதர்ஷா அதையறிந்து, அக்கால மரியாதைக் கேற்பப் பரஸ்பரம் தலைப்பாகையை மாற்றி நாதர்ஷா மகம்மது ஷாவுடன் சமாதானமாகி அருஞ் சூரியப் பிரகாசம் பெற்ற அந்த மணியை தம்மதாக்கிக் கொண்டனராம். அதன் ஜோதிரொளியைக் கண்டதும் நாதர்ஷா 'கோஹினூர்' (தீபமலை) என வியப்புடன் மொழிந்தாராம். அப்போதிருந்து அந்த மணிக்கு இந்தப் பெயர் உண்டாயிற்றும். நாதர்ஷாவின் சந்ததியாரிடமிருந்து, ஆப்கானிய சக்ரவர்த்திக்கும், மற்றுமுள அரசர்கள் வசமும் கைமாறி மாறிக் கடைசியில் பஞ்சாப் அரசனை ரஞ்சித் சிங்கிடம் அது வந்தது. 1849ம் வருடத்தில் பஞ்சாப் மாகாணம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் சேர்த்துக் கொள்ளப்படவே, கோஹினூர் மணி, 1850ம் வருஷத்தில் லண்டன்மா நகரில் பெரிய பொருட்காட்சி ஒன்றை நடத்திய போது இந்த மணி மேனாட்டார் யாவருக்கும் காட்டப்பட்டது. அதன் பிறகு லண்டனில் அதன் உருவம் மாற்றப்பட்டு அங்கிருந்து இங்கிலாந்து மன்னரின் மகுடத்தில் விளங்கும் மணியாயிருந்து வருகிறது. ஆனால் அதன் பூர்வ உருவம் பல தடவையினும் பலராலும் மாற்றப்பட்டே வரப்பெறுவதாயிற்று எனச் சொல்கிறார்கள். இப்போது அது 125 காரட்டுகள் எடை கொண்டதாயிருக்கிறது. மதிப்பு சுமார் 0 லட்சம் ரூபாய் என்னலாம்.

'பெரிய மொகல்' என்பது இன்னொரு பிரசித்தமான வயிரம். அதன் எடை சுமார் 280 காரட்டுகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அது இப்போதிருக்கும் இடம் தெரியக்கூட வில்லை. ஒரு வேளை பெர்ஷியா (Persia) அரசரிடமிருக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது. 'ஆர்லாப்' (Orloff) என்னும் இன்னொரு மணி மைசூரிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்தில் இந்து கோவிலின் ஒரு விக்கிரகத்தின் கண்ணாய் விளங்கி வந்ததென்றும், 105 காரட்டுகள் எடை கொண்டதென்றும், அதை மைசூர் யுத்த காலத்தில் ஒரு பிரெஞ்சு சிப்பாய் களவாடிக் கொண்டு போக, அவனிடமிருந்து ஒரு கப்பல் தலைவன் திருப்பிக் களவாடியதாகவும், அவனிடமிருந்து ருஷியா சக்ரவர்த்தி சுமார் 13½ லட்ச ரூபாய்க்கு வாங்கியதாகவும் சொல்லப்படுகிறது. 'ரீஜண்ட்' (Regent) என்பது 410 காரட்டு கொண்ட இன்னொரு பிரசித்தமான வயிரம். அது இந்தியாவிலிருந்து

1701ம் ஆண்டில் கொண்டு போகப்பட்டு பலருடைய கைமாறி இப்போது பிரெஞ்சு அரசாங்கத்தாரிடம் இருந்து வருகிறது; மதிப்பு சுமார் 75 லக்ஷம் ரூபாய். 'ஸான்ஸி' (Sancy) என்னும் இன்னொரு இந்திய வயிரமானது மேனாட்டு அரசர்கள் பலருடைய கைமாறி 1865ம் வருடத்தில் பம்பாயிலுள்ள ஸர் ஜம்செட்ஜி ஜீஜீபாய்க்கு விற்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதர பிரசித்தமான இந்திய வயிரங்களாவன:—(1) கோல் கொண்டாவில் எடுக்கப்பட்ட 'பெரிய மேஜை' (Great Table), (2) டாஜிமா, (3) நாஸக், (4) எயூஜினி சக்ரவர்த்தினி (Empress Eugenie (இப்போது 51 காரட் கொண்ட இந்தக் கல் பரோடா சக்ரவர்த்தியிடம் இருக்கிறதாம்). (5) அக்பர் ஷா, (இதுவும் பரோடா சக்ரவர்த்தியினிடமுள்ளது). (6) நைஜாம் என்னும் இன்னொரு வயிரம் ஹைதராபாத் நவாபிடம் இருக்கிறது. (7) 'பிகாட்' (Pigott) என்பது 82 காரட் கொண்டது; 4½ லட்சம் ரூபாய் மதிப்புள்ளது.(8) 'வெள்ளை சாக்ஸன்' (The White Saxson) (9)ஸ்டார்ஆப்எஸ்டி, (10) ஈஜிப்ட் பாஷா முதலானவைகளாம். தென் அமெரிக்காவில் எடுக்கப்பட்ட பிரபல வயிரங்களில் 'ஸ்டார் ஆப் ஸவுத்' (Star of the South) ஒன்றாகும். அது 1853ம் வருடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் கல் பரோடா சக்ரவர்த்தியால் 120 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டு அவரிடம் இருந்து வருகிறது.

தென் ஆப்பிரிக்காவில் எடுக்கப்பட்ட வயிரங்களில் முக்கியமானவைகளாவன:—(1) ஸ்டார் ஆப் ஸவுத் ஆபிரிக்கா, (2) ஸ்டீவர்ட், (3) போர்டர் ரோட்ஸ், (4) விக்டோரியா (5) டிப்பனி (Tiffany), (6) யக்ஸல்ஸியர். 'விக்டோரியா' என்னும் மணியானது 40 லட்சம் ரூபாய்க்கு ஹைதராபாத் நவாபினால் விலைக்கு வாங்கப்பட்டு அவரிடம் இருந்து வருகிறது. 1905ம் வருடம் வரைக்கும் உலகில் கண்டு பிடிக்கப்பட்ட வயிரங்களிலெல்லாம் 'எக்ஸெல்ஸியர்' பெரியது எனக் கருதப்பட்டு வந்தது. அது 971 காரட்டுகள் முதலில் எடை கொண்டிருந்தது. ஆனால் அதை பின்னால் 10 துண்டுகளாகச் செய்து விட்டார்கள். ஆனால் உலகிலுள்ள வயிரங்களிளெல்லாம் பெரிதானதும் வெகு தூய வெண்மை கொண்டதுமான கல் 1904ம் வருடத்தில் டிரான்ஸ் வாலில் ஒரு தென் ஆபிரிக்கா கூலியால் கண்டெடுக்கப்பட்ட 'கூலினன்' வயிரமணியேயாகும். கூலினன் வயிரமணியானது 53 தோலாவுக்குமேல் எடை கொண்டுள்ளதாயிருந்தது. தென் ஆபிரிக்காக்காரர்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு 1907ம் வருடத்தில் இங்கிலாந்து சக்ரவர்த்தியாகிய எட்வர்ட் அரசருக்குப் பரிசாய் கொடுக்கப்பட்டது. அது 1908ம் வருடத்தில் 9 பெரிய கற்களாக வெட்டப்பட்டு அரசவம்சத்தார் வசம் இருந்து வருகிறது. அந்தத் துண்டுகளில் முதல் துண்டும் இரண்டாவது துண்டுமே இப்பொழுது தெரிந்திருக்கிற வயிரமணிகளுக்கெல்லாம் பெரியவைகளெனக் கொண்டாடப்பட்டும் நீரோட்டமும் சுடரும் மிகுந்து ஒருவித மாசும் இல்லாமல் இணையற்றதாய் விளங்கி வருகின்றன. அதில் பெரிய முதலாவது துண்டு 516½ காரட்டும் இரண்டாவது 309 காரட்டும் எடை கொண்டுள்ளதாம்.

சில 'இஸம்'கள்

—ஜீ. இ.

இப்பொழுது ஐரோப்பாவில் நடைபெறுகிற போராட்டமானது, கொள்கைகளின் போராட்டமென்று சொல்லப்படுகிறது. இந்தக் கொள்கைகளின் தத்துவங்கள் தானென்ன வென்பதைச் சுருக்கமாகத்தெரிந்து கொள்வோம்.

கம்யூனிஸம் (பொதுவுடமை)

இப்பொழுது பொதுவுடமை என்று எந்தத் தத்துவத்தைப்பற்றிக் கூறுகிறோமோ அதனை கார்ல் மார்க்ஸ் என்ற அறிஞன் சென்ற நூற்றாண்டின் மத்தியில் சிருஷ்டித்தான். எல்லாச் சொத்துக்களும் கொள்ளைப் பொருள்தான் என்பது ரூஸோ என்ற பிரெஞ்சு அறிஞனின் கருத்து. இந்தத் தத்துவத்தையே விஸ்தரித்துக்கொண்டு போனான் மார்க்ஸ். உலகத்தில் குவிகிற பணமனைத்தும் தொழிலாளர்களாலேயே உண்டாக்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொழிலாளியோ, அவனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளுடனேயே திருப்தியடைய வேண்டியவனாகிறான். ஒரு தேனீயானது தேன் அனைத்தையும் கூட்டில் சேகரிக்கிறது. ஆனால் அந்தத் தேனை தேனீ அநுபவிப்பதில்லை; யாரோ அநுபவிக்கிறார்கள். அதைப்போலத்தான் தொழிலாளியின் நிலைமையும் இருக்கிறது. எனவே, பணமானது ஒரு சிலரிடமே சென்று போயடைகிறது. எனவே, இந்த முதலாளித்துவ முறை நடைமுறையில் இருக்கும் வரை, ஜன சமுதாயத்தின் பெரும்பாலோர் வறுமையினால் வருந்திக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

முதலாளிகளுக்குள் அடிக்கடி போட்டி ஏற்படுகிறது. இந்தப் போட்டி காரணமாக இவர்கள் உற்பத்திச் செலவுகளைக் குறைக்கப்பார்க்கிறார்கள் இதற்காக, தொழிலாளர்களின் கூலி விகிதத்தை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் குறைத்து விடுகிறார்கள்.

முதலாளிகள் எப்பொழுதும் லாபத்திலேதான் கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள். எனவே, அவர்கள் லாபந்தரக் கூடிய பொருள்களையே உற்பத்தி செய்வார்கள்; ஜனங்களுக்கு எது தேவையென்பதைக் கவனித்து அதை உற்பத்தி செய்யமாட்டார்கள். இதனால் தேவையான சரக்குகள் இல்லாமற் போகின்றன. அவைகளுக்கு கிராக்கியும் ஏற்பட்டு விடுகிறது.

பொருளுற்பத்திக்கு மூலாதாரமான மூலப்பொருள்கள் எங்கெங்கே

யிருக்கின்றன வென்று தேடுவதிலும் அவைகளைத் தங்கள் சுவாதீனப் படுத்திக் கொள்வதிலும் முதலாளி கள் போட்டி போடுகிறார்கள். இத ஞல் யுத்தங்கள் ஏற்படுகின்றன.

பொருளுக்குடையவன் முதலாளி. அவனுடைய ஸ்தானத்தில் தொழி லாளியை வைத்து விட்டால், இந்தத் துன்பங்களெல்லாம் தீரும் என்கிறான் ருஸோ. ஏனென்றால் லாபஞ் சம்பா திக்க வேண்டுமென்ற எண்ணம் இல் லாமற் போகிறதல்லவா? லாபத்திற் காகப் பொருள்களை உற்பத்தி செய் வதற்குப் பதில், தேவைக்காக உற் பத்தி செய்வதென்ற முறை அநுஷ்டானத்திற்கு வரும். அப்பொழுது பொருளுற்பத்தி, விநியோகம், பண்ட மாற்றல் முதலிய அனைத்துமே தொழி லாளர் வசத்தில் இருக்கும்.

மார்க்ஸின் சித்தாந்தமான இந்தப் பொதுவுடமைக் கொள்கைக்கு எல் லைப்புறமென்பது கிடையாது. அதா வது, உலகத்திலுள்ள எல்லா நாடு களும், இந்தப் பொதுவுடமைத் தத்துவ அநுஷ்டான விஷயத்தில் போட்டி போட்டுக் கொண்டோ அல்லது சச்சரவிட்டுக் கொண்டோ இருக்க முடியாதென்பது மார்க்ஸின் கொள்கை. ஒரு நாட்டில் இந்தக் கொள்கை, அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டு விடுமானால், மற்ற நாடுகளிலுள்ள தொழிலாளர்களும் புரட்சி செய்து தற்போதைய சமு தாயத்தை மாற்றி யமைத்துவிடு வார்களென்று மார்க்ஸ் வலியுறுத்தி யிருக்கிறான்.

நாஜீயம்

நாஜீயம் என்பது 'நாஷனல் சோஷ லிஸம்' என்ற சொற்றொடரின் சுருக் கம். எப்படி கம்யூனிஸத்தில் தொழி லாளர்க்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதோ, அது போல, நாஜீயத் தில் ஜாதிக்கு முக்கியத்துவம் கொடுக் கப்படுகிறது.

நாஜீயத்தில், தனிப்பட்ட முத லாளி ஸ்தாபனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடமுண்டு. ஆனால் அந்த ஸ்தாபனமோ தொழிற் சாலையோ, அல்லது வேறெதுவோ, ஜாதியின் நன்மைக்கு முரண்பட்ட தாக இருக்கக்கூடாது. தவிர, நாஜீய அரசாங்கமானது, என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்யவேண்டு மென்று கட்டளையிடுகிறதோ அவை களைத்தான் அந்தத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய வேண்டும்.

கம்யூனிஸத்திற்குப் பொருளாதார அந்தஸ்து தான் முக்கியம். அது ஜாதி, மதம், வர்ணம் முதலிய எந்த வேற்றுமைகளையும் பாராட்டுவதில்லை. ஆனால் நாஜீயமோ, மானிட சமூகத் தைப் பல ஜாதியினராகப் பிரிக் கின்றது இந்தப் பிரிவுகளில் ஜெர் மானிய ஜாதியே மிகச்சிறந்ததென்று கருதுகிறது. மற்ற ஜாதியினரெல் லாரும்—அதாவது எல்லாச் சமூகத் தினரும்— ஜெர்மானியர்களுக்குத் தாழ்ந்தவர்களே.. ஜெர்மானிய ஜாதி மிகவும் உயர்ந்த ஜாதியானபடியால், அந்த ஜாதியின் புனிதத்தன்மையைக் களங்கப்படுத்த ஜெர்மனியின் சத் துருக்கள் சதாமுயன்று கொண்டிருக் கிறார்கள். அந்த முயற்சியைத் தடுத்து நிற்பது ஒவ்வொரு ஜெர்மானிய தேச பக்தனுடைய கடமை யென்றும் ஜெர்மானிய அறிஞர்கள் கருதுகிறார் கள். ஜெர்மன் ஜாதியின் தூய்மையை

தன் ரத்தக்கலப்பினால் களங்கப் படுத்தி அது காரணமாக ஜெர்மன் ஜாதிக்குப் பரம சத்துருக்களாக இருக்கப்பட்டவர்கள் யூதர்கள் முதலிய அந்நிய ஜாதியினரே. இவை நாஜீயத்தின் முக்கிய கொள்கைகள்.

பாசிஸம்

பாசிஸத்தில் முக்கிய ஸ்தானம் பெறுவது ஜன சமுதாயந்தான். ஒரு சமுதாயத்தில் பல ஜாதிகள் கலந்திருக்கலாம். ஆனால் ஜாதி பலவும் சேர்ந்த சமுதாயமே முக்கியமானது. பாசிஸத்தின் அடையாளமாகிய கோடரியும் அதைச்சுற்றி பல கழிகள் அடங்கிய கட்டும் எதைக் குறிக்கின்றனவென்றால், பழைய ரோம ஏகாதிபத்தியத்தில் சிறந்த அரசனாக விளங்கிய சீஸர் என்ற அரசனுடைய சின்னத்தைக் குறிக்கிறது. பாசிஸ இத்தலியில் ஓர் இத்தாலியனைப் போலவே, அபிசீனியனுக்கும் அல்பேனியனுக்கும் பூரண உரிமைகள் உண்டு. அவன் இத்தாலியப் பிரஜையாக இருக்க வேண்டுமென்பதுதான் முக்கியம். இத்தலியில், சமீப காலத்தில் யூதர்களுக்கு விரோதமாகச் சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டனவே அவை சரிதானா வென்று சிலர் கேட்கலாம். அது ஹிட்லரைச் சந்தோஷிப்பிப்பதற்காகத் தற்காலிகமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே தவிர வேறொன்றுமில்லை.

பாசிஸத்தின் கீழ் எல்லாப் பொருளுற்பத்திகளும், சமுதாய நன்மையை முன்னிட்டுத்தான் நடைபெற வேண்டும். தொழிலாளர்களுடைய கூலி விகிதங்கள், அவர்களுக்கு வேலை தேடிக் கொடுத்தல், அவர்களை வேலையினின்று விலக்குதல் முதலிய விவகாரங்களையெல்லாம் அரசாங்கமே நிருவகித்து நடத்துகிறது. அரசாங்க நிருவாகத்தைப்பற்றி யாரும் பகிரங்கமாகக் குறைகூறிக் கொண்டிருக்கக் கூடாது. அரசியல் காரணங்களுக்காக விசாரணையின்றிச் சிறைத் தண்டனை விதிப்பது என்ற முறை அரசாங்க ரீதியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

கம்யூனிஸம், நாஜீயம், பாசிஸம் ஆகிய மூன்று கொள்கைகளும் பல அம்சங்களில் வேறுபட்டிருக்கின்றன வாயினும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஒன்றுபட்டனவா யிருக்கின்றன. அதாவது தனிமனிதன், சமுதாயத்தின் நன்மைக்காகவே வாழ்கிறான் என்று இந்த மூன்று கொள்கைகளும் வலியுறுத்துகின்றன.

ஜனநாயகம்

ஜனநாயக தத்துவப்படி, சமுதாயமானது, தனிப்பட்ட மனிதனுடைய நன்மைக்காகவே இருக்கிறது. ஒரு சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும், அவரவருடைய அபிப்பிராயங்களைத் தாராளமாகச் சொல்லலாம் என்ற உரிமை அளிக்கப் படுவதனால், அரசாங்க நிருவாகத்தை நடத்துவது கடினமாகி விடுகிறதென்றும், சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாருடைய காலமும் வீணாகிறதென்றும் நாஜீயம், பாசிஸம் முதலியவை கூறுகின்றன. இதற்கு ஜனநாயகம் அளிக்கிற பதிலென்னவென்றால் பொதுஜன அபிப்பிராயத்தை இங்ஙனம் கட்டுப்படுத்தி விடுவதனால், நல்லெண்ணங்களும், அறிஞர்களுடைய ஆலோசனைகளும்

அரசாங்கத்திற்கு இல்லாமற் போய் விடுகின்றன என்பதாகும்.

பொருளுற்பத்தியானது பொது ஜன நன்மைக்காகவே நடைபெற வேண்டுமென்றும், அந்த முறையில் அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் சர்வாதிகாரம் கூறுகிறது. ஆனால் ஜன நாயகமோ, அப்படி கட்டுப்படுத்தக் கூடாதென்றும், அப்படிச் செய்வதனால், தனிப்பட்டவர்களுடைய கிரியா சக்திகள் குன்றிப் போகின்றன வென்றும் சொல்கிறது.

அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டால், அரசாங்கம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதபடி போகிறதென்று சர்வாதிகாரம் கூறுகிறது. ஜனங்களுக்கு இந்த உரிமை கொடுத்தால் தான், அரசாங்கம் தவறான காரியங்களைச் செய்யா திருக்கும் என்று ஜன நாயகம் பதிலளிக்கிறது.

தனிப்பட்ட நபர்கள், ஒரு தலைவனுக்குக் கீழ்ப் படிந்து நடந்தால் தான், அரசாங்க நிருவாகம் ஒழுங்காகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று சர்வாதிகாரம் சொல்கிறது. தனிப்பட்ட நபர்களுடைய சக்திக்கு பூரண வளர்ச்சி யடையும்படி இடங் கொடுத்தால் தான், அந்தச் சக்திகளனைத்தையும் அரசாங்கம், தாராளமாக உபயோகித்துக் கொள்ள முடியுமென்று ஜன நாயகம் விடை யளிக்கிறது.

இவை யெல்லா வற்றைக் காட்டிலும் சர்வாதிகாரத்திற்கும் ஜன நாயகத்திற்கும் முக்கியமான வித்தியாசம் என்ன வென்றால், ஜன நாயகமானது தன் அதிகாரிகளைத் தானே தெரிந்தெடுத்துக் கொள்கிறது. எந்த ஓர் அரசாங்கம், ஜனங்களுக்காக ஜனங்களால் நடைபெறுகிறதோ அதுதான் உண்மையான அரசாங்கம் என்று அப்ராஹாம் லிங்கன் என்ற அமெரிக்க அறிஞன் கூறியது இங்குச் சிந்திக்கத் தக்கது.

ஜப்பானில் மிகப் பெரிய பணக்கார குடும்பங்கள் மூன்று தான். இவை முறையே, மிட்ஸூயி, மிட்ஸூபீஷி, ஸூமிமோடோ என்பனவாம். இந்த மூன்று குடும்பங்களும் இன்னும் சுமார் பன்னிரண்டு குடும்பங்களும் சேர்ந்து ஜப்பானுடைய வியாபாரத்தில் சுமார் நூற்றுக்கு எழுபது பங்குக்கு அதிகம் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றன.

சோவியத் - ருஷ்யாவில் விவசாயம்

— என். பி. ராய், B. A.

ருஷ்யாவின் ஐந்து வருடத்திட்டம் இன்றைய ருஷ்யாவின் பொருளாதார சமூக அமைப்பில் பெரும் புரட்சியை உண்டு பண்ணியுள்ளது. தீர்க்காலோசனையுடனும், பெருநோக்குடனும் செய்யப் பெற்ற இத்திட்டம் தேசத்தின் தோற்றத்தையே மாற்றி விட்டது முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு, வாழ்க்கை அந்தஸ்து முதலியன தகர்க்கப்பட்டு பொதுவுடைமையின் உயர்ந்த தத்துவம் உதயமாயிற்று. பொதுவுடைமைக் காரர்கள் செய்த ஒரு காரியம், எல்லோருக்கும் ஒன்று போல் நன்மையை அளிக்கக் கூடிய முறையில் பொருளுற்பத்தி செய்து அதன் மூலம் தேச பொருளாதார நிலையை அதிகரிக்க செய்ததே.

இந்த நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டு பொதுவுடைமை சர்க்கார் ருஷ்யாவின் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் ஆகிய வற்றை பொது உடைமை முறையில் திருத்தியமைக்க முயன்றார்கள். இது வரை தேசத்தின் உற்பத்தியும் வருவாயும் சமூகத்தில் மிகச் சிறுபான்மையோரான முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்தன. இந்த நிலை, தேசத்தின் செல்வத்தை ஒழுங்காக வினியோகிப்பதற்குப் பெருந்தடையாக இருந்தது அதுவே சமூக வேற்றுமைக்கு அடிப் படையான காரியம். ஆகையால் தான் உலகத்தில் எல்லோருக்கும் ஒன்று போல் பயனளிக்கக் கூடிய பொது உடைமைத் திட்டத்தை பொது உடைமையாளர்கள் வெகு சிரமத்துடன் கொண்டு வந்தார்கள். இந்த மாறுதல் விவசாய முறையிலும், விவசாயிகளின் சமூக அமைப்பிலும் பெருத்த மாறுதலை உண்டு பண்ணிற்று.

பழைய உழவு முறைகள் ஒரேயடியாகக் கைவிடப்பட்டு சாஸ்திர முறைப்படியுள்ள நவீன முறைகள் கைக்கொள்ளப்பட்டன. பொது உடைமை சர்க்கார் ஆதீனத்தில் ருஷ்யாவின் விவசாயம் அதிசயிக்கத்தக்க விதத்தில் புத்துயிர் பெற்று குறிப்பிடக் கூடிய நன்மைகளைச் செய்துள்ளது விவசாயத்தின் இப்பெரும் அபிவிருத்தியை நன்கு தெரிந்து கொள்வதற்கு சென்ற காலத்தையும் தற்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. 'ஜார்' காலத்தில் ருஷ்யாவின் விவசாயம் வருந்தத்

தக்க விதத்தில் அவ்வளவு பின்னடைந்திருந்தது. தேசத்தின் பொருளாதாரக் குறைவும் மிகத் தாழ்வான வாழ்க்கைத் தரமும் சொல்லத் தாமன்று. பெரும்பான்மை யோரின் உபஜீவன மார்க்கம் விவசாயம். பொருளாதார அபிவிருத்திக்கு விரோதமான முறையில் நிலங்கள் சிறு சிறு துண்டுகளாய் பிரிக்கப்பட்டிருந்தாலும் விவசாய முறை சாஸ்திரப்படி இல்லா திருந்தாலும் ஜீவனத்திற்கு விவசாயத்தை நம்பமுடியாத நிலைமை ஏற்பட்டது. பல சந்தர்ப்பங்களில் செலவழித்த பணமும் உழைத்த உழைப்பும் ஈடு செய்யப் படாமல் போயுள்ளன. தவிர, நிலங்கள் ஜமீன்தார்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்ததானது விவசாயிகளின் நலன்களைப் பாதிப்பதற்கு முக்கிய காரணமா யிருந்தது. ஜமீன்தார்கள் குடியானவர்களின் நிலைமையையோ மண்ணின் தரத்தையோ அபிவிருத்தி செய்வதற்குஒன்றும் செய்யாவிடினும் விவசாயிகளிட மிருந்து அதிகமான சேவையையும் வரிகளையும் வசூல் செய்து அவர்களை அடக்கி ஆண்டு வந்தனர் இவைகளை எல்லாம் காரணமாகக் கொண்டு விவசாயம் முன்னேற்றமடை யாமலும் தேசத்தின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையாமலும் இருந்து வந்தன. இயற்கை வளம் அதிகமாக இருந்தும் விளைவு மிகக் குறைந்து தேசத்தில் பஞ்சத்திற்குப் பஞ்ச மில்லாமல் ஆயிற்று. இந்த நிலையில் பொது உடமைக் காரர்கள் அதிகாரத்திற்கு வந்தால் விவசாயத்தின் இந்தப்பரிதாப நிலை அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. அவர்கள் பெரும் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றினும் பொது உடமையை அமுலுக்குக் கொண்டு வருவதுதான் அவர்களுடைய நோக்கம். ஆகையால் அவர்கள் விவசாயத்திற்காகவும் கைத்தொழிலுக்காகவும் செய்த வேலைகள் புரட்சிகரமாகத் தோன்றினும் முடிவான நோக்கம் பொது உடமையா யிருந்ததால் தடையின்றி முன்னேறிற்று. அவர்கள் நிலங்களை சர்க்காருக்குச் சொந்த மாக்கி விளைவை தேசிய சொத்தாக்க விரும்பினார்கள். இத்தேசியத் திட்டம் பொது உடமையின் முதற்படியாகும். இதில் ஜமீன்தார்களின் எதிர்ப்பு இல்லாமலிருக்க முடியா தல்லவா? ஆனால் பொது உடமைக் காரர்கள் எந்த எதிர்ப்பையும் பொருட் படுத்த வில்லை. கடுமையாகச் சண்டையிட்டும் தக்க முறையில் நடவடிக்கையில் செய்து காண்பித்தும் ஜமீன்தார்களை வென்றனர். பொது உடமைக்காரர்கள் அவர்களிடத்திலிருந்து நிலத்தினுடையவும் மண்ணினுடையவும் உரிமைகளைப் பறித்து, அவ்வகுப்பாரே இல்லாமற் செய்தனர். இவ்விதம் பறிக்கப்பட்ட நிலங்கள் விவசாயிகளிடையே சந்தர்ப்பத்திற்கேற்ப பகிர்ந்தளிக்கப் பெற்றது. இவ்விதமாக 27 கோடி ஏக்கர் நிலங்கள் விவசாயிகள் வசமே வந்தன.

பொதுவுடமை சர்க்கார் அவர்களது சொப்பனத்தை உண்மையாக்குவதற்கு மற்றுமோர் முக்கியச் செய்கை செய்தனர். அதுசிறு சிறு குடியாண்மைகளை இல்லாமலாக்கிவருமானத்தை அதிகரிக்கச் செய்யக் கூடிய பெரும் பண்ணைகளேற்படுத்தியதே யாகும். இதுவே பின்னால் கூட்டுறவு முறையில் பண்ணைகளமர்த்தி விவசாயிகளின்

நன்மைகளை அதிகரிக்கச் செய்ததற்குக் காரணமாயிருந்தது. 1928ல் ருஷ்யாவின் பொதுவான பொருளாதார அபிவிருத்திக்காக பொதுவுடமை சர்க்கார் ஒரு ஐந்து வருடத் திட்டத்தை வகுத்தனர். இத்திட்டப்படி முதன் முதலாக பெரும் நிலப்பரப்பை ஒன்று சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டதுடன் நீர்ப்பாசனங்களுக்கான வழிகள் ஏற்படுத்தி தரிசு நிலங்களையும் அபிவிருத்தி செய்து காடுகளும் நிலங்களாக்கப்பட்டன. இவைகளெல்லாம் ஐந்து வருடத் திட்டத்தைச் சார்ந்தவை. இதோடுகூட சீதோஷ்ண ஸ்திதிக்குகந்ததாயும் மண்ணின் தரத்திற்கு உகந்ததுமான பயிர்களைப் போடுவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன. பொதுவுடமைச் சர்க்கார் எவ்விதத்திலும் இத்திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதெனக் கங்கணங் கட்டிக் கொண்டனர். 1929ம் வருடத்து வரவு செலவு திட்டத்தில் விவசாய அபிவிருத்திக்கென முப்பதினாயிரம் லட்சம் ரூபில்ஸ் ஒதுக்கப்பட்டது. பின்னால் 1931ல் இத்தொகை அறுபத்தாறாயிரம் லட்சமாக்கப்பட்டது. இதோடுகூட நிலங்களை நன்கு உழக்கூடிய நவீன சாஸ்திர முறைப்படிக்குள்ள விவசாயக் கருவிகள் உபயோகத்தில் கொண்டுவரப்பட்டன. தேசத்திற்கே புதிதான விவசாயக் கல்வி பொது ஜனங்களிடையே புகுத்தப்பட்டது. பொதுவுடமைத் திட்டத்தின் முக்கிய அம்சம் முன்னே சொல்லியபடி சிறு சிறு நிலங்களை ஒரு நிலப் பரப்பாக்குவதாகும். ருஷ்யாவில் நாம் இன்னும் காணும் சாதனத்திற்கு மூலகாரணம் இதுவே. இத்திட்டப்படி போசமாகப் பிரிக்கப்பட்டிருந்த எண்ணற்ற சிறு நிலங்களை ஒன்று சேர்த்து சாதாரண அளவுள்ள பெரும் பண்ணைகளாக்கப்பட்டன. ஆனால் அவர்களின் வேலை இத்துடன் நின்றுவிடவில்லை. நிலத்தை நன்கு பராமரிப்பதற்காகவும் எல்லோருடைய உரிமைகளையும் ஒன்று போல் கவனிப்பதற்காகவும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அவைகளில் இப்பண்ணைகள் ஒப்படைக்கப்பட்டன. நவீன விவசாயக் கருவிகளின் உதவியைக் கொண்டும் நவீன சாஸ்திரிய முறைகளைக் கொண்டும் விவசாயிகள் உற்சாகத்துடன் வேலை செய்து வந்தனர். இக்கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலிலீடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விளைவை சரி சமமாக பகிர்ந்தளிக்கும் பொறுப்பை ஏற்றன. இவ்விதம் நிலத்தின் விளைவு சமமாகப் பகிர்ந்தளிக்கப் பட்டதால் விவசாயிகளுக்கிடையே சமத்துவம் என்ற எண்ணம் உண்டாயிற்று. கூட்டுறவுச் சங்கங்கள் செய்த மற்றொரு முக்கிய உதவி அதை சர்க்காருக்கும் பெரும் பண்ணைகளுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியஸ்தராயிருந்து வந்ததாகும். இவைகளின் மூலமாக சர்க்கார் விவசாயத்திற்கு வேண்டிய பணங்களை விநியோகித்து வந்ததுடன் அறிக்கைகளும் பிறப்பித்து வந்தனர். இவ்விதமாக அமைக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களால் திறமையுடன் நிர்வகிக்கப்பட்டகூட்டுப்பண்ணைகள் அதிகமாகிக் கொண்டே வந்தன. இவைகள் விவசாயத்திற்குச் செய்து வந்த உதவி தேசத்தின் செல்வ நிலையை அதிகரிக்கச் செய்தது. பொதுவாக நிலங்களின் பண்பு அதிகப்பட்டு விளைவும் அதிகரித்தது. தேசத்தில் ஒரு தனி முறையான விவசாயம் ஏற்பட்டு சமுதாய

அபிவிருத்திக்கே ஒரு காரணமாய் ஏற்பட்டது. குடியானவர்களின் பொருளாதார நிலையையும் சமுதாய அபிவிருத்தியையும் குறிப்பிடக்கூடிய விதத்தில் மேன்மைப்படுத்தியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிகரமான வேலை ஜனங்களிடையே சமீப காலத்தில் இருந்த சமுதாய, பொருளாதார வேற்றுமையையே இல்லாமற் செய்துள்ளது. ஐந்துவருட திட்டத்தின் வெற்றிகரமான வேலையின் பயனாய் இன்றைய ருஷ்யாவில் தனி நிலமுள்ள விவசாயிகளில் நூற்றுக்கு எழுபது பேர் கூட்டுறவுச் சங்கங்களால் நன்கு நிர்வகிக்கப்படும் கூட்டுப் பண்ணைகளில் தாமாகவே சேர்ந்து கொண்டுள்ளனர்.

இக்கூட்டுப் பண்ணைகளைத் தவிர சர்க்கார் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பண்ணைகள் சர்க்காரின் நேர்முகமான நிர்வாகத்தில் இருந்து வருவதோடு நவீன சாஸ்திரீய விவசாய பரீட்சாஸ்தலங்களாகவும் இருந்து வருகின்றன. இவைகள் விவசாயிக்கு முன்னேற்ற முறையை கற்பிப்பதற்காகவும் உபயோகப்பட்டு வருகின்றன. சர்க்கார் பண்ணைகள் கைத் தொழிற்சாலை போன்று நடத்தப் பட்டு வருகின்றன. இச்சர்க்கார் பண்ணைகள் சம்பந்தப்பட்ட வரையில் ஐந்து வருடத் திட்டம் பூரண வெற்றியை அடைந்துள்ளது. இப்பண்ணையில் ஐந்து கோடி ஏக்கர் நிலங்கள் இருந்துவருகின்றதென்பதே இதற்குச் சான்றாகும். சர்க்கார் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் அதிகமாய்க் கொண்டு வருவதால் தனி நிலச்சுவான்தார்களும் சொந்தப் பண்ணைகளும் குறைந்து கொண்டே வருகின்றன. விவசாயிகள் தாமாகவே அவர்களது நிலங்களைக் கூட்டுப் பண்ணைகளில் ஒப்படைப்பது வெற்றியின் அறிகுறியாகும். கூட்டுப்பண்ணைகள் பிரபலமடைந்து வருகிறதென்பதற்கு விவசாயிகளிடையே இவ்வெண்ணம் பரவி வருவதே போதிய சான்றாகும். ஐந்து வருடத் திட்டத்தின் நாலு வருடங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கீழே தந்துள்ளோம்.

மொத்த சாகுபடி நிலம்

	1928ல்	1932ல்
கூட்டுப்பண்ணை	1.2	68 2
சர்க்கார் பண்ணை	1.5	10 0
தனிப் பண்ணை	9.7	22.0

ஐந்து வருடத் திட்டம் 1928ல ஆரம்பித்து 1933ல் வெற்றிகரமாக முடிந்தது. இந்த ஐந்து வருடங்களுக்குள் விவசாய அபிவிருத்திக்காகப் போடப்பட்டிருந்த திட்டங்கள் அநேகமாய் முடிவு பெற்றன. தேசத்தின் செல்வ நிலை அதிகமாக முன்னேறி இருப்பது இதன் வெற்றியை எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது. விவசாய நிலங்களும் அவற்றின் விளைவும் அதிகரித்துள்ள இன்றைய ருஷ்யா எல்லாத் துறைகளிலும் முன்னேறியுள்ளது. ஒவ்வொரு சிறு அம்சத்தையும் நன்கு கவனித்து ஐந்து வருடத் திட்டம் வெற்றிகரமாய் முடித்தது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை நன்கு உயர்த்தியுள்ளது. நவீன சாஸ்திர முறைப்படியுள்ள கருவிகள் உபயோகித்தல், நீர்ப்பாசன அபிவிருத்தி, இவைகளைக் கொண்டு தரிசு நிலங்களைப் பண்படுத்துதல், உபயோகமற்றதென்று தள்ளப் பெற்

திருந்த நிலங்களை விவசாய நிலங்களாக்குதல் ஆகியவைகள் கொண்டும் தேசத்தின் உற்பத்தி அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது. இத்துடன் விவசாயிகளின் சமுதாய நிலையும் மேன்மையாக்கப்பட்டிருப்பதுடன் அவர்களின் வாழ்க்கையும் சந்தோஷகரமானதாக்கப்பட்டுள்ளது. பத்து வருடங்களுக்கு முன் லெனின் சொன்னதாவது:—

“பரஸ்பர ஒத்துழைப்பின் பேரில் கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்துவதால் உண்டாகிற சாதகங்களை விவசாயிகளுக்கு அநுபவ பூர்வமாக எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தால்தான் இப்பொழுது அரசாங்க நிருவாகத்தை ஏற்று நடத்தி வரும் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு நன்மையைச் செய்யவே ஏற்பட்டிருக்கிறார்கள் என்று விவசாயிகள் உணர்வார்கள்.”

போல்ஷ்வெக்கர்கள் இந்த வாசகங்களை முன் மாதிரியாகக் கொண்டுதான் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வெற்றி யுண்டாகாமல் போகுமா? (பை. டை.)

மூன்று மாதத்தில் வியாபாரக் கப்பல்களின் நஷ்டம்.

தற்போதைய யுத்தத்தில் வியாபாரக்கப்பல்கள், சுரங்கங்களினால் தாக்கப்பட்டு அதிக சேதமடைந்து வருகின்றன வென்பதை நேயர்கள் அறிவார்கள். ஆனால் சென்ற மகாயுத்தத்தில்—சிறப்பாக 1917ம் வருஷம்—ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களால், பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் காட்டிலும் இப்பொழுது, ஜெர்மன் சுரங்கங்களினால், பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களுக்கு அதிக சேதமுண்டாகவில்லை யென்று பிரிட்டிஷ் அறிக்கைகள் கூறுகின்றன. தற்போதைய யுத்தம் 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3ந் தேதி தொடங்கியது. அது முதல் நவம்பர் மாதம் 30ந் தேதி வரை—மூன்று மாத காலத்தில் எவ்வளவு நிறையுள்ள எத்தனை வியாபாரக் கப்பல்கள் மூழ்கியிருக்கின்றன வென்பதற்குப் புள்ளி விவரங்கள் வருமாறு:—

		எத்தனை கப்பல்கள்?	எவ்வளவு டன் நிறை?
பிரிட்டிஷ்	—	81	311,553
பிரெஞ்சு	—	11	55,581
போலந்து	—	1	15,294
நடு நிலைமை வகிக்கும் நாடுகள்		46	174,942
	மொத்தம்	139	557,370

பரராசனைப் பாடிய புலவர்

—வ. மு. இரத்தினேசுவரையர்

பரராசன் என்பான் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஓரரசன். அவன் தமிழ்ப் புலமையுடையவன். தமிழ்ப் புலவரை நன்கு ஆதரித்தவன். களத்தூரிலே பிரிந்து, புறக்கண் மறைந்தாலும் அகக்கண் கொண்டு அனைத்தையும் அறியும் பெருமை வாய்ந்தவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார். இவர், இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் பாடலும் இயற்றியுள்ளார். கண்ட சுத்தி என்னும் பாவும் பரராசன் மீது பாடினர் என்ப. காளிதாசன் போன்ற வடநூற் புலவரும் கண்ட சுத்திச் சுலோகம் இயற்றி வைத்தனர்.

பரராச சிங்க மன்னன் அந்தகரைக் காணக் கூடாதென்று திரையிட்டிருந்தான். அது சமயம் தமது மாணவகரால் அதையுணர்ந்த கவிஞர் ஒரு பாடல் கூறினர்.

நரை கோட்டிளங்கன்று
நல்வளநாடு நயந்தளிப்பான்

விரையோட்டு தார்ப்புய வெற்பீழ
மன்னன் என்றே விரும்பிக்

கரையோட்டமீதின் மாக்கலம்
போட்டுனைக் காணவந்தால்

திரைபோட்டு நீயிருந்தாய்சிங்கபூப
சிரோமணியே.

இவ்வரிய பாடல் கேட்டுப் பரராச சிங்க மன்னன் புலவரை மிகவும் உபசரித்தான். புலவரை உபசரியாமையால் வாடிய மனைவியும் மகிழ்ந்தாள். பரராச சிங்கன் பொற்பந்தர், வளநாடு, யானைக் கன்று முதலிய பல பெரிய விருதுகளால் தமிழ்ப் புலவரை இன்பமடையச் செய்தான். தமிழருமையை அரசரும் பிரபுக்களும் அறிந்தமையாலன்றோ அக்காலம் இத்தகைய பரிசில்களின் பேர் கேட்கின்றது. இக்காலம் ஈகை என்று மாறி விட்டது. அந்தகக் கவிவீரராகவர் பின்னொரிடத்தில் 'ஈழமண்டலமளவு திறை கொண்ட கவிவீரராகவன் விடுக்குமோலை' என்று தம் பெருமை காட்டுவர்.

அந்தகக் கவிவீரராகவர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் புலமையுடையவர். இராமாவதாரம் முதலிய இதிகாசங்களின் அரும்பொருளை இனிதாக எடுத்து விளக்கும் ஆற்றல்

மிக்கவர். கவிஞரை அரசன் பாடலா லும் புகழ்ந்தான். அப்பாடல்,

> விரகன் முத்தமிழ்க் கவிவீர
> ராகவன்
> வரகவி மாலையை நினைக்கும்
> போதெலாம்
> உரகனும் வாணனும்
> ஒப்பத் தோன்றினல்
> சிரகர கம்பிதஞ் செய்ய
> லாகுமே,

என்பதாம். பரராச சிங்கமன்னர் மீது கவிஞர் பாடிய வண்ணப் பாடலின் ஒரு பகுதி வருமாறு:—

பதுமத்தடி யிணையாள் பிடிநடை பயிலுமியலு நடையா ளதி
படிவக்கடி தட மிடறுகடி தபட படலவட லுரக—படமுடிபோல்வாள்

கலைபொற்கலையுடையாள் பயிரவி கரடமிருக விடையாளிரு
கடினத்தொடுகுட மகுட வகுடமிடு கபடவடகமிடு—கனதனமார்பாள்

பசலைக்கிளி யுகிராள் வளர்கிளி பழகுமழகிய கையா ளித
பாதத்திருமத வரததிருமதுர பாமர்திகிரிகிரை—பரவிருதோளாள்
—களமே விளங்குகோ டணியாள்

பணிமுக்கனி மொழியாள் உடுபதி பரவுமொளிய நகையாள் சிறு
பவளத்துளவளவ மெவளவவளவுள பளிதாவாளிதயரி-மளமுள-வாயாள்

பருமுத்துறு குமிழாள் சததள பதுமவதன மதனுள் பணி
அணிபற்றிரணிய புரணகிரணகுண வருணவருணவினை—யவரிணைகாதாள்

பருவப் பிறைநுதலா ணறையதி பறவையனைய குழலாண்முகில்
படிடக் கடிதடு கரவைவிடுவைவிடு படையை முடுகுகணை—படரிரு—
கோவாள்—உனைவிதியின்கணே தொழுதாள்.

சந்தப் பொருள் நிறை இப் பாட காண்க. இந்த வண்ணமும் முழுதும்
லால் பரராச சிங்கனைப் பாடியமை கிடைத்திலது.

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னர், பிரிட்டிஷ் இந்திய நாட்டு மந்திரியின் காரியாலயத்தில் மொத்தம் சுமார் நூற்றைப் பது பேர் இருந்தனர். இப்பொழுது 770 பேர்இருக்கின்றனர். இந்த 770 பேரில் 420 பேர் ஆண்கள்; 350 பேர் பெண்கள்.

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

—எம். வி. வேங்கடராமன்

(சென்ற மாதத்தொடர்ச்சி)

ஏழாம் அத்தியாயம்

ஸுமார் ஐந்து வருஷங்கள் கழிந்து விட்டன.

ஸுரேந்திரனுடைய தகப்பனாரும் விரஜபாபுவும் காலம் ஆகிவிட்டார்கள். அவனுடைய சிற்றன்னை தன் புருஷர் கொடுத்த சொத்தை வைத்துக் கொண்டு தன் தகப்பனார் வீட்டில் வசித்துக் கொண்டிருந்தாள்.

ஸுரேந்திரனைப் பலர் புகழ்ந்து கொண்டிருந்தனர்; பலர் இகழ்ந்து கொண்டிருந்தனர். அவனுடைய பந்து வாத்சல்யத்தையும் தாராள குணத்தையும் நண்பரை ஆதரிக்கும் தன்மையையும் பார்க்கிறவர்கள் அவனைப்போன்ற உதாரகுணமுள்ள ஜமீன்தார் அந்தப் பக்கத்தில் இதுவரை தோன்றியதே யில்லை யென்று பேசிக் கொண்டார்கள். இன்னும் பலர் அவனைப் போன்ற கொடிய ஜமீன்தார் அந்த பக்கத்தில் பிறந்ததே யில்லை என்று சொல்லிக் கொண்டார்கள். இரண்டு தரப்பினரும் சொல்லுவது வாஸ்தவம்தான். புகழ்ச்சி ஸுரேந்திரனுக்கு; இகழ்ச்சி அவனுடைய மானேஜர் மதுரா நாதருக்கு.

எப்போது பார்த்தாலும் ஸுரேந்திரன் வீட்டில் அவன் நண்பர்கள் 'கொம்மாளம்' அடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் உலக இன்பத்தைத் தாராளமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். வெற்றிலை, புகையிலைகள், சாராயம் என்ன வேண்டுமானாலும் சரி உடனே கிடைத்துவிடும். மானேஜர் மதுரா நாதருக்கு அவை எல்லாம் நன்றாகப் பிடிக்கும்; செலவு செய்வதிலும் அவர் ரொம்ப தாராளந்தான்; ஆனால் அதனால் ஜமீன்தாருக்கு எவ்வித இடைஞ்சலும் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளுவதிலும் கெட்டிக்காரர்; செலவுப் பாரத்தை யெல்லாம் குடிகள் மீது சுமத்துவது தான் அவருடைய ஆட்சியின் திறமை. மதுராபாபு யாரிடமும் பைசாகூட நிலுவைவிட மாட்டார். வீட்டை எரிப்பதிலும், குடிகளை கிராமத்திலிருந்து விரட்டுவதிலும், அவர்களை கச்சேரியின் சின்ன அறையில் போட்டு மூடுவதிலும் அவருக்கு அலாதித்துணிவு, சந்தோஷம்.

குடிகளின் கூக்குரல் சில சமயம் சாந்தி தேவியின் காதுகளுக்கும் எட்டும். 'நீங்கள் ஜமீன்தாரியைப் பார்த்துக் கொள்ளா விட்டால் எல்

லாம் நாசமாய்ப் போய்விடும்' என்று சொல்லி அவள் தன் கணவனைத் தூண்டி விடுவாள்.

சுரேந்திரன் திடுக்கிட்டவன் போல் கேட்பான்: 'அப்படியா! இதெல்லாம் நிஜம்தானா?' என்று.

'பின்னே என்ன! எங்கே பார்த்தாலும் உங்களை வைது கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத்தான் ஒன்றும் கேட்கவில்லை; இருபத்து நாலு மணி நேரமும் கூத்தடித்துக் கொண்டிருந்தால் எங்கே கேட்கும்? இப்பேர்ப்பட்ட மானேஜர் வேண்டாமே! அவனை எடுத்து விடுங்கள்.'

'சரி, நாளைக்கிருந்து நானே எல்லாம் கவனித்துக் கொள்ளுகிறேன்' என்பான் சுரேந்திரன் வருத்தமாய்.

பிறகு கொஞ்ச நாள் வரை அமர்க்களப்படும். சுரேந்திரனே ஜமீன்தாரி வேலை யெல்லாம் கவனிக்க ஆரம்பித்து விடுவான். மதுரா பாபு திடுக்கிட்டுப் போவார்; சில சமயம், 'இப்படித் தான் ஜமீன்தாரியை வைத்துக் கொள்வதா?' என்று கேட்பார்.

சுரேந்திரன் உலர்ந்த சிரிப்புச் சிரித்து, 'மதுரா பாபு, ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி ஜமீன்தாரியைக் காப்பாற்ற விட்டால் என்ன!' என்பான்.

'அப்படியானால் என்னை விட்டு விடுங்கள்; நான் போகிறேன்' என்பார் மதுரர். உடனே சுரேந்திரன் வழிக்கு வந்து விடுவான். மறுபடியும் பழைய குருடிதான். சமீபத்தில் ஒரு புதுக் காண்டம் ஆரம்பமாகியது. ஒரு தோட்டம் வைத்தார்கள். அதன் நடுவில் ஒரு பங்களா; அதில் ஏலோகேசி என்று கல்கத்தா தாசி ஒருத்தி தங்கியிருந்தாள். ஆடலிலும் பாடலிலும் கெட்டிக்காரி. பார்க்கவும் 'நல்லா' இருக்கிறாள். கலைந்து போன தேன் கூட்டிலிருந்து தேனீக்கள் பறப்பது போல் சுரேந்திரன் வீட்டிலிருந்த 'மைனர்கள்' எல்லோரும் அவனுடைய வீட்டை விட்டு ஏலோகேசி அருகில் போய் மொய்த்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்களுடைய ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் சொல்லி முடியாது. அவர்கள் சுரேந்திரனையும் அங்கே இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள். சாந்தி தன் கணவனைக் கண்டே மூன்று நாள் ஆகிவிட்டது. நாலாவது நாள் அவனைக் கண்டதும் அவள் கதவோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

'இத்தனை நாள் எங்கே போயிருந்தீர்கள்?'

'தோட்டத்துக்கு—'

'அங்கே யாருக்காக மூனு நாள் தங்கி யிருந்தீர்கள?'

'அப்படியா!—

'என்ன கேட்டாலும் அப்படியா!' எனக்கு எல்லா விஷயமும் தெரிந்து விட்டது,' என்று சொல்லும் போதே சாந்தி அழுது விட்டாள்.' நீங்கள் இப்படி உதறித் தள்ள என்ன குற்றம் செய்து விட்டேன்?'

'எங்கே? நான்—

உதறித் தள்ளுவதென்றால் வேறே என்ன? நமக்கு (பெண்களுக்கு) இதை விட வேறே அவமானம் வேணுமா?'

'அப்படியா !—அவர்கள்—

சாந்தி அவன் சொன்னதையே கேட்க வில்லை போலிருந்தது; அவள் இன்னும் அதிகமாக அழத் துவங்கினாள்.

'நீங்கள் தான் எனக்குத் தெய்வம்; எனக்கு ஸர்வமும் நீங்களே. உங்களைப்பற்றி எனக்குத்தெரியாதா? உங்களுடைய மனசை நான் ஒரு நாளும் பெறவில்லை. நான் உங்களுக்கு ஒரு பொருட்டு இல்லை. என்னுடைய இந்த வேதனையை உங்களிடம் யார் சொல்லுவது? உங்களுக்கு வெட்கம் உண்டாகும், வருத்தம் உண்டாகும் என்று தான் நான் ஒன்றும் சொல்லவில்லை?'

'சாந்தி! நீ ஏன் அழுகிறாய்?'

'ஏன் அழுகிறேன் என்று கடவுளுக்குத் தான் தெரியும். நீங்கள் என்னை அலக்ஷியம் செய்ய வில்லையென்றும் எனக்குத் தெரியும். உங்களுடைய மனதில் கூட கவலை இருக்கிறது. நீங்கள் வேறு என்ன செய்வீர்கள்!' அப்புறம் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் சொன்னாள் :— 'நான் இருக்கிற வரைக்கும கஷ்டப்பட்டாலும் படுகிறேன். ஆனால் உங்களுடைய கஷ்டம் மாத்திரம் தெரிந்தால்'—

சுரேந்திரன் அவளைத் தன் அருகில் இழுத்தான்; அன்புடன் அவளுடைய கண்ணீரைத்துடைத்துக் கேட்டான் :—'தெரிந்தால் என்ன செய்வாய் சாந்தி?'

அட, இதுக்குக் கூடவா பதிலுண்டு! சாந்தி தேம்பித் தேம்பி அழவாரம்பித்தாள்.

நெடு நேரம் கழித்து சாந்தி, 'உங்களுடைய உடம்பு கூட இப்போது சரியாக இல்லை' என்று சொன்னாள்.

'இப்போது என்ன, ஐந்து வருஷமாகவே சரியாயில்லை கல்கத்தாவிலே வண்டியடியில் மாட்டிக் கொள்ள மார்பிலும் இடுப்பிலும் அடிபட்டு ஒரு மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்தேனே, அப்போதிருந்தே உடம்பு சரியாக இல்லை. அந்த வலி இன்று வரை போகவே யில்லை எப்படி உயிரோடு இருக்கிறேன் என்று கூட எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'—

சாந்தி உடனே புருஷனின் மார்பு மீது கை வைத்துச் சொன்னாள் :— 'வாருங்கள்; நாம் இந்த ஊரை விட்டு கல்கத்தாவுக்குப் போவோம்; அங்கே நல்ல நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள்—'

'அக்கா கூட அங்கே இருக்கிறாள்; வா, போகலாம்' என்றான் சுரேந்திரன் மகிழ்வடைந்து.

'எனக்கும் உங்களுடைய அக்காவைப் பார்க்கவேணும் போல் இருக்கிறது. அவளை அழைத்து வருவீர்களா?'

'அழைத்து வராமல் என்ன?' பிறகு கொஞ்சம். யோசித்துக் கூறினான்:—'அவள் கட்டாயம் வருவாள்; நான் செத்துக் கொண்டிருக்கிறேன் என்று கேள்விப்பட்டால்—'

சாந்தி அவனுடைய வாயை மூடிக்கொண்டே சொன்னாள் :—'நான் உங்களை கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன்; இப்படி எல்லாம் பேசாதீர்கள்—'

'அவள் வந்து விட்டால் எனக்குக் கவலையே இல்லை—'

அபிமானத்தால் சாந்தியின் தலை நிமிர்ந்து விட்டது. கொஞ்சம் நேரத்துக்கு முந்தித்தான் அவள், 'உங்களுக்கு நான் ஒரு பொருட்டு இல்லை' என்று சொன்னாள்; இப்போது அவளுக்குத்தான் 'ஒரு பொருட்டு' ஆகிவிட்டாற் போல் இருந்தது! ஆனால் தன் பேச்சால் அவளுக்கு மிகவும் சந்தோஷமும் உண்டாகிறது என்று சுரேந்திரன் உணரவே யில்லை. அவன் சொன்னான்:—'நீயே போய் அக்காவைக் கூட்டிக் கொண்டு வர வேண்டும்; என்ன?'

சாந்தி தலை யாட்டினாள்.

'அவள் வந்ததும் பார்; எனக்கு ஒரு கஷ்டமும் இருக்காது!'

சாந்தியின் கண்களிலிருந்து ஜலம் பெருகவாரம்பித்தது.

* * *

மறுநாள் வேலைக்காரி மூலம் மதுரா பாபு விடம், அந்த தோட்டத்துப் பிராணியை வெளியேற்றா விட்டால் அவர் வெளியேற்றப் படுவார் என்று சொல்லி அனுப்பினாள் சாந்தி. தன் புருஷனையும் கோபித்துக் கொண்டாள்:—'நீங்கள் மாத்திரம் வீட்டை விட்டு வெளியில் கால் எடுத்து வையுங்கள்; நான் சுவற்றில் மண்டையை மோதிக் கொண்டு செத்து விடுவேன், ஆமாம்!'

'சரி, ஆனால்—'

'ஆனால் என்ன, ஆனால்? நான் அதுக்கும் ஏற்பாடு செய்கிறேன்.'

பிறகு சாந்தி வேலைக்காரியைக் கூப்பிட்டு, அந்த போக்கிரிப் பயல்கள் வந்தால் உள்ளே விடாதே என்று காவல் காரனண்டை சொல்லு—, என்று கட்டளை யிட்டாள்.

வேறு வழி இல்லாமல் மதுரா பாபு ஏலோகேசிக்கு சீட்டு கொடுக்க வேண்டிய தாயிற்று; மைனர்களுக்கும் 'குட்பை! போட வேண்டிய தாயிற்று. அப்புறம் மதுரா பாபு ஜமீன்தாரி வேலையில் கவனம் செலுத்தினார்.

சுரேந்திரன் கல்கத்தா போகவில்லை. மார்வலியும் குறைந்தாற் போலிருந்தது. சாந்திக்கும் கல்கத்தா போக வேணும் என்ற ஆசை இல்லை. அங்கேயே இருந்து கொண்டு தன் பர்த்தாவுக்கு வேண்டிய பணி விடைகளை எல்லாம் செய்து வந்தாள். கல்கத்தாவிலிருந்து ஒரு நல்ல டாக்டரை வரவழைத்து அவனைக் காட்டினாள். அவர் பார்த்து ஏதோ மருந்து கொடுத்தார். நெஞ்சு தற்போது இருக்கும் நிலையில் அவனுடைய உடம்புக்கோ மனசுக்கோ எவ்வித கஷ்டமும் கொடுக்கக் கூடாது என்று எச்சரித்தார் அவர்.

சந்தர்ப்பத்தை ஒட்டி மதுரா பாபு செய்து வந்த வேலையால் கிராமங்களில் இருமடங்கு துன்பம் உண்டாகி விட்டது. சாந்தியும் நடு நடுவில் அதைக் கேள்விப் பட்டுக் கொண்டு தான் இருந்தாள்; ஆனால் அதை தன் புருஷனிடம் சொல்ல அவளுக்குத் தைரியம் உண்டாக வில்லை.

ஸ்ரீ விவேகானந்தர்

—"ஆசிரமவாசி"

சென்ற நூறு ஆண்டுகளாக இந்திய நாடு பல அரும் பெரும் புதல்வர்களை உலகுக்கு ஈன்று அளித்தது. அவர்களின் விடா முயற்சியின் பலனாக பாரத பூமி புத்துயிரும் புது மலர்ச்சியும் பெற்று விளங்குகின்றது. இம் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த பெரியார்களுள் சுவாமி விவேகானந்தர் தலைசிறந்து விளங்குகின்றார். அவர் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவராயினும், நாம் அவருடைய தேசபக்தியையும், தியாகத்தையுமே ஞாபகச் சின்னங்களாகக் கருதுகின்றோம். கருமங்களைச் செவ்வனே செய்யும் ஆற்றல் மட்டுமன்றி, சிந்தையும் மனமும் செல்லா விடத்து அந்தமில் ஆனந்தம் அனுபவிக்கும் தகைமையும் அவரிடத்திருந்தது. அவருடைய அஞ்சா நெஞ்சமும் மனோவலிமையும் எந்தப் பெரிய முட்டுக்கட்டைகளையும் உடைத்து எறியத்தக்கவை. தோல்வி யென்பதைத் தன் ஜீவியத்தில் அநுபவித்தறியார். அந்த வார்த்தை அவருடைய நாவில் எழுவதில்லை. உடல் வலி, மனோதிடம், அஞ்சாமை என்னும் இலட்சணங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் ஸ்ரீ விவேகாநந்தர்.

ஆயினும் இந்த விசேஷ குணங்களுக்காக மட்டும் அவரை நாம் ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. பல்லாண்டுகளாக மூடக் கொள்கைகளிலும், பழக்க வழக்கங்களிலும் புதைந்து கிடந்த இந்து தர்மத்தின் உயிர்நிலையை ஆராய்ந்து எடுத்து உலகுக்களித்த தனிப்பெரும் பெருமைக்காக நாம் அவரை என்றென்றும் மறக்க முடியாது. அமெரிக்க நாட்டில் கூடிய சர்வ மத ஆராய்ச்சிக் கழகத்தில் அவர் செய்த உலகப் பிரசித்திபெற்ற பிரசங்கம் அந்நாட்டினரை ஆச்சரியப்படும்படி செய்தது. அத்தோடு ஒரு புதிய உன்னதம் பொருந்திய இந்து தர்மமும் வெளித்தோன்றிற்றெனலாம்.

சுவாமி விவேகாநந்தர் காலத்துக்கு முன் புனிதமான உபநிடத போதனைகளைப் பரப்புவதற்குப் பல் முயற்சிகள் செய்யப்பட்டன. அதன் பயனாக இந்துக்களுள் பல் வேறு சமய வாதிகள் தோன்றினர். ஒரு சமயத்தின் அங்கத்தவர் தம் கொள்கைகளை வியந்தும் மற்றவர் முறைகளை இகழ்ந்தும் வந்தனர். இந்து தர்மத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவுகளைச் சரிப்படுத்தி பல சமயத்தவர்களுக்கு

மிடையே ஒற்றுமையை நிறுவுவது ஒரு சாதாரண மனிதனின் வேலையல்ல. ஆகையால் இந்தியவானத்து ஓர் உதய சூரியன்போல் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றினார். அவர் இந்து தர்மத்தின் பல சமய வழிபாடுகளின் நெறி நின்றொழுகி அவை யெல்லாம் ஒரே அநுபவத்துக்கு இட்டுச் செல்கின்றன என்னும் வேதவாக்குக்குப்புத்துயிர் அளித்தார். அது அல்லாமலும் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் சாதனைகளும் அந்த இலட்சியத்துக்கே இட்டுச் செல்லும்பாதைகளென்று தமது அநுபவ வாயிலாகக் காட்டி யிருக்கிறார் இதையே தாயுமான சுவாமிகளும் :—

> வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
> விளங்கு பரம்பொருளே நின் விளையாட்
> [டல்லால்
> மாறுபடுங் கருத்தில்லை; முடிவில் மோன
> வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா

எனக் கூறிப் போந்தார்.

சுவாமி விவேகானந்தர் தமது குருநாதரின் அமிர்த மொழிகளை உலகெங்கும் பிரசித்தி பெறச் செய்தார். ஏனையோரைப் போல அவர் ஒன்றையும் அனுவசியம் என்று தள்ளிப் போட வில்லை. நீலவானத்தின் பிரதிபிம்பத்தை சாக்கடை நீரிலுங் காணலாம்; தெள்ளியபனித்துளியிலுங்காணலாம். அதேபோல சுவாமிகள், விகாரமுள்ள விக்கிரகத்தைப் பார்த்த போதும், அவருடைய அன்பு நிறைந்த சிந்தையில் ஆண்டவனின் உருவமே பிரசன்னமாயிருந்தது. சகரத்தின் சட்டங்கள் எல்லாம் ஒரே மத்தியத்தை நோக்கிச் செல்கின்றன, அதே போன்று நாம் அனைவரும், அறிந்தோ அறியாமலோ நமது இலட்சியமாகிய ஆண்டவனையே நோக்கிச் செல்கின்றோம். ஒருவனுக்கு எக்காலமும் விமோசனமில்லை என்று தள்ளிவிடப்பட வில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பிய இஷ்ட தேவதையைத் தாமாகவே தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் சிவனையோ அல்லது சக்தியையோ வசுவையோ அல்லது புத்தரையோ, அல்லாவையோ அல்லது ஜொராஸ்திரியரையோ வணங்கட்டும். எவரை வணங்குகின்றாரென்பதைப் பற்றி அவசியமில்லை. தண்ணீர்ப் பாத்திரங்கள் பல உருவங்களை யுடையதாயிருக்கலாம். ஆனால் அவற்றுள்ளிருக்கும் தண்ணீர் ஒரே தன்மையனவாம். ஒவ்வொருவனும் தன்னுடைய பாத்திரத்திலுள்ள நீரை அருந்திப் பிறரையும் அவர்களுடைய பாத்திரங்களிலுள்ள நீரை அருந்தும்படி செய்வதற்குப் போதிய தண்ணீர் இருக்கும்போது நாங்கள் எங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ள வேண்டிய அவசிய மென்ன என்பது சுவாமிகள் கருத்து.

மஹாத்மா காந்தியடிகளைப் போல சுவாமி விவேகானந்தரும் இந்தியாவின் உயிர் நிலையை உணரக் கூடியவரா யிருந்தார். அதே அவருடைய பெருந்தகைமையை விளக்குகின்றது. நாம் உற்சாகங் குன்றி சோம்பலில் ஆழ்ந்து உலக போகங்களை வெறுத்த சந்நியாசிகள் போல நடிக்கலானோம். உண்மையோ அதற்கு எதிர் மறையாயிருந்தது. உலக போகங்களையேனும் அனுபவிப்பதற்கு முயற்சி செய்ய முடியாத அவ்வளவு சோம்பலில் ஈடுபட்டிருந்தோம். எவ்வளவு சிரமமில்லாத பாதை யுண்டோ அதை

யே நாம் விரும்பிக் கைப்பற்றி நின்றோம். குருட்டு நம்பிக்கைக்கும் காலத்தால் உளுத்துதிர்ந்த பழக்க வழக்கங்களுக்கும் அடிமைப் பட்டு அவற்றிலிருந்து அணுவள வேனும் பிசகி நடக்கப் பயந்து இந்து சமுதாயம் தனது பூர்வீக மேன்மையை இழந்தது. புராதன ஆசாரங்கள் தற்காலத்துக் கேற்றவாறு திருத்தி அமைக்கப் படவில்லை. பழமையான காரணம் பற்றியே அவை பிரயோசன மில்லாத போதிலும் போற்றப் பட்டு வந்தன. சாஸ்திர ஆராய்ச்சியில் ஆர்வம் மிகவுங் குன்றி யிருந்தது. ஆசாரங்களைக் கைவிட்டால் சாதியை இழந்து விடுவோ மென்ற அச்சம் எல்லா இந்துக்களின் மனதிலும் உதித்திருந்தது. என்னைத் தொடாதே, என் உணவைத் தீண்டாதே என்னும் சுலோகங்கள் ஜன சமூகத்தின் உயர்ந்த நோக்கமாகக் கருதப்பட்டது. பரம் பரையான மூட வழக்கங்கள் ஒவ்வொருவரையும் பற்றிக் கொண்டிருந்தது. சுவாமி விவேகானந்தர் இந்த ஆஷாட பூதித்தனத்தைக் கண்டு மனமாரக் கண்டித்தார். 'பலவீனம், அச்சம் என்பவற்றுக்கு ஒரு போதும் இடங் கொடாதீர்கள்; தைரிய சாலிகளா யிருங்கள்; மனிதத் தன்மையுள்ளவர்களா யிருங்கள். ஒருவன் பாதகனா யினும் அவன் பலசாலியா யிருப்பின் நான் அவனுக்கு மதிப்புக் காட்டுவேன்; ஏனெனில் அவனுடைய 'பலமானது ஒரு காலத்தில் தனது தீமையை நீக்குவதற்கு ஏது வாயிருக்கும்; அதன் பயனாக நாளடைவில் உண்மை நெறியை அடைவான்' என்பதே சுவாமிகள் இளைஞர்களுக்குக் கூறிய புத்தி மதியாகும்.

சுவாமி விவேகானந்தர் உயர்ந்து பருத்த உடல் கட்டு உடையவர். ஜனங்கள் அவருக்குச் சென்ற விடமெல்லாம் சன்மானம் கொடுத்தனர். அவரின் கம்பீரமான வெளித் தோற்றத்துக்குப் பின் தயை நிறைந்த சிந்தை மறைந்து கிடந்தது. பசிப்பிணியால் வருந்தும் கோடிக் கணக்கான மக்கள் மீது அவர் கொண்ட பேரன்பு ஒரு அக்கினிச் சுவாலை போன்று கொழுந்து விட்டெரிந்தது. இதன் பயனாக அவருடைய உள்ளத்தில் இரு எண்ணங்கள் சதா போரிட்டுக் கொண்டிருந்தன. உலகைத் துறந்து மனித சஞ்சார மில்லாத இடத்தில் தவஞ் செய்வதா அல்லது உலகிலே இருந்து தேசத்துக்கும் மக்களுக்கும் தொண்டு புரிவதா என்பதே அந்த நோக்கங்களாகும். ஒரு காலத்து சுவாமிகளுக்கு சமாதியில் சதா அமர்ந்து தெவிட்டாத ஆனந்தத்தை அநுபவிப்பதே சிறந்த இலட்சியமா யிருந்தது. அவருடைய குருநாதர் இதை யறிந்து அத்தகைய சுய நல விருப்பத்தைக் கண்டித் திருக்கிறார். அஃதல்லாமலும் சுவாமிகள் சமாதியை பார்க்கிலும் உயர்ந்த நோக்கத்துக்காகப் பிறந்தவரென்றும், அவர் ஒரு பெரிய ஆல விருட்சம் போன்றலௌகீக வாழ்வில் இளைத்து நலியும் மக்களுக்கு ஆறுதலளிக்கக் கடமைப் பட்டவர் என்றும கூறியிருக்கிறார்.

தமது குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் ஆக்ஞையின்படி தனது வாழ் நாள் முழுவதையும் மக்களின் நன்மைக்காக அர்ப்பணஞ் செய்தவர் சுவாமிகள். அமெரிக்காவில் பெரிய தனவந்தரின் உல்லாச மாளிகைகளில் விருந்தாளியா யிருந்

தார். அப்போது அவர்களுடைய ஆடம்பர வாழ்வைப் பார்த்து அதிசயப் பட்டார். அங்கு சுவாமிகளுக்கும் ராஜ போகங்கள் வழங்கப் பட்டன. பஞ்சணை மெத்தை மேல் படுத்துறங்கும் போது பாரத மக்களின் பரிதாப நிலைமை நினைவுக்கு வந்தது. வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் சௌகரியங்களேனு மின்றி வருந்தும் சகோதர சகோதரிகளை நினைத்து மனமாரக் கண்ணீர் வடித்தார். ஒரு பஞ்சகாலத்தில் சுவாமிகள் வெகு சிரமமாக வேலைசெய்து கொண்டிருக்கும் போது ஒரு பண்டிதர் வந்து சமய சம்பாஷணைக்கு அழைத்தார். அப்பொழுது சுவாமிகள் 'என்னுடைய தேசத்தில் ஒரு நாய் தானும் உணவில்லாமல் வருந்தும் வரை அதற்கு உணவளிப்பதே என்னுடைய முழுச்சமயமும் ஆகும்' என்று அவருக்குக் கூறியிருக்கிறார்.

வருந்தும் மக்கள் மீது கசிந்துருகு பேரன்பு பூண்டவர் சுவாமிகள். அவருடைய தயையானது புத்தபகவானுடைய இரக்கத்துக்கு இணையாகும். இளம் பிராயத்தில் புத்த பகவானின் தரிசனமும் இவருக்குக் கிடைத்திருக்கின்றது. உருவத்திலும் தோற்றத்திலும் புத்தரைப் போன்றவர். பொதுவாக எல்லாச் சமய குரவர்கள் மீதும் அவருக்குப் பேரன்பு உண்டு. ஆயினும் புத்தபகவான் மீது விசேஷ அன்பும் சன்மானமும் காட்டுபவர். அவரைப்பற்றி அடிக்கடி தமது சீடர்களுக்குக் கூறுவது வழக்கம். புத்த பகவான் மீது சுவாமிகளுக்கிருந்த பக்தி சிரத்தையைக் கவனித்த ஒருவர் அவரும் புத்தரை வழிபடுபவரோ என்று வினவினார். அதற்குச் சுவாமிகள் உணர்ச்சி ததும்பும்படி தான் புத்த பகவானின் தொண்டரின் தொழும்பன் எனக் கூறியிருக்கின்றார்.

சுவாமி விவேகானந்தர் தமது பரிவிராஜக காலத்து இமயமுதல் குமரி வரை கால் நடையாகப் பிரயாணஞ் செய்தார். அப்பொழுது அதிஉயர்ந்தவர் தொடங்கி மிகத் தாழ்ந்தவர் வரை எல்லாரோடுங் கூடிவாழுஞ் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியத் தாயின் அக்கால நிலைமையைக் கண்டு மனம் வருந்தினார். தாய் நாட்டைத் தாயினுஞ் சாலப்பாவித்து தமது மனமார்ந்த அன்பை அதன்மேல் செலுத்தினார். வருங்காலத்தில் அதி ஆச்சரியமான, மகிமை வாய்ந்த இந்தியா தோன்றப் போகிறதென்று கனவு கண்டவரும் இவரே. அந்தக் கனவானது தற்சமயம் ஓரளவுக்கு நனவாக மாறியிருப்பதைக் காணலாம். இறைவனைத் தேடும் முயற்சியில் ஈடு பட்டிருக்கும் வரை இந்திய நாட்டுக்கு ஒருவித அழிவுமில்லை; இந்த இலட்சியத்தை யிழந்து இராஜரீகத் துறையில் முயலுமாயின் அதற்கு அழிவு வருவது நிச்சயம் என்பது சுவாமிகளின் கொள்கையாகும். புத்த பகவான் காலத்தில் ஆத்மீக வாழ்வைப் பற்றிய விஷயங்கள் உலக முழுவதும் பரவியிருந்தன. அதைப் பார்க்கிலும் பன்மடங்கு விசேஷம் பெற்று இன்னுமொரு முறை இந்திய ஆத்மீகக்கலை உலகெங்கும் பரந்து மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதையும் தீர்க்க தரிசனத்தோடு கூறியிருக்கிறார்.

சுவாமிகள் அமெரிக்காவுக்குப் போகும் போது சீனா, ஜப்பான் மார்க்க

மாகச் சென்றார். இவ்விரண்டு நாடுகளிலும் புராதன இந்து நாகரீகத்தின் சின்னங்களைக் கண்டார். இவை ஆசியாக் கண்டத்தின் ஆத்மீக ஒற்றுமையை விளக்குகின்றது. இந்துக்கள் நாடு தாய் நாடு; புத்தரை வழிபடும் நாடுகள் அதன் ஆத்மீக புத்திரிகளாகும். இந்தியா ஒரு காலத்திலும் வாளினால் வெற்றி பெறவில்லை; அதன் வெற்றி யெல்லாம் அன்பினால் அடைந்தவையாகும். அன்பையும் நல்லெண்ணத்தையும் உலகுக்குப் போதிப்பதே அதன் கடமையாகும்.

ஆசியா கண்டத்தின் கிழக்கு மேற்குப் பாகங்களுக் கிடையேயுள்ள ஒருமைப்பாடு வெளித் தோற்றத்துக்கு அவ்வளவாகப் புலப்படவில்லை. இவ விரண்டையும் தொடுக்கும் சரடு இந்தியாவாகும். எல்லாச் சமயாசாரியர்களும், ஆசியா கண்டத்தில் பிறந்தவர்கள். அவர்கள் போதனைகளாகிய மணிகள் அக்கண்டத்தின் பல பாகங்களிலுஞ் சிதறிக் கிடக்கின்றன. அத்தேச மக்களின் வாழ்வு சமய அடிப்படையைக் கொண்டது. மேல் நாட்டவரோ உலகாயதத் துறையில் முயன்று வருகின்றனர்.

சுவாமி விவேகானந்தரின் ஜீவியத்தைப் படித்தவர்களுக்கு அவர் கிறிஸ்து நாதர் மீது பூண்டிருந்த பேரன்பு விளங்கும். ஒரு தருணம் ஒருவர் யேசு நாதர் உயிரோடிருந்தால் அவருக்கு எத்தகைய பணி புரிவீரென்று சுவாமிகளை வினவினார். அதற்கு அவர் 'எனது இருதயக் குருதியினால் அவர் பாத கமலங்களைத் திருமஞ்சன மாட்டுவேன்' என்று கூறியுள்ளார். சகல மதங்களுக்கும் சம்மதமாகிய கொள்கைகளே அவருடைய சமயமாயிருந்தது. தமது குருநாதராகிய ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்ஸரின் போதனைப்படி ஒவ்வொருவரையும் தத்தம் நெறி நின்று ஒழுகச் செய்து அதன் வழியாகப் பேரின்பப் பெருவாழ்வை எய்துவதற்கு தன்னால் இயன்ற மட்டும் உதவி புரிந்து வந்தார்.

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்த நாள் தொடங்கி இந்தியர், மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைப்பற்றி நடக்கலாயினர். சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் சிறந்த இலட்சியங்களாகிய தியாகம், சேவை என்னும் இரண்டையும் எடுத்துக் காட்டி மேல் நாட்டுக் கொள்கைகள் தலை காட்டா வண்ணம் அணைகோலினார். உலகுக்கு இந்திய நாடு கொடுக்க வேண்டிய ஒரு மகத்தான கொடையுண்டென்பதை உணர்ந்தவர் சுவாமிகள். நீண்ட கால உறக்கத்திலிருந்த இந்தியரை தமது ஆயுள் காலமாகிய நாற்பது ஆண்டுகளுக்குள் விழிக்கச் செய்து, அவருடைய கொள்கைகளை உலகெங்கும் பரப்பிய பெருமை இவருக்கே உரியது. அதன் பயனாக இந்தியர் மேல் நாட்டு நாகரிக வலையில் சிக்கியபோதும் தமது ஆத்ம ஞான வளர்ச்சியையும் கலைப்பயிற்சியையுங் கைவிடாரென்பதை உலகத்துக்கு நிரூபித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தரின் ஜீவியத்திலிருந்து நாம் என்ன பயன் பெறலாம் என்பதைச் சற்று ஆராய்வாம். மேதாவிகள், ஆசாரியர்கள். என்பவர் தாம் பிறந்த நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர்களல்லர், அவர்கள் மானிடவர்க்க மெல்லாவற்றுக்கும் சொந்தமானவர்கள். அவர்கள் காலத்

துக்குக் காலம் தோன்றி ஞான ஒளியை மங்கவிடாது தூண்டிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள் முயற்சியினால் ஊழிதோறும் ஞான ஒளி மங்கா விளக்குப் போன்று சுடர் விட்டெரிகின்றது. இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் புத்தபகவான் தோன்றினார். அவரின் ஞான ஒளி உலகெங்கும் பரவி மக்களின் இதய கமலங்களை மலரச் செய்தது. அதே நாட்டில் அதே க்ஷத்திரிய குலத்தில் இன்னுமொரு சுடர் தோன்றியது. அவரே சுவாமி விவேகானந்தர். தோற்றத்திலும், கருணையிலும் புத்த பகவானிலும் இவர் குறைந்தவரல்லர். இன்னுமொரு முறை தியாக வாழ்வின் பெருமையை உலகுக்கு எடுத்து விளக்கியவரும் இவரே ஆகும். அவர் பூதவுடம்பு நீத்துப் புகழ் உடம்பு எய்திய முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குள் நூற்றுக் கணக்கான சீடர்கள் அவரைப் போன்று காவியுடை அணிந்து உலகமெங்கும் தர்மப் பிரசாரஞ் செய்து வருகின்றனர்.

புத்த பகவான் மீதுள்ள பேரன்பே இந்தியாவையும் பர்மாவையும் இணைக்கும் சங்கிலி போன்றிருந்தது. தற்காலம் அந்தத் தொடர்பு கொஞ்சங் கொஞ்சமாகப் பலவீனமடைந்து வருகின்றது. சுவாமி விவேகானந்தர் மீதுள்ள அன்புத்தளையினால் இன்னுமொரு புதிய தொடர்பை நாம் ஏற்படுத்திக் கொள்ளுவோம். பகை, கலகம், நம்பிக்கையீனம் நிரம்பிய தற்கால உலகில் அவருடைய பரிசுத்த ஆவியானது நம்மனைவருக்கும் வழிகாட்டியாய் நின்று நம்மை சாந்தம், பொறை, அன்பு என்னுந் துறைகளில் இட்டுச் செல்வதாக.

சில பெரியார்களின் தற்போதைய வயது

மகாத்மா காந்தி	....	....	71
பண்டித ஜவஹர்லால் நேரு		....	50
கனம் ஆகாகான்	....	....	62
நெவில்லி சேம்பர்லேன்	....	....	70
வின்ஸ்டன் சர்ச்சில்	....	....	65
அந்தோனி ஈடன்	....	....	42
ஆல்பர்ட் ஈன்ஸ்டீன்	....	....	60
மாஜி கெய்ஸர்	....	....	81
கோயரிங்	....	....	46
கோப்பெல்ஸ்	....	....	42
ஹிட்லர்	....	....	50
ஜார்ஜ் லான்ஸ்பரி	....	....	80
லார்ட் லின்லித்கௌ	....	....	52
லாயிட் ஜார்ஜ்	....	....	76
ஜெனரல் ஸ்மட்ஸ்	....	....	69
ஸ்டாலின்	....	....	60
முஸோலினி	....	....	56
ரூஸ்வெல்ட்	....	....	57
பெர்னார்ட்ஷா	....	....	83
சியாங்—கை—ஷேக்	....	....	54
ரவீந்திரநாத் டாகூர்	....	....	79

ஞானக்களஞ்சியம்
ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸ்தானந்த சுவாமிகள்

மூவகை மாணுக்கர் :—

அன்னப்பறவையும் பூமி எருமைகளும்

ஆத்தும ஞானியும் தத்துவோபதேசஞ் செய்பவருமாகிய ஒரு குரு உபதேசிக்கின்ற பரம ரஹசியங்களை ஒரே சமயத்தில் சிரவணஞ் செய்து கொண்டு வருகின்ற எல்லாச் சீடர்களும் ஒரேவிதமான யோக்யர்களாயிருக்க வேண்டிய அத்தியாவசியகமாகும். அஃதங்ஙனமாகாததற்குக்காரணம் யாது என இவ்வண்ணம் ஒரு சங்கை சிலர்க்கு நிகழலாம். அதனை அடியிற்கண்ட உதாரணத்தைக் கொண்டு நீக்கிவிடல் வேண்டும். மாணுக்கர்களுக்குள் உத்தமன், மத்தியமன், அதமன் என மூவித அதிகாரிகள் இருக்கின்றனர். அதனுல் அவரவர்களின் அநுபவங்களும் வெவ்வேறு விதமாக இருப்பதற்கே நியாயமுண்டு. அவை எங்ஙனமெனின் அன்னம், பசு, பூமி, கிளி, எருமை, ஆடு, பன்னுடை ஓட்டைக் கலம், என்னு மிவைகளின் குணங்களுக்குச் சமமாகும். அவற்றில்,

(1) அன்னம் ஒரு பாத்திரத்தில் பாலையும் நீரையும் கலந்து அன்ன பக்ஷியின் முன்பாக வைத்தால் அது ஜலத்தை நீக்கிப் பாலை மாத்திரம் குடிக்கும். இது அதன் இயல்பாகும். அது போல குரு உபதேசிக்கின்ற மஹா வாக்கியங்களின் மேலான சாரத்தை மட்டும் ஒரு சீடன் அறிந்து பிரம்மாநந்தாநுபவியாவன். இச்சீடன் வெகு தீவிரத்திலும் தீவிரமாகிய 'சாரக்ராஹி'யாவான்.

(2) பசு—இதன் முன்பாகப் போடுகின்ற வைக்கோல் முழுவதையும் அது முதன் முதலில் நன்ருகமென்று தின்னுது சிறிது. மட்டும் கடித்து விழுங்கி இரைப்பையை நிரப்பிக் கொள்ளும். பின்னர் விழுங்கியுள்ளவைகளினின்றும் சிறிது சிறிதாக எடுத்து அசைபோட்டு உமிழ் நீருடன் கலந்து அதிலுள்ள சாரம் வேறு சக்கை வேருக உட்கொண்டு திருப்தியடையும்.

அதுபோல் ஒரு சீடன் குருநாதன் உபதேசிக்கின்ற சாஸ்திரங்களையெல்லாம் (அப்பசுவைப்போல்) முழுதும்

கிரஹித்துக் கொள்ளுவான். அவர் உபதேசித்து முடிந்த பொழுது மாணுக்கன் தான் பெற்ற உபதேசங்களுடைய ஒவ்வொரு விஷயங்களையும் தனித்தனியே எடுத்து நன்ருக ஆராய்ச்சி செய்யத் தொடங்குவான். இவ்வாராய்ச்சி யாகின்ற கடைதலினின்றும் உண்டான ஆத்தும ஞானமாகிய அமிருதத்தினை மட்டும் பருகுவதனுல் இம்மாணவன் ஜனன மரணங்கள் அற்றவனுய் நித்திய முக்தி பெற்றவனுய் அடைய வேண்டியதையடைந்தவனுகின்ருன். மேற்குறிக்கப்பட்ட குணங்களையுடைய இருமாணவரும் உத்தம அதிகாரிகளாம் (அதாவது தலைமாணுக்கராம்.)

(3) பூமி—மழை காலத்தில் பூமியானது தன்மீது விழுகின்ற ஜலத்தை உள்ளே இழுத்துக் கொள்ளும். வேனிற்காலத்தில் (அதாவது சூரிய கிரணங்கள் வெகு உக்கிரமாய்ப் பூமியைத் தாக்கும் பொழுது) தான் உட்கொண்டிருந்த ஜலமுழுமையும் விட்டுவிடும். இது பூமியின் சுபாவமாம். மேலும் பூமியை எவ்வளவு வரையில் வெட்டியுழுது எருமுதலியன இட்டுப் பக்குவஞ் செய்து வருகின்ருேமோ அவ்வளவு வரையிலேயே அது பயன் கொடுக்கும். அதனைச் சீர் திருத்தாது இருப்போமாயின் அதில் கண்டவாறு பற்பல மரஞ் செடி கொடிகளுற்பத்தியாகி வீண் காடு போல் வளர்ந்து விடும். அது போல குரு உபதேசித்து வருகின்ற காலம்வரை ஒரு சிடன் அதனை கிரஹித்துக் கொள்பவனுய் (அதாவது உபதேசித்த வண்ணம் சற்கர்மங்களை யாசரிப்பவனுய்) காணப்படுவான். ஆனுல் அவன குருவினது உபதேசத்தினின்றும் நீங்கி அந்நியருடன் பழகும் பொழுது மிகச்சாரமாகிய உபதேச மொழிகளை யெல்லாம் மறந்தவனுயும் ஆவான். இவ்வகுப்பிலுள்ள மாணுக்கர்கள் எப்பொழுதுமே குருகுல வாசஞ் செய்ய வேண்டியவர்களாவார்கள்.

(4) கிளி—இதன் சுபாவத்தையறியாதார் ஒருவருமிரார். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்பது பழமொழியல்லவா? ஆனுல் அதுதான் பேசுகின்ற வார்த்தைகளின் அர்த்தம் யாதெனச் சிறிதும் அறியாது.

அதுபோல் ஆசாரியன் தன்து உயரிய பிரம்மானந்த அனுபவங்களை மிக மகிழ்ச்சியுடன் மாணவர்க் கெடுத்துரைப்பார். அவர்களில் ஒரு சிடன் ஆசானுபதேசித்தவற்றில் ஓர் எழுத்தும் விடாது கிளியைப் போலும் (அல்லது எடிஸனுடைய போனகிராப் எந்திரத்தைப் போலும்) கிரஹித்து அவற்றைத் திரும்ப ஒப்புவிப்பதற்கு சாமர்த்திய முடையவனு யிருப்பான். பின்னர் அம்மாணவன் காலவளவிலே பிரம்மானந்த அனுபவஞ் சிறிது மின்றிய ஓர் பிரபல வாசாப் பிரசங்கியாவான். இந்தப் பிரசங்கியைக் கண்டு சூக்ஷ்ம புத்தி யற்றவரனைவரும் இவன் பிரம்மானந்த அனுபவி யென்றும் பிரமோபதேசஞ் செய்தற்கு இவனே ஏற்றவ னென்றும் பலவாறு தாறுமாருய் நினைத்துக் கொள்வார்கள். இதுவுமன்றி உண்மையான அனுபவமற்ற அம்மாணவனையே சில ஜனங்கள் குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றுக் கொள்வதும் வழக்கமாகி யிருக்கின்றது. முற்றிப் பழுக்காத விதைகள்—முளைத்து விருக்ஷ

மாகாதது போல் இத்தகையோர்களாகிய குருக்களின் உபதேசங்கள் சிஷ்யர்களுக்குச் சிறிதேனும் பிரம்மானந்த அநுபவத்தை யளிக்காதெனும் உண்மையை இருதிறத்தவரு முணர்வதில்லை. மேற் குறிக்கப்பட்ட பூமியினுடையவும் கிளியி னுடையவும் குணங்களை யநுசரித்துள்ள மாணவர் மத்திம அதிகாரிகளாவர்.

(5) எருமை:—இந்த . ஜந்து எத்துணை தெளிந்த ஜலமாயினும் அதனைக் கலக்காது நீரருந்துவதேயில்லை. இதுபோல் தேசிகன், எவ்வளவு பரிசுத்தமான பக்தி நியாயங்கள் வாய்ந்த தத்துவங்களை உபதேசித்த போதிலும், அவற்றிலுள்ள குருநாதன் செய்தருளிய, உபதேச நல்வசனங்களை விஷங்கலந்த வுணவாக கிரஹித்துக் கொள்ளுகின்ற மாணாக்கன் முற்புகன்ற எருமைக்கு நிகராவன். ஜன்மம் கடைத்தேறுதற்கான உபதேச வாக்கியங்களை (ஐயோ பாவம்) இம்மாணவன் துன்பம் அடைதற்கல்லவோ உபயோகித்துக்கொண்டான்!

(6) ஆடு:—இந்த ஜந்து ஒரே ஜாதி தழைகளைத் தின்று திருப்தி யடைவதில்லை. ஒரு இலையைக் கடிக்கும் பொழுதே மற்றோர் மரத்தினது தழைகள் இன்னுஞ் சுவையுள்ளனவா யிருக்குமென அதற்குத் தோற்றும். அங்கு சென்று அவ்விலையைக் கடிக்கும்பொழுது அதன்விருப்பம் அதற்கு அடுத்துள்ள தழைகளின் மீது பாயும். படிக்கும் அன்பர்களே! இவ்வண்ணம் ஒரு காட்டில் மட்டுமென நினைக்க வேண்டாம். இவ்வாடுகள் பல காடுகளிலும், பற் பலவிதங்களாயுள்ள இலைகளைக்கடித்துத் தின்று பார்க்கும். ஆனாலும், எந்த மரத்தின் தழைகள் சுவையுள்ளனவையா யிருக்கின்றனவென்று இன்று வரை நிர்மாணிப்பதற்கு அவற்றால் முடிந்ததாகக் காணப்படவில்லை! இது போல ஒரு மாணவன் ஒரு ஆசாரியனுடைய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே வேறோர் தேசிகனது உபதேசம் இன்னும் எவ்வளவோ மேலானதா யிருக்குமென எண்ணுவான். இவ்வாறு 'கிடையாத குருநாதர்களின்' உபதேசங்கள், கிடைத்துள்ள குருமூர்த்திகளின் உபதேசங்களைப் பார்க்கினும் பன்மடங்கு மேலானவை என நினைப்பதால் அம்மாணாக்கன் உபதேசம் பெற வேண்டிப் பிரமத்தை யடைந்தவனைச் சுற்றித் திரிவான். ஆத்தும ஞானானுபவியாகிய [எவரேனும்] ஒரு ஆசாரியனிடமிருந்து உபதேச முறைப்படி மாணவன் குரு குலவாசஞ் செய்து நிர்விகல்பசமாதியைத் தேனொழுக்குப் போலும் இடையறாது (அநவரதம்) அனுஷ்டித்தாலன்றிப் பிரமாநுபவத்தின் கண்ணே திடநிச்சய முண்டாகாது. இங்ஙனஞ் செய்யாத சீடனை வெள்ளாட்டினோடு ஒப்பிடலாம்.

(7) பன்னாடை:—இதனைச் சாதாரணமாய் எண்ணெய், நெய் முதலியவற்றை வடிகட்ட உபயோகிப்பார்கள். இது பெரும்பாலும் சாரமான எண்ணெயையும் நெய்யையும் ஒழுகவிட்டு ஒன்றுக்கு முதவாத அதன் கசடுகளைமட்டும் பிடித்துக் கொண்டிருக்குர். அது போல் குருநாதன் அஞ்ஞானமாம் பேரிருளினை நாசஞ் செய்கின்ற திவ்விய ஞானத்தைச் சீடனுக்குபதேசிப்பார். சீடன் அவ்வுபதேசங்களிலுள்ள தனது ஆத்தும அனுபூதி

யை யளிக்கின்ற சாரமான எல்லா பாவங்களையும் விடுத்து துன்ப மிக்கதான இச்சம்சார சங்கடங்களை யனுபவித்தற்கேதுவாகிய யுக்தி நியாயங்களை மாத்திரம் கைக் கொள்வான். இது மட்டுமல்ல. குருவினது சந்நிதானத்தி னின்றும் குற்றமுள்ளவைகளை கிரஹித்துக் கொண்டு வெளியே சென்று மறைவில் குருநாதனை நிந்தித்து உபந்நியாசமும் புரிவான். இம்மாணவன் இகபரங்களிரண்டையும் கைவிட்டவனாய்ப் பன்றைபோலுமாயினன் என்பது கருத்து.

(8) ஓட்டைக்கலம்:—இதில் வார்க்கப்படுகின்ற எத்தகைய திரவ பதார்த்தங்களும் சிறிதுந் தங்கி நில்லாது கீழே ஒழுகிவிடும். இதுபோல் ஆசார்யன் எவ்வளவு தூரம் உபதேசித்த போதிலும் அற்பமேனும் மனத்தில் தரியாதிருக்கின்ற மாணாக்கன் மேற் கூறப்பட்ட ஓட்டைக் கலத்திற்கு நிகராவான். இந்நிலையிலுள்ள சீடர்களுக்குபதேசம் புரிந்து சீர்திருத்தற்கு எவராலும் சாத்தியமின்றாம்.

எருமை, ஆடு, பன்றை, ஓட்டைக்கலம் என்னும் இவைகட்கு நிகரான குணங்களை யுடையோராய்க் காணப்படுகின்ற (மேற் புகன்ற) நால்வரும் அதம (கடை) மாணாக்கராவர். ஆதலால், உத்தம அதிகாரிகளாகிய சீடர்கள் உலக நன்மைக்கும் மத்திம அதம, (இடை கடை) மாணாக்கர் உலகத்தினது தீமைக்கும் காரணராவர். ஒரே குருவினுடைய ஒரே விதமாயிருக்கின்ற உபதேசங்கள் சீடர்களின் பக்குவ வேறுபாட்டால் உயர்வு தாழ்வுகட்குக் காரணமாயின என்பது இவற்றின் சாரமாம்.

கடவுள் வாழ்க்கைப் பாரம் நீக்குதல்

சுமை தாங்கியும் புத்தியுள்ள வழிப்போக்கனும்

ஒரு பிரபு தனது கூலி வேலைக்காரனிடத்தில் ஒரு பெருஞ் சுமையைக் கொடுத்து இன்ன இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமென உத்தரவு அளித்தான். வேலைக்காரன் சுமையைத் தூக்கிக் கொண்டு பிரயாணத்திற்குப் ' புறப்பட்டான். சிறிது தூரம் செல்லுமுன் அவன் அப்பாரத்தைத் தாங்க முடியாது மிகப் பெருமூச்செறிந்து தலைச்சுமையை கீழே இறக்கிச் சிறிது நேரம் காற்று வாங்கிச் சுகமுற்றுச் சென்றால் நன்றாயிருக்குமென்று மிகவும் ஆசையோடு கூடியவனாயினன். இச்சமயம் அவனுடைய பார்வையும், மனப்போக்கும் சுமை தாங்கியையே குறியாக வைத்துச் சென்றது. மற்றொன்றிலும் அவனது எண்ணஞ் செல்லவில்லை. தெய்வாதீனமாய் அப்பொழுதே சுமை தாங்கியும் அவன் கண்ணில் பட்டது. ஆகா! ஈசனருளால் என்ன பாக்கியம்கிடைத்தது என மகிழ்ந்து சிரசிலிருந்த பெரும்பாரத்தைச் சுமை தாங்கியி லிறக்கி சிறிது நேரம் சிரமபரிகாரஞ் செய்து கொண்டான். அப்பால் சுமையைத் தூக்கிக் கொண்டு நடப்பதற்காகப் புறப்பட்டான். இவ்விதமாய் வழி முழுதும் காணப்பட்ட பற்பல சுமை தாங்கிகளிலும் தனது சுமையை யிறக்கி விடாய் தீர்த்துக் கொண்டே குறித்த இடத்தை யடைந்தனன். இங்ஙனமாகவே வேறோர் வேலைக்காரனிடமும் அத்தகை பெருஞ் சுமையைக் கொடுத்து மேற்குறித்த இடத்திற்கே

கொண்டு சேர்க்கும்படி யனுப்பினார். அந்த பிரபு, அவனும் சிறிது தூரஞ் செல்லவே, சுமையைத் தாங்க முடியாதவனாய் அதனை யிறக்கித் தனது காலின் கீழேயே வைத்துக்கொண்டான். மீண்டும் அவன் அப்பெருஞ் சுமையைத் தலையில் தூக்கிவைத்துக் கொள்ள முயன்ற பொழுது அவனால் அது இயலாமையாலும் மற்றவழிப் போக்கரது உதவிகிடையாமலும் நடுவழியிலேயே தங்கி வெகு கஷ்டத்தையனுபவிக்கும்படி நேர்ந்தது. இம்மட்டோ! மேற்குறித்த இடத்திற் போய்ச் சேர முடியாதவனுமாயினான்.

அதுபோல ஒவ்வொரு ஜீவப்பிராணிகளும் சர்வேசனாங் கடவுளது ஆக்கினையை நிறைவேற்றுவதற்காக வேலைக்கார நிலைமையில் நின்று உலக காரியங்களாகிய (பிரகிருதியின்) சுமையைத் தூக்கிக்கொண்டு வெகு நீண்டதாகிய இவ்வுலக யாத்திரையைச் செய்து முடிப்பதற்கு பிரவேசித்திருக்கின்றார்கள். அப்பெரிய யாத்திரையை நடத்தி வருங்காலத்தில் வழி நடந்த சிரமத்தாற் போலும் களைத்திருக்கின்ற ஜீவர்களுக்குச் சிறிது நேரம் விடாய் தீர்த்துக் கொள்ள வேண்டிய தவசியமாகும். அங்ஙனமாயின் தலையிலுள்ள பெருஞ் சுமையை இறக்கி வைத்தல்லவோ சிரமபரிகாரஞ் செய்து கொள்ள வேண்டும். சுமை தாங்கிக் கற்களில் சுமையை யிறக்கிச் சென்ற வேலைக்காரன் மீண்டும் தனது பாரத்தைத்தானே சுமந்து செல்வதற்கும், கடைசியில் தான் உத்தேசித்த இடத்திறபோய் சேருவதற்கும் வெகுஎளிதாக நேர்ந்ததுபோல் எவன் தனது சகல பாரங்களையும் கடவுளாகிய சுமை தாங்கியின் மீது உள்ளன்போடு இறக்கி வைக்கின்றானோ அவன் உலக விவகாரங்களாகிய (இன்ப துன்பங்களாகிய) மஹாப்பிரகிருதியெனும் சுமையை எப்பொழுதும் சுவாதீனமாகச் செய்து கொண்டு, வாழ்க்கையை இனிதாய் நடத்துவதற்கும் முடிவில் எல்லாத் தத்துவங்களுமொடுங்கு மிடமாகிய பரப்பிரம்மமெனும் ஸ்தானத்தை (மோக்ஷத்தை) யடைந்து தனதுயாத்திரையை முடிப்பதற்கும் ஸமர்த்தனாவான். சுமை தாங்கியில் இறக்காது காலடியிலேயே இறக்கிவைத்துக் கொண்டவன் வழிநடுவிற் கிடந்து பரிதவிக்க வேண்டியதாயும் தான் உத்தேசித்த இடத்தை யடையாது போய் விட்டது போல, எவன் சுயப் பிரயோஜனத்தில் தனது வாழ்நாளனைத்தினையும் செலவிட்டு வருகின்றானோ அவன், என்றும் இப்பிறவிச் சுழலி லகப்பட்டு பிறர்க் கடிமையாகி விசன முற்றும் நித்தியானந்தத்தை யடைதலாகிய சாயுச்சிய நிலையைப் பெறாது, சதா காலம் மயங்கி யுழலுதற்கும காரணமாவான். ஆதலால் ஒவ்வொருவரும் சுயநலத்தை விடுதலும் பிறர் நலத்தைத தேடிக்கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்தலுமாகிய பிரம்மார்ப் பணத்தை நாடுதலுமே மிக்க அத்தியாவசியகமாய்ச் செய்ய வேண்டு மென்பதாம்.

—: ராஜபுத்திர ரமணி :—

—"தனிராம் பிரேம்ஜீ"

ஹிந்தியிலிருந்து வெ. பத்மநாபன் மொழிபெயர்த்தது

அந்நாட்களில் நம் இந்தியாவில் மொகலாய மன்னன் அவுரங்கசீப்பின் ராஜ்ய பாரம் நடந்து கொண்டிருந்தது. அவருடைய ஆதரவைப் பெற்ற இராஜ புத்திரர்கள் அவுரங்க சிப்பினிடமிருந்து கிடைக்கும் ஜாகீர்களின் மேல் மோகங் கொண்டு தங்களுடைய உடல், பொருள், ஆவி, மூன்றையுமே அவுரங்க சீப்புக்காக தியாகம் செய்து விட்டனர் எனலாம். அவுரங்க சீப்பினிடமிருந்து ஆதரவு பெற்ற இராஜ புத்திரர்களில் பலர் தமக்களிக்கப் பட்ட அதிகாரங்களை தங்களுடைய இராஜ புத்திர சகோதரர்களிடமே காட்ட ஆரம்பித்து விட்டனர்.

இச் சமயத்தில் இராஜ புதனத்தில் சிவக் கோட்டை என்னும் சிறிய ஜமீனை மதன சிம்மன் என்பவன் அரசாண்டு வந்தான். மதன சிம்மனுடைய ஜமீன் சிறியதே என்றாலும் அதனுடைய சக்தியும் வலிமையும் மிகவும் அபாரமானது. மதன சிம்மனுக்கு மறைமுகமாகவே பாதுஷாவின் உதவி கிடைத்து வந்ததினால் அந்தத் திட்டில் தன்னை வெல்பவரே கிடையாது என்று மதன சிம்மன் இறுமாப்புக்கொண்டிருந்தான். அவனுடைய ஆட்சியில் பிரஜைகள் நடு நடுங்கினர். பிரஜைகள் மறைமுகமாக அரசனுடைய கொடுமைகளை எண்ணி வருந்தினர் ஆனால் எவரும் நேர்முகமாக அரசனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய சக்தியற்றவராக இருந்தனர். அரசனுடைய கொடுமைகள் ஏதோ ஒரு வகுப்பினரை மாத்திரம் தாக்கிக் கொண்டிருந்தது என்று சொல்வதற்கில்லை மதன சிம்மன் ஸ்திரீ என்றும், புருஷன் என்றும், பிராமணன் என்றும், சூத்திரன் என்றும்யாதொரு பாகுபாடும் இல்லாது சகலரையுமே உபத்திரவித்து வந்தான்.

மதன சிம்மன் தன்னுடைய அட்டூழியங்களை அக்கம் பக்கத்திலுள்ள இதர ஜமீந்தார்களும் உணரும்படி செய்து கொள்ள ஆரம்பித்து விட்டான். சிறிய, பெரிய ஜமீந்தார்கள் யாவரும் மதன சிம்மனைக் கண்டு நடு நடுங்கினர். ஒருகால் அந்த ஜமீந்தார்களெல்லாம் ஒன்று கூடியிருந்தால் மதன சிம்மன் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டிருப்பான். ஆனால் அந்தக் காலத்து ஜமீந்தார்களுக்கு ஒன்று கூடி பொதுவானதோர் பகைவனை வெல்லக் கூடிய சாமர்த்தியம் இல்லாமற் போனது வருந்தத் தக்கதேயாகும்.

மதன சிம்மன் அந்தப் பாகங்களில் மிகவும் சக்திசாலி என்று பெயர் வாங்கியிருந்த போதிலும் மோகன சிம்மன் என்னுமோர் ஜமீந்தாரன் அவனை எதிர்க்கத் தயாராக இருந்தான்.

மோகன சிம்மனுடைய ராணி ஏற்கெனவே மரித்து விட்டிருந்தாள். பத்து வயதான ஒரு பாலகனும், பதினைந்து வயது நிரம்பப் பெற்ற ஒரு பாலிகையும் மோகன சிம்மனுடைய சந்தானங்கள். மோகனசிம்மன் தன்னுடைய மக்களை எப்படி நேசித்து வந்தானோ அதே போல் தன்னுடைய பிரஜைகளையும் நேசித்து வந்தான். இதனால் அவனுடைய பிரஜைகள் தங்களுடைய அரசனுக்காக, தத்தம் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தனர். ஆனால் மோகன சிம்மனுடைய நற்குணங்களே அவனுக்குப் பெருத்த சத்துருவாகிவிட்டன. மதன சிம்மனுடைய கொடுமைகளைத் தாங்க மாட்டாது அவனுடைய குடிகளில் பெரும்பாலோர் மோகன சிம்மனுடைய ராஜ்யத்தில் வந்து குடியேறத் தொடங்கினர். இதைக் கண்டு மதன சிம்மன் மிகுந்த ஆத்திரம் கொண்டிருந்தான். சமயம் வாய்க்கும் போது மோகன சிம்மனை வலுச் சண்டைக் கிழுத்து அவனை ஒரேயடியாகத்தொலைத்து விட விரும்பினான் மதன சிம்மன்.

2

மதன சிம்மனுடைய ஜமீனுக்கும் மோகன சிம்மனுடைய ஜமீனுக்கும் எல்லை ஒன்றேதான். ஒரு முறை மதன சிம்மன் தன் ராஜ்யத்திலுள்ள ஒரு கோமுட்டியின் சொத்துக்களை ஜப்தி செய்யும்படி உத்திர விட்டான். ஆனால் சிப்பாய்கள் தன்னுடைய சொத்துக்களை ஜப்தி செய்ய வருமுன்னரே அந்தக் கோமுட்டி தன்னுடையசொத்துக்களை எல்லாம் விற்றுப் பணமாக்கிக் கொண்டு அஜயக் கோட்டைக்குச் சென்று விட்டான். மதன சிம்மனால் இத்தகைய அவமானத்தைப் பொறுக்க முடியுமா? உடனே அவன் தன்னுடைய சிப்பாய்களை அஜயக் கோட்டைக் கனுப்பி தப்பித்துக் கொண்டு போன கோமுட்டியின் பொருள்களைக் கொள்ளைக் கொண்டு வரும்படி ஏவினான். மதன சிம்மனுடைய சிப்பாய்கள் தன் ராஜ்யத்தினுள் நுழைந்து இத்தகைய அட்டூழியங்கள் செய்ததைக் கண்டு மிகவும் கோபமுற்ற மோகன சிம்மன் அந்தச் சிப்பாய்களைக் கைது செய்து சிறையிலிட்டு விட்டான். மோகன சிம்மன் தான் நியாயமான முறையில் நடந்து கொண்டு விட்டதாகக் கருதினான். ஆனால் அது தன்னுடைய நாசத்திற்கு ஏதுவாகி விட்டது என்பதை அவன் எப்படி அறிந்து கொள்ள முடியும்? மோகன சிம்மனை ஏதாவது ஒரு வம்புச் சண்டைக் கிழுக்க வேண்டுமென்றிருந்த மதன சிம்மனுக்கு அவன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த தருணம் கிட்டி விட்டது. சுற்று முற்றிலுமிருந்த ஜமீந்தார்களில் எவரும் மதன சிம்மனை விரோதித்துக் கொண்டது கிடையாது. அவுரங்கசீப்பின் ஆட்சிக்குத் தாங்கள் உட்பட்டுவிட்டோம் என்று கூற முன் வருவதிலும் அவர்கள் தயங்கினது கிடையாது. ஆனால் மோகன சிம்மன் அவர்களுடைய கும்பலில் சேர்ந்தவனல்ல. அவுரங்கசீப்பின் பரிவாரங்களுக்கும் மோகன

சிம்மனுக்கும் ஏற்கெனவே பெரும் பகை இருந்து வந்தது. அதனால் அவுரங்கசீப்பின் இனத்தார் இராஜ புத்திர சிற்றரசர்களின் உதவியைக் கொண்டு மோகன சிம்மனை வீழ்த்த தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். மதன சிம்மனுடைய சிப்பாய்கள் அஜபக் கோட்டையில் கைது செய்யப் பட்டு விட்டனர் என்ற செய்தியைத் தெரிந்து கொண்டு அவர்கள் மதன சிம்மனுக்கு கிழ்க் கண்டவாறு ஓர் கடிதத்தை எழுதி யனுப்பினர்:—

'மதன சிம்மா! நீ இவ்வளவு பெரிய ஜமீந்தாராக இருந்தும்கூட மோகன சிம்மனைக் கண்டு பயப்படுகிறாய் போலும். அவன் உன்னுடைய சிப்பாய்களைக் கைது செய்து உனக்குப் பெரியதோர் அவமானத்தை இழைத்திருக்கும் போது நீ வாளா விருப்பது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இதற்குப் பழி வாங்காமல் நீ சும்மாவிருப்பது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. பாதுஷாவினுடைய சேனைகள் உனக்கு உதவியாக வரத் தயாராக இருக்கிறது என்பதையும் நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீ உடனே சண்டைக்குப் புறப்பட்டு மோகன சிம்மனுடைய ஜமீனையும் உனக்குச் சொந்தமாக்கிக் கொள்.'

இந்தக் கடிதம் மதன சிம்மனுக்கு மிகுந்த உற்சாக மூட்டியது. உடனே அவன் தன்னுடைய மந்திரியை வரவழைத்து அவன் கையில் கடிதத்தைக் காட்டி 'இதைப் பாருங்கள்' என்றான்.

'மோகன சிம்மன் நம்முது சிப்பாய்களை கைது செய்து விட்டிருக்கிறான்.'

'அவனிடமிருந்து ஏதாவது கடிதங்கள் கிடைத்தனவா?'

'இல்லை மகாராஜ்.'

'இதற்காக நீர் என்ன யோசித்திருக்கிறீர்?'

'இன்னும் இந்த விஷயத்தைப் பற்றி நான் ஒரு முடிவிற்கும் வரவில்லை'

'இதற்குக் காரணம்?'

'அது மகாராஜாவுக்குத் தெரிந்ததுதான்.'

'எல்லைப் புறத்திலுள்ள நம்முடைய குடிகள்தான் இதற்குக் காரணம்!'

'ஆம்; மகாராஜாவே! எல்லைப்புறத்திலுள்ள நம்முடைய குடிகள் நம்மை விரோதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுவுமல்லாமல் அவர்கள் மோகன சிம்மனுக்காகச் சண்டை செய்யவும் தயாராக இருக்கிறார்கள். ஒரு வேளை நாம் யுத்தம் செய்ய ஆரம்பித்தால் இரண்டு எதிரிகளை எதிர்க்க வேண்டியிருக்கும். முதலாவது அராஜகப் பிரஜைகள்; இரண்டாவதாகத் தங்களுடைய உயிரை அரசனின் பொருட்டுத் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் மோகன சிம்மனுடைய பிரஜைகள்.'

'பாதுஷாவினுடைய சேனைகள் எதற்காக இருக்கின்றன? பாதுஷாவின் பக்கபலம் இருக்கும்போது நாம் எதற்காக விசாரப் படவேண்டும்?'

'அப்படியானால் பாதுஷாவின் யோசனை எப்படியோ?'

'யுத்தம் தொடங்க வேண்டியது தான்.'

'யாதொரு தகவலும் தெரிவிக்காமலா யுத்தத்தை ஆரம்பிப்பது?'

'அவ்விதம் செய்வதானால் நமக்கென்ன லாபம்?'

'ஒருகால் மோகன சிம்மன் பயந்து கொண்டு நம்முடைய கைதிகளை விடுவித்து விட்டால் மாத்திரம் போதாது. நம்முடைய சிப்பாய்களை கைது செய்ததற்குப் பதில் கூறவேண்டாமா?'

'தான் செய்த குற்றத்திற்காக மோகன சிம்மன் நம்மிடம் மன்னிப்பு கோரினாலும் கோரக் கூடும்.'

மதன சிம்மனுக்கும் இந்த யோசனை சரிதான் என்று பட்டது. மோகன சிம்மனை ஒரு கடிதத்தின் மூலம் அவன் தன்னுடைய சிப்பாய்களைக் கைது செய்ததற்குச் சமாதானம் கூறும்படி கேட்கலாம். எப்படியாவது மோகன சிம்மனை அவமானப் படுத்த வேண்டுமென்பது அவனுடைய அவா. உடனே மோகன சிம்மனுக்கு ஒரு கடிதம் எழுதப் பட்டது.

'இக் கோட்டையின் மகாராஜாவான மதன சிம்மன் அஜயக் கோட்டையின் அதிபதி மோகன சிம்மனுக்கு இக்கடிதத்தின் மூலம் தெரிவிப்பது என்னவென்றால் இக்கடிதம் கண்டவுடன் நம்முடைய சிப்பாய்களை விடுதலை செய்து, குற்றத்திற்காக மன்னிப்பு கோர வேண்டும். இல்லாவிடில் உடனே யுத்தம் தொடங்கப்படும்.'

3

மோகன சிம்மன் தன்னுடைய தர்பாரில் கொலுவமர்ந்திருந்தான். மதன சிம்மனுடைய லிகிதத்துடன் ஒரு தூதன் மோகன சிம்மனுக்கெதிரில் கொண்டு வரப்பட்டான். அவனைக் கண்டதுமே மோகன சிம்மனும் அவனுடைய சபையோர்களும் அக்கடிதத்திலுள்ள விஷயத்தை யூகித்தறிந்து கொண்டு விட்டனர் என்றாலும் எல்லோரும் மௌனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தனர். மோகன சிம்மன் அக்கடிதத்தை வாங்கி தன்னுடைய மந்திரியிடமளித்தான். மந்திரி கடிதத்தை வெளியிலெடுத்து மிகவும் சாவதானமாக அதைப் படித்தான். கடிதத்தில் மன்னிப்பு என்ற விஷயம் எழுதியிருப்பதைச் செவியுறும் போதே—மோகன சிம்மனுடைய சபையோர்களின் முகங்கள் கோபத்தினால் சிவந்தன. அவர்களுடைய கைகள் கத்தியின் பிடியைத் தயாராகப் பிடித்துக் கொண்டன. அவர்களில் ஒரே ஒருவர் மட்டும் கத்தியின் மீது கை வைக்காதிருந்தார். அவர் அப்படிச் செய்ய வேண்டியதுமில்லை. ஏனென்றால் அவரிடம் கத்தியே கிடையாது. பாவம்! அவர் அரசவையின் பண்டிதர்.

ராஜ பண்டிதர் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். மற்றவர் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகள் அவருடைய முகத்தில் தோன்றவில்லை.

கடிதம் படித்து முடிந்ததும் மோகன சிம்மனுடைய கண் சைகையானது தூதனை சபையை விட்டு அப்பால் வெளியேற்றியது.

'எல்லோரும் விஷயங்களை அறிந்து கொண்டீர்களா?' என்று மோகன சிம்மன் கம்பீரத்துடன் கேட்டான்.

'அறிந்து கொண்டோம்' என்று எல்லோரும் ஒரு முகமாக பதிலளித்தார்கள்.

'இனி என்ன செய்வது?'

'க்ஷத்திரியர்களாகிய நாம் நம்முடைய கடமையைத்தான் செய்ய வேண்டும். இது வெறும் கடிதமல்ல. நம்மை யுத்தத்திற் கழைப்பதற்கே இம்மாதிரியான கடிதம் எழுதப்பட்டுள்ளது. கடிதம் மகாராஜாவுக்கு மாத்திரமல்ல. எல்லாப் பிரஜைகளுக்குமேதான் எழுதப் பட்டுள்ளது. இத்தகைய நிலைமையில் நம்முடைய கடமையும், உறுதியான பதிலும்— 'யுத்தம்' என்பதேயாம்' என்று வீர இளைஞன் ஒருவன் ரோஷமேலிட்டு வீர வாசகம் கூறினான்.

'யுத்தம்! யுத்தம்! சபை முழுவதும் யுத்தம் என்ற கோஷத்தின் எதிரொலி எழுந்தது. யுத்தம், யுத்தம் என்று ஒவ்வொருவனுடைய உதடுகளும் முணு முணுத்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு வனுடைய கைகளும் கத்தியின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டிருக் கின்றன. கோபத்தினால் கண்களும் கொவ்வைக் கனியைப்போல் சிவந்து போயின். மோகன சிம்மன் 'தன்னுடைய பிரஜைகள் யுத்தத்திற்குத் தயாராக இருப்பதைக் கண்டு ஆனந்த மெய்தினான்.

'அப்படியானால் கைதிகளை விடுவிக்கக்கூடாது தான்' என்றான் மோகன சிம்மன்.

'ஆம்' என்று எல்லோரும் ஆமோதித்தனர்.

ஆனால் சபையோர்களின் ஆரவாரம் அடங்கியதும் 'மகாராஜ்' என்று ஒரு குரல் எழுந்தது.

சபையில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. சபையோர் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கினர். யுத்தம் வேண்டாமென்று கூறக்கூடியவர் யார் என்று எல்லோரும் மௌனமாக இருந்தனர்.

'மகாராஜ்' என்று மறுபடியும் அக்குரல் கேட்ட பொழுது பண்டிட்ஜீ தான் அவ்விதம் சொன்னார் என்பது வெளியாயிற்று.

'சொல்லுங்கள் பண்டிட்ஜீ' என்றான் மோகன சிம்மன். 'கைதிகளை விடுவித்தலே நலம் என்று நான் நினைக்கிறேன்.'

'ஆனால் சபையோர்கள் இஷ்டப்படவில்லையே'.

'ஒரு வேளை தாஙகள் விரும்பினால்..................'

'எது என்னுடைய பிரஜைகளின் இச்சையோ அதுவே என்னுடைய இச்சையாகும்.'

'ஆனால்...............

'சொல்லுங்கள்'

'இதன் முடிவு எவ்வளவு பயங்கரமானது என்பதைச்சற்றே சிந்தித்துப் பாருங்கள். மதன சிம்மனுடைய சேனைகளோடு பாதுஷாவின் சேனைகளும் சேர்ந்திருக்கின்றன. சமுத்திரம் போன்று திரண்டு வரக்கூடிய பாதுஷாவினுடையவும் மதன சிம்மனுடையவும் சேனையின் வேகத்தை நம்முடைய சிறிய சேனை எவ்விதம்

தாங்க முடியும்? யுத்த களத்தில் அஜயக் கோட்டையின் வீரர்களுடைய இரத்தம் பாயும். சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நமது பிரஜைகள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்க நேரிடும்.'

பண்டிதருடைய வார்த்தையைக் கேட்ட சபையோர்களுடைய முகத்தில் கோபமும் வெறுப்பும் தோன்றின. ஆனால் மகாராஜாவோ பண்டித்ஜீயினுடைய அபிப்பிராயத்தை மிகவும் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பண்டிதர் பேசி நிறுத்தியதும் மகாராஜா சொல்லலானார்:—

'பண்டிச்ஜீ, தாங்கள் கூறியதெல்லாம் க்ஷத்திரியத் தாயின் மக்களான இராஜபுத்திர வீரர்களாகிய எங்களுக்கேற்றதல்ல. முதலில் நாங்கள் க்ஷத்திரிய வீரர்கள். பிறகுதான் மனிதர்கள். நாங்கள் க்ஷத்திரியத் தாயினுடைய பாலைக் குடித்து வளர்ந்தவர்கள். எங்களுடைய ஒவ்வொரு நரம்பிலும் க்ஷத்திரிய இரத்தம் பாய்ந்து கொண்டிருக்கிறது. சுகம், ராஜ்யம், தனம், ஸ்திரீ, புத்திரர் இவை எல்லாவற்றைக் காட்டிலும் கீர்த்தி, கௌரவம், சொன்ன சொல் தவறாமை இவையே மேலானது. இவைகளில் நமக்குப்பற்றுதல் இல்லாமற்போயின் மற்ற வஸ்துக்களினால் நமக்கென்ன லாபம்? மதன சிம்மன் கடிதத்தின் வாயிலாக நம்மை எவ்வளவோ தூரம் அவமானப் படுத்தி விட்டான். என்பதைக் கவனித்தீர்களா இராஜபுத்திரர்களாகிய எங்களால் இத்தகைய அவமானத்தை எவ்விதம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? உயிரையே பெரிதென மதித்து நாம் அடைக்கலம் புக முன் வந்தால் அது நம்முடைய தர்மத்திற்குத் தகுமா? பண்டிதரே! மதன சிம்மனுடைய சேனைகளும், பாதுஷாவினுடைய சேனைகளும் ஒருங்கே திரண்டு வந்தாலும் யுத்தத்தில் நம் சோதரர் மடிந்து வீழ்ந்தாலும், நம்முடைய சுதந்திரம் யாவும் பறிமுதல் செய்யப் பட்டுப் போயினும் க்ஷத்திரியர்களாகிய நாம் அவமானத்தைப் பொறுக்க மாட்டோம். நாம் யுத்தத்தின் முடிவை எதிர்பார்க்க மாட்டோம். ஆனால் நாம் அதைத்தான் ஏன் கவனிக்க வேண்டும்? நாம் எதைச் செய்தாலும் அதன் பலனைக் கோரிச் செய்வதில்லை. நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற் காகவே நாம் போராடுகிறோம். இதுவே இராஜ புத்திரர்களாகிய எங்கள் கடமை. நாம் யாரையும் அவமானம் செய்ய மாட்டோம். எங்களுக்கிழைக்கப்படும் அவமானத்தையும் சகிக்க மாட்டோம்.'

மோகன சிம்மன் வீராவேசத்துடன் பேசியதைச் செவியுற்று சபையோர் பலத்த கரகோஷம் செய்தனர். பண்டிதர் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. சபையோர்கள் சந்தோஷத்துடன் தத்தம் கத்திகளை கட கட வென்று சப்தித்த போது பாவம்! பண்டித்ஜீ தம் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டிருந்தார்.

தொடரும்.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

—வெ. சா.

பிரசங்கம் — 4

தேசீய உணர்ச்சியைத் தட்டியெழுப்புவது எப்படி?

நமது தேசிய உணர்ச்சியைத் தட்டி யெழுப்ப நாம் என்னென்ன முறைகளைக் கையாளலாம்? இரண்டு வழிகள் எனக்குப் புலப்படுகின்றன. முதலாவது, நமது நாற்பது கோடி ஜனங்களுக்கும், 'நாம் எந்நிலையில் இருக்கிறோம்' என்று விழித்துப் பார்க்கக்கூடிய உணர்ச்சியை உண்டுபண்ண வேண்டும். சீனர்களாகிய நாம் இப்பொழுது ஒரு நெருக்கடியில் இருக்கிறோம். இந்தத் துன்பத்திலிருந்து இன்பத்தைக் காண வேண்டும்; மரணத்திலிருந்து வாழ்க்கையைக் காணவேண்டும். முதலில் நாம் தெளிவாகப்பார்க்கிற சக்தியைப் பெற வேண்டும். பிறகுதான் ஏதேனும் காரியங்கள் செய்யத்தொடங்க வேண்டும். 'விஷயங்களைத் தெரிந்து கொள்வதுதான் கஷ்டம். காரியங்கள் செய்வதென்னவோ சுலபம்' என்ற வாசகத்தின் உண்மையை நீங்கள் உணர வேண்டுமானால், எனது பிரசங்கங்களைத் தொடர்ந்து நீங்கள் படிக்க வேண்டும், ஆதியில், சீனா நாம் சறுக்குப்பாதையில் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே இருந்தது. அதனால் அது அழிந்து படத் தொடங்கியது. சிறிது முன்னோக்கிப் பார்த்திருக்குமானால் அது இந்த ஸ்திதிக்கு வந்திராது. 'எந்த தேசத்திற்கு அந்நிய நாட்டுச் சத்ருக்கள் இல்லையோ, வெளிப்புறத்து ஆபத்துக்கள் இல்லையோ அந்த நாடு அழிந்து போவது நிச்சயம்' என்ற பழமொழி ஒன்றுண்டு 'ஒரு நாடு தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் அதற்குப் பல துன்பங்கள் வரவேண்டும்' என்பது மிகவும் அநுபவ பூர்வமான வாசகம். எந்த ஒரு நாடு, தனக்கு வெளி ஆபத்துக்கள் இல்லையென்றும், தான் மிகவும் பந்தோபஸ்துடனேயே இருப்பதாகவும்தான், உலகத்திலுள்ள நாடுகளில் மிகவும் பலமுள்ள நாடென்றும், அந்நியர்கள் இதன் மீது படை யெடுக்கத் துணியார்களென்றும், அதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையில்லையென்றும் கருதிக் கொண்டிருக்கிறதோ அந்த நாடு சிதறிப் போவது திண்ணம். ஒரு நாட்டுக்குத் துன்பங்கள் ஏற்பட்டால், அந்தத் துன்பங்கள் இன்னின்னவையென்று ஜனங்களுக்குத் தெரிந்ததும்

அவர்களுடைய சக்திகளெல்லாம் எழுப்பப் படுகின்றன. வீரச்செயல்கள் பல புரிவதற்கு அவை நம்மை உந்துகின்றன. ஆகையால் இப்பொழுது நாம் எந்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இப்பொழுதுள்ள நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல் தேசிய உணர்ச்சியைப் புதுப்பிக்கத் தொடங்கினோமானால் வருங் காலத்திலே நமக்கிருக்கிற நம்பிக்கையையும் நாம் இழந்து விடுவோம்; சீன ஜாதியே அழிந்து பட்டுப்போகும்.

நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிற அழிவுச் சக்திகள் தாமென்ன? அவை எந்தெந்தத் திசையிலிருந்து நம்மை நோக்கி வருகின்றன? அவை, வல்லரசுகளிடமிருந்தே நம்மை நோக்கி வருகின்றன. முதலாவது அரசியல் ஆதிக்கம்; இரண்டாவது பொருளாதார ஆதிக்கம்; மூன்றாவது வல்லரசு நாடுகளில் ஜனத்தொகை பெருகிக் கொண்டிருத்தல் ஆக வெளிப்புறத்திலிருந்து வரும் இந்தமூன்று அழிவுச் சக்திகளும் ஏற்கனவே நம் தலைமீது வந்து அமர்ந்திருக்கின்றன. நமது ஜனங்கள் மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறார்கள். முதல் ஆபத்து—அதாவது அரசியல் ஆதிக்கம் பெற்று ஒரு தேசத்தை அழித்து விடுவது என்பது—நமக்கு எந்த நாளிலும் ஏற்படலாம். இந்த அரசியல் ஆதிக்கம் இரண்டு வழிகளில் ஒரு தேசத்தை அழித்து விடும். ஒன்று ராணுவ பலத்தின் மூலம்; மற்றொன்று ராஜதந்திரத்தின் மூலம். ராணுவ பலத்தைக் கொண்டு ஒரு தேசத்தை எப்படி அழித்து விடமுடியும் என்று நீங்கள் கேட்பீர்களானால் சரித்திரத்தைப் பாருங்கள் என்று சொல்வேன். யய்மென் என்ற இடத்தில் நடைபெற்ற ஒரே யுத்தத்தில் மங்கோலியர்கள், சூங் அரசவமிசத்தை அழித்து விட்டனர். யாங்சௌ யுத்தத்தில் மிங் ராஜவமிசம் அழிந்து பட்டது. அந்நிய நாட்டுச் சரித்திரங்களைத் தான் பாருங்களேன். வாட்டர்லூ யுத்தத்தில் நெப்போலியனுடைய ஏகாதிபத்தியமே சிதறுண்டு போய் விட்டது. ஸெடான் என்ற இடத்தில் ஏற்பட்ட யுத்தத்தில் மூன்றாவது நெப்போலியனுடைய ஏகாதிபத்தியமே இல்லாமற் போய் விட்டது. இப்படி, ஒரு யுத்தத்திலே ஒரு தேசம் வீழ்ந்து படுமானால், சீனாவுக்கு தினந்தோறும் ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதென்று நான் சொல்வேன். ஏனென்றால் நமது ராணுவம், கப்பற்படை, பாதுகாப்பு ஸ்தலங்கள் முதலியன, சத்துருக்களின் எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொள்ளக் கூடிய ஸ்திதியில் இல்லை. அந்நியத் துருப்புகள் பிரவேசித்து எந்த நிமிஷத்திலும் நம்மைத் தோற்கடித்து விடலாம்.

நம்மை அழித்து விடக் கூடிய சமீபத்தில் இருக்கும் தேசம் ஜப்பான் தான். சமாதான காலத்தில் அங்கு பத்து லட்சம் சைந்நியம் இருக்கிறது. யுத்த காலத்தில் முப்பது லட்சம் துருப்புகளை அது திரட்டக் கூடும். ஜப்பானுடைய கப்பற்படை பலமும் மிக அதிகம். கிரேட் பிரிட்டன், அமெரிக்கா முதலிய வல்லரசுகளுக்குச் சமதையாக அது தன் கப்பற்படை பலத்தைப்பெருக்கிக்கொள்ளக் கூடும். ஆனால் 1926ம் வருஷத்தில் நடைபெற்ற ஆயுதப் பரிகரண மகா நாடாகிய வாஷிங்டன் மகா நாட்டில் மூன்று

லட்சம் நிறையுள்ள கடற்படையையே ஜப்பான் வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித் திருக்கிறது. ஜப்பான்வசம் தற்போது இருக்கும் யுத்தக் கப்பல்கள் மிகவும் பலமுள்ளவை. உதாரணமாக, சீனாவிலுள்ள காண்டன் நகரத்திற் கருகாமையிலிருக்கும் பய்—வூ—தான் என்ற துறைமுகப் பட்டினத்திற்கு இரண்டு நாசகாரிக் கப்பல்களை ஜப்பான் அனுப்பியது. அவைகளை எதிர்த்து நிற்கவல்ல கப்பற்படை சீனாவின் வசத்திலில்லை. இந்த மாதிரியான நாசகாரிக் கப்பல்கள் ஜப்பான் வசம் நூறுக்கு மேல் இருக்கின்றன. இந்தக் கப்பல் பலத்தோடு, ஜப்பான் சீனாவை நோக்கி வருமானால் நம்முடைய பாதுகாப்பு ஸ்தலங்கள் தூள் தூளாகி விடும் இறந்து போகும் படியாக நாம் அடிக்கப்படுவோம். தவிர கடற்கரையோரமாக நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள பாதுகாப்பு ஸ்தலங்கள் போதுமான பந்தோபஸ்துடையனவாயில்லை. எனவே, நமது கிழக்குப் புறத்துச் சிநேகித நாடாகிய ஜப்பான், ஒரு நிமிஷத்தில் நம்மை வந்துதாக்கக் கூடிய ராணுவபலமும் கடற்படை பலமும் பெற்றிருக்கிறது. இப்பொழுது அது நம்மைத்தாக்கவில்லை. ஏனென்றால் தகுந்த காலம் வரவில்லை போலிருக்கிறது. ஆனால் அது தாக்குமானால் எந்த நாளிலும் சீனா அழிந்து போக வேண்டியதுதான். ஜப்பானில் ராணுவத்தைத் திரட்டி சீனாவின் மீது படையெடுப்பதற்கு பத்து நாட்களுக்கு மேல் பிடிக்காது. எனவே, சீனா ஜப்பானுடைய அரசியல் தொடர்பை நிறுத்திக் கொள்ளுமானால், பத்து நாட்களில் அது ஜப்பானால் அழிக்கப்பட்டுவிடும்.

பசிபிக் மகா சமுத்திரத்திற்குக் கிழக்குப் பக்கமாகவுள்ள அமெரிக்காவை எடுத்துக் கொள்வோம். வாஷிங்டன் மகா நாட்டிற்கு முந்தி, ஜப்பானுடைய கப்பற் படையைவிட மூன்று மடங்கு அதிகமான கப்பற் படை அதற்கு இருந்தது. ஆனால் மேற்படி மகா நாட்டிற்குப் பிறகு அதன் யுத்தக் கப்பல்களின் நிறை ஐந்து லட்சம் டன்னுக்குமேல் இருக்கக்கூடாதென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் எல்லாருக்கும் கல்வி போதிக்கப்படுகிறது. அங்கு ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் அங்குக் கட்டாயம் பள்ளிக்கூடம் போயாக வேண்டும். பெரும்பாலோர் உயர்தரக் கல்வி பெற்றவராயிருக்கின்றனர். உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார், எப்பொழுது வேண்டுமானாலும் தங்கள் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். 1914ம் வருஷ ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கா சேர்ந்துகொண்ட போது, அது ஒரு வருஷ காலத்திற்குள் இருபது லட்சம் படை வீரர்களை யுத்த களத்திற்கு அனுப்ப முடிந்தது. சமாதான காலத்தில் அமெரிக்காவின் சைந்நிய பலம் மிகக் குறைவுதான். ஆனால் யுத்த காலத்தில் அது ஏராளமான படைகளைத் திரட்ட முடியும். சீனாவும் அமெரிக்காவும் அரசியல் தொடர்பை அறுத்துக் கொள்ளுமானால் படை திரட்டிக்கொண்டு சீனாவைத் தாக்க அமெரிக்காவுக்கு ஒரு மாதம் தேவையாயிருக்கும். எனவே, அமெரிக்கா

சீனாவை ஒரு மாத காலத்தில் அழித்துவிட முடியும்.

இனி அட்லாந்திக் மகா சமுத்திரத்திலுள்ள பிரிட்டனை எடுத்துக் கொள்வோம். 'கடலரசி' என்று பிரிட்டனுக்குப் பெயர். அதாவது அதன் கப்பற் படை பலம் அவ்வளவு அதிகம் என்று அர்த்தம். ஆனால் வாஷிங்டன் மகா நாட்டுக்குப் பிறகு, அதன் யுத்தக்கப்பல்கள் ஐந்து லட்சம் டன் நிறையுள்ளனவாயிருக்க வேண்டுமென்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. சீனாவிலிருந்து நாற்பது, ஐம்பது நாள் தூரப்பிரயாணத்தில் இங்கிலாந்து இருக்கிறது. தவிர, சீனாவிலேயே, ஹாங்காங் போன்ற துறை முகப்பட்டினங்கள் அதன் சுவாதீனத்தில் இருக்கின்றன. ஹாங்காங் துறைமுகத்தைப் பிரிட்டிஷார் பலப்படுத்தி வருகின்றனர். இந்தத் துறைமுகத்திலிருந்து கொண்டு, பிரிட்டிஷார், சீனாவின் தெற்கு மாகாணங்களில் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கலாம். தவிர, ஹாங்காங்கிலேயே பிரிட்டிஷாருடைய ராணுவப் படையும், கப்பற்படையும் நிரந்தரமாக இருக்கின்றன. இந்தச் சிறு படையைக் கொண்டு சீனாவை அழித்துவிட முடியாதாயினும், அந்தச் சிறுபடையையும் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி நம்மிடத்தில் இல்லையே. சீனாவுக்குச் சமீபத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள இருக்கின்றன. இந்த நாடுகளிலிருந்தும் பிரிட்டன் படை திரட்டிக் கொண்டு வரலாம். ஆதலின் சீனாவுக்கும் இங்கிலாந்துக்கும் அரசியல் தொடர்பு அற்றுப் போகுமானால், இரண்டு மாத காலத்திற்குள், இங்கிலாந்து சீனாவை அழித்துவிட முடியும்.

ஐரோப்பாவின் மற்றொரு வல்லரசாகிய பிரான்ஸை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் ராணுவ பலம் மிக அதிகம். சுமார் மூவாயிரம் ஆகாய விமானங்கள் அதற்கு இருக்கின்றன. பிரெஞ்சுக்காரருக்கும், சீனாவுக்குச் சமீபத்தில் அன்னாம் என்ற பிரதேசம் சொந்தமாயிருக்கிறது. பிரெஞ்சுக்காரர், அந்த அன்னாம் பிரதேசத்திலிருந்து யுன்னான் மாகாணத்தின் தலை நகரத்திற்கு ரெயில் போட்டுக் கொண்டு வருகின்றனர். எனவே, பிரான்சுக்கும் சீனாவுக்கும் அரசியல் தொடர்பு அற்றுப்போகுமானால், பிரெஞ்சுத் துருப்புகள் நாற்பது ஐம்பது நாட்களில் சீனாவுக்குள் பிரவேசிக்க முடியும். அதாவது, இங்கிலாந்தைப் போலவே, பிரான்சும் சீனாவை இரண்டு மாதத்திற்குள் அழித்துவிட முடியும்.

மேலே கூறியவற்றால் என்ன தெரிகிறதென்றால், எந்த ஒரு வல்லரசும், ராணுவ பலத்தைக் கொண்டுதான் சீனாவை உடைக்க முடியும் என்று தெரிகிறது. அப்படியிருந்தும் சீனா, இன்னும் ஏன் உயிரோடு வைக்கப்பட்டிருக்கிறது? சீனா, மிகுந்த தற்காப்புடையதாக இருக்கிறதென்ற காரணத்தினாலா? இல்லவே இல்லை. எல்லா வல்லரசுகளும் சீனாவைச் சுரண்ட வேண்டுமென்று ஆசைப்படுகின்றன. எல்லா நாடுகளும் சீனாவைக்கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு விட்டுக்கொடுக்க மறுக்கின்றது. ஒவ்வொரு வல்லரசும், சீனாவில் தங்கள் பலத்தை

நிறுவை போட்டுப் பார்க்க விரும்புகின்றன. அதனால்தான் சீனா அப்படியே இன்னும் வைக்கப்படிருக்கிறது. சீனாவில் தங்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகளைப்பற்றி வல்லரசுகளுக்கிடையே பரஸ்பரம் போட்டியும் பொறாமையும் இருப்பதாலும், இவைகளின் பலம் சீனாவில் சமன் வயப்பட்டு இருக்குமாதலாலும், சீனாவில் வல்லரசுகள் ஒற்றுமைப்பட்டிராததாலும், அதுவரை, சீனா யாரையும் எதிர்த்துப் போராட வேண்டிய முயற்சியில் இறங்கவேண்டிய அவசியமில்லை யென்றும் சிலர் கருதுகின்றனர். இங்ஙனம் தன்னம்பிக்கையை இழந்துவிட்டு மற்றவர்களை நம்பி வாழ்வது, வானத்தைப் பார்த்துக் கொண்டே அதிருஷ்டத்தைப் பரிசோதனை செய்வது போலில்லையா? இங்ஙனம் சர்வாநுகூல நம்பிக்கை கொள்வதனால் எவ்வித பயனும் ஏற்படாது. சீனாவை அழித்துவிட வேண்டுமென்ற எண்ணம் என்னவோ, வல்லரசுகளுக்கு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதற்காக ராணுவ பலத்தை உபயோகிப்போமானால், 1914ம் வருஷத்து யுத்தத்தைப்போல மற்றொரு யுத்தம் ஏற்பட்டு, அதனால் பலதரப்பினருக்கும் தோல்வியும் நஷ்டமும் உண்டாகி இறுதியில் ஒருவிதமான லாபமும் ஏற்படாதே யென்பதற்காகவே, வல்லரசுகள் தயங்குகின்றன. அந்நிய வல்லரசுகளின் ராஜதந்திரிகள் இதனை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ராணுவ பலத்தை உபயோகித்தால் மற்றோர் உலக யுத்தம் உண்டாகும் என்பது அவர்களுக்குத் தெரியும். சீனாவில் தங்களுடைய உரிமைகள் என்னென்ன என்பதைப்பற்றி, வல்லரசுகளுள் ஒரு சமரஸம் ஏற்படுகிற தென்றே வைத்துக் கொண்டாலும் சீனாவை எந்தவிதமாக ஆள்வது என்னும் விஷயத்தைப்பற்றி, வல்லரசுகளுக்குள் அபிப்பிராய பேதங்கள் உண்டாகும். இதனால் அநாவசியமான சச்சரவுகள் உண்டாகி சேதங்கள் ஏற்படும். இதனை யறிந்தே, வல்லரசுகள், தங்களுடைய யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்ளத் தீர்மானித்தன. ஆயுதப் பரிகரண மகா நாட்டில் ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வல்லரசுகள், தங்கள் கப்பற் படையின் நிறையைக் குறைத்துக் கொண்டன. யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்வதற்காகவே இந்த (வாஷிங்டன்) மகாநாடு கூட்டப்பட்டதே யானாலும், உண்மையில் சீனப் பிரச்னையைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்காகவே இந்த மகாநாடு கூடியது. சீனாவில் தங்களுடைய உரிமைகளையும் சலுகைகளையும் பகிர்ந்து போட்டுக் கொள்வதை எப்படி தடுத்துக் கொள்ள முடியும்?

ஒரு நாட்டை அழிப்பதற்கு இரண்டு முறைகள் கையாளப்படுகின்றனவென்று நான் மேலே கூறினேன். ஒன்று ராணுவ பலம்; மற்றொன்று ராஜதந்திரம். ராணுவ பலத்தை உபயோகிப்பது என்றால், பீரங்கி, குண்டு, துப்பாக்கி முதலியவைகளை உபயோகிப்பது. இவற்றை எப்படி எதிர்த்து நிற்ப தென்பதைப் பற்றி நமக்கு ஒருவாறாகத் தெரிந் திருக்கிறது. ராஜ தந்திர முறையைக் கையாள்வ தென்றால், காகிதத்தையும் எழுதுகோலையும் கொண்டு சீனாவைத் தகர்த் தெறிவது. இதனை எதிர்த்

து போராட நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. உதாரணமாக, வாஷிங்டன் மகா நாட்டுக்கு சீனாவும் தன் பிரதிநிதிகளை அனுப்பியது. அந்த மகா நாட்டில் நிறை வேற்றப் பட்ட தீர்மானங்கள் சீனாவுக்குச் சாதகமானவை யென்று கூறப்பட்டன. ஆனால் மகாநாடு முடிந்தவுடன், அந்நிய நாட்டுப் பத்திரிகைகள் யாவும், ஒரே குரலில், சீனா, சர்வதேசங்களின் ஆதிக்கத்தில் இருக்க வேண்டுமென்புதைப் பற்றிப்பேச ஆரம்பித்தன. இந்தப் பேச்சு வர வர வலுக்கும் என்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. இங்ஙனம் வல்லரசுகள் ஒரே முகமாக நினைப்பதன் பயனாக, சீனாவை வீழ்த்துவதற்கு ஏதேனும் ஒரு முறை காணப்படும். இனி, வல்லரசுகள், சீனாவுக்காக, ராணுவத்தை நகர்த்த வேண்டாம்; அல்லது கப்பற் படையைக் கொண்டு வர வேண்டாம். காகிதமும் எழுது கோலும் தான் தேவை. வல்லரசுகள் ஒன்று சேர்ந்து பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விடுமானால், ஓரே நாளில் சீனாவை அழித்து விடக்கூடும். இந்த மாதிரி சம்பவங்கள் இதற்கு முன் நடை பெற்றிருக்கின்றன. ஜெர்மனி, ருஷ்யா, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்று கூடி ஒரே நாளில் செய்து கொண்ட முடிவின் விளைவாக போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டன. அதே மாதிரி கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நான்கு வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து ஒரே நாளில் ஒரு தீர்மானத்தைச்செய்து கொண்டு சீனாவைப்பங்கு போட்டுக் கொள்ளக் கூடும. ஒரு தேசத்தை, அரசியல் சக்திகள் சேர்ந்து அழிக்கக் கூடும் என்ற திருஷ்டியில் நாம் பார்க்கிற போது, சீனா, இப்பொழுது பெரிய ஆபத்திலிருக்கிறது.

இரண்டாவது ஆபத்து பொருளாதார ஆதிக்கம். இதைப்பற்றி ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கின்றேன். பிரதி வருஷமும் 1,200,000,000 டாலர்கள், சீனாவிலிருந்து அந்நியர்கள் கொண்டு போகிறார்கள். இந்த நஷ்டமோ ஒவ்வொரு நாளும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. சீனாவின் அந்நியநாட்டு வியாபாரம் பத்து வருஷத்திற்கு முந்தி 200,000,000 டாலரா யிருந்தது. இப்பொழுது 500,000 000 டாலரா யிருக்கிறது. அதாவது பத்து வருஷத்திற் கொருதரம் நூற்றுக்கு 250 சதவிகிதம் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. அடுத்த பத்து வருஷத்தில் 3,000,000,000 டாலரை நாம் இழந்து நிற்போம். இதனை நமது நாற்பது கோடி ஜனத் தொகைக்கு ஈவு போட்டுப் பார்த்தால், வருஷத்திற்குத் தலைக்கு 7½ டாலர் ஆகிறது. அதாவது ஒவ்வொரு சீனாக்காரரும் அந்நிய நாடுகளுக்கு வருஷத்திற்கு 7½ டாலர் கொடுக்க வேண்டியதா யிருக்கிறது. அதாவது தலைவரி 7½ டாலர். நமது ஜனத் தொகையில் இருபது கோடி எண்ணிக்கையுடைய பெண்மக்களை விலக்கி விட்டோமானால், ஒவ்வோர் ஆண்மகனும் 15 டாலர் விகிதம் கொடுக்க வேண்டியவனா யிருக்கிறான். இந்த ஆண் மக்களிலேயே, வயதானவர்களையும், இளைஞர்களையும் நீக்கி விட்டால், மத்திய வயதினராயுள்ளவர் மட்டும், வருஷத்திற்கு சராசரி 45 டாலர் விகிதம் அந்நிய நாடுகளுக்குத் தலைவரி கொடுக்க வேண்டியதா யிருக்கிறது. இந்

தத் தலைவரி, வருஷத்திற்கு வருஷம் அதிகப்படுமே தவிர குறையாது. இனியும் நாம் விழித்துக் கொள்ளாமல், இப்பொழுது இருக்கிற மாதிரியே இருந்து கொண்டிருந்தோமானால், அந்நிய ராஜதந்திரிகள் நம்மைப் பற்றிக் கவலைப்படாவிட்டாலும், நாம் பத்து வருஷ காலத்திற்குள் நிச்சயம் அழிந்து போவோம். இப்பொழுது நமது ஜனங்கள் ஏழைகளாயிருக்கிறார்கள்; சோர் வடைந்து கிடக்கிறார்கள். இன்னும் பத்து வருஷத்திற்குப் பிறகு ஜனங்களுடைய ஏழ்மை எவ்வளவு அதிகமாகி விடும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இப்பொழுதுள்ள கடன் சுமையை விட இரண்டரை மடங்கு அதிகமான கடன் சுமை நம் தலைமீது ஏறுமானால், நாம் உயிர்வாழ முடியும் என்று கருதுகிறீர்களா?

1914ம் வருஷத்திற்குப் பிறகு ஐரோப்பிய வல்லரசுகள், அமைதியாயிருக்கவே விரும்புமென்றும், அப்பொழுது சீனர்களாகிய நாம் வல்லரசுகளின் ராணுவ ஆதிக்கத்தினின்று தப்பித்துக் கொள்ளலாமென்றும் சிலர் கருதலாம். ஆனால் அரசியல் ஆதிக்கத்தினின்று தப்பித்துக் கொள்ள முடியாதே. அதிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் கொள்ளலாமென்றே வைத்துக் கொள்வோம். நமது ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் பொருளாதார ஆதிக்கத்தினின்று விடுதலை செய்து கொள்ள முடியுமா?

நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மூன்றாவது ஆபத்தைப் பற்றிச் சிறிது கூறுகிறேன். சென்ற நூறு வருஷங்களாகச் சீனாவின் ஜனத் தொகை அதிகப்படவேயில்லை. ஜனப் பெருக்கத்திற்கு நாம் ஏதேனும் ஏற்பாடு செய்தாலன்றி, இன்னும் நூறு வருஷத்தில் ஜனத் தொகை பெருகும் என்று சொல்ல முடியாது. சென்ற நூறு வருஷத்தில் அமெரிக்காவின் ஜனத் தொகை ஒன்றுக்குப் பத்து மடங்காகவும், ருஷ்யா நான்கு மடங்காகவும், இங்கிலாந்தும் ஜப்பானும் ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிகமாகவும், ஜெர்மனி ஒன்றுக்கு ஒன்றரை மடங்கு அதிகமாகவும், பிரான்ஸ் ஒன்றுக்குக் கால் விகிதமும் அதிகப்பட்டுக் கொண்டிருக்க நம்முடைய ஜனத் தொகையோ அதே நிலையில் இருக்கிறது. சீனாவின் புராதன ஜாதியினர் அனைவரும் அழிந்து போய் விட்டனர். எனவே, ஜனத் தொகைப் பெருக்க விஷயத்திலும், நமது எதிர்காலம் மிகவும் சூனியமாகவே இருக்கிறது.

மூன்றுவிதமான ஆபத்துகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆபத்துக்கள் வெகு சமீபத்திலேயே இருக்கின்றனவென்பதையும், இவைகளினால் நமக்கு என்னென்ன சீர்கேடுகள் ஏற்படுமென்பதையும் நமது ஜனங்கள் நன்றாக உணர வேண்டும். இவைகளைத் தெரிந்து கொண்ட பிறகு, நாம் செய்ய வேண்டியதென்ன? 'நம்பிக்கை யிழந்த மிருகம், இன்னும் சண்டை செய்யும்' என்ற பழமொழியொன்றுண்டு. ஆதலால் நமது சத்ருக்களுடன் கடைசிப் போராட்டமொன்றை நடத்த வேண்டும். நம்மால் சண்டை போட முடியுமா? நிச்சயம் போட முடியும். அந்தச் சக்தி இருக்குமானால், நமது மரணத்தின் கடைசி

நேரமும் சமீபித்திருக்கிறதென்ற நம்பிக்கையும் நமக்கு ஏற்பட வேண்டும். நமது தேசிய உணர்ச்சியைத் தட்டி யெழுப்ப வேண்டுமானால், நாற்பது கோடி மக்களுக்கும், அவர்களுடைய மரண காலம் சமீபித்து விட்டது என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான், அவர்களுக்குச் சண்டை போட வேண்டுமென்ற துணிவு உண்டாகும். நாற்பது கோடி ஜனங்களும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்வார்களானால், நமது தேசிய உணர்ச்சியைப் புதுப்பித்துக் கொள்வதில் எவ்வித கஷ்டமும் இராது.

சீனர்கள் மணல் மூட்டை மாதிரி என்று அந்நியர்கள் கூறுகிறார்கள். தேசிய உணர்ச்சி விஷயத்தில் இது சரிதான். ஆனால் குடும்ப ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை முதலியன நம்மிடையே வேரூன்றி யிருக்கின்றன. உதாரணமாக, இரண்டு சீனர்கள் தெருவிலே சந்தித்துப் பேசுகிறபோது, பரஸ்பரம் குடும்பப் பெயரை விசாரித்துக் கொள்வார்கள். ஒரே வகுப்பினரா யிருந்தால் அவர்களுக் குள்ளே ஏற்படும் பரஸ்பர அன்பு எவ்வளவு அருமையானது. இந்த வகுப்புணர்ச்சியையே தேசிய உணர்ச்சியாக விருத்தி செய்து கொண்டோமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

மேனாட்டில் தனிப்பட்டவர்களுடைய உரிமைகள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. சட்டங்களும், தனிப்பட்டவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கே ஏற்பட்டிருக்கின்றன. வழக்குகளில் ஒருவனுடைய குடும்ப அந்தஸ்து என்னவென்று கேட்கப் படுகின்றன. இந்தத் தனிமனிதனே பின்னர் நாட்டின் முக்கிய அம்சமாகிறான். இந்தத் தனி மனிதனுக்கும் நாட்டுக்கும் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை. இதுதான் தேசிய உணர்ச்சி. சீனாவுக்குள்ளே பல வகுப்புகள் இருக்கின்றன. இந்த வகுப்புகளுக்குள் அடிக்கடி பல போராட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த வகுப்புப் போராட்டங்களை ஒழித்து, அந்நியர்களை எதிர்த்து நிற்கும் போராட்டமாக மாற்றி யமைத்தோமானால் எவ்வளவோ நன்றாயிருக்கும்! நமக்குள்ளே ஒற்றுமை இருந்தால், எதிரிகளைச் சுலபமாக நாம் எதிர்க்க முடியும். உதாரணமாக, இந்தியா இப்பொழுது பிரிட்டனுடைய ஆதிக்கத்தில் இருக்கிறது. பிரிட்டிஷாரின் அரசியல் ஆதிக்கத்தை எதிர்க்க இந்தியர்களால் முடியவில்லை. ஆனால் பிரிட்டிஷாரின் பொருளாதார ஆதிக்கத்தை, காந்தியின் ஒத்துழையா இயக்கத்தின் மூலமாக எதிர்த்து நிற்கிறார்கள். ஒத்துழையாமை என்பது என்ன? பிரிட்டிஷாருக்கு என்ன தேவையோ அதை இந்தியர்கள் கொடுக்க மாட்டார்கள். பிரிட்டிஷார் என்ன அளிக்கிறார்களோ அதை இந்தியர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். உதாரணமாக, ஒரு பிரிட்டிஷ்காரர், ஓர் இந்தியக் கூலி தேவை யென்று கூறினால் எந்த இந்தியக் கூலியும் போய் வேலை செய்ய மாட்டான். பிரிட்டிஷார், இந்தியர்களுக்கு எல்லாச் சாமான்களையும் சப்ளை செய்வதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்தியர்களோ, உள்நாட்டுப் பொருள்களையே உபயோகிப்பதாகச் சொல்லுகிறார்கள். காந்தி, முதலில் தமது திட்டத்தை வெளியிட்ட

போது, பிரிட்டிஷார் அதனை அலட்சியம் செய்து விட்டார்கள். பின்னர், ஒத்துழையா இயக்கம் வலுக்க வலுக்க, பிரிட்டிஷாருடைய வியாபாரம் தடைப்பட்டது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காந்தியைச் சிறையில் வைத்தனர். ஒத்துழையா இயக்கத்தில் இந்தியர்கள் ஏன் வெற்றி பெற்றார்கள் என்றால் இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையா யிருந்து மேற்படி இயக்கத்தை நடைமுறையில் கொணர்ந்ததே காரணமாகும். அடிமை நாடா யிருக்கிற இந்தியா, ஒத்துழையா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமானால், சீனாவிலும் அதனை ஏன் அமுலுக்குக்கொண்டு வரக் கூடாது? உள் நாட்டுப் பொருள்களையே உபயோகித்தும், சீனாவின் நாணயத்தையே புழங்கியும், அந்நியர்களுடன் பொருளாதார சம்பந்தத்தை வைத்துக் கொள்ளாமலும் இருந்தால் நாம் எவ்வளவோ சீக்கிரத்தில் முன்னுக்கு வரலாமல்லவா? இந்தியாவைப் போலவே நாமும் ஒத்துழையா இயக்கத்தைத் தொடங்கி நடத்தினால், நாம் யாருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. ஆகையால் இப்பொழுது நமக்குத் தேவையா யிருப்பது ஒற்றுமை தான். சீனாவிலுள்ள முந்நூறு நானூறு வகுப்புப் பிரிவுகளும் தேசம் என்ற ஒன்றினைக் குறிக்கோளாகக் கொண்டு வேலை செய்யுமானால், நம் விடுதலைக்கு ஒரு வழி ஏற்படும். எந்தத் தேசம் நம்மை எதிர்த்து வந்தபோதிலும் அதனை நாம் எதிர்த்து நிற்க முடியும்.

ஓர் அந்நிய அரசாங்கத்தை எதிர்த்து நிற்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று உடன்பாட்டு முறை; மற்றொன்று எதிர்மறை முறை. உடன்பாட்டு முறையாவது, தேசிய உணர்ச்சியைத் தட்டி யெழுப்பி, அரசாங்கத்தோடு போராடுவதாகும். எதிர்மறை வழியாவது, அந்நிய ஆதிக்கம் பலவீன மடையும்படி ஒத்துழையாமை, சட்ட மறுப்பு முதலிய இயக்கங்களை ஆரம்பித்து தேசிய கௌரவத்தைக் காப்பாற்றலாம். தேசிய அழிவும் ஏற்படாமல் இருக்கும்.

மனிதன், வாழ்க்கையில் வளர்ச்சி யடைய வேண்டு மானால், அவனுக்கு ஏதாவது எதிர்ப்பு இருந்து கொண்டிருக்க வேண்டும். காற்றாடிகள், காற்றை எதிர்த்துக் கொண்டுதான் மேலேறுகின்றன.

—மாபி

தமயனின் கடிதம்-10

"தேவி தாஸன்"

(விபத்துக் காலத்தில் பேருதவி புரிந்து வந்த ஓர் பெண்மணி தனது கணவனை இழந்தது குறித்து, தம்பியின் விருப்பப்படி தந்த ஆறுதல் மொழி.)

இறப்பும் பிறப்பும் இயற்கையம்மா—இதை
எண்ணிடில் நெஞ்சம்புண் ணுறுதம்மா
அறப்பெரி யோர்கள் ஆக்கிவைத்த—நீதி
அனந்த முண்டிதற் கறிவா யம்மா. 1.

புத்தரின் பொன்மொழி பாராயம்மா—ஔவை
புகன்ற வாசகம் தேராயம்மா
மெத்த உளம்நோக வேண்டாமம்மா—வான
மின்னல்நேர் வாழ்விது வாது மம்மா. 2.

ஆண்டுகள் பற்பல அழுதாலுமே—மீண்டும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில்
வேண்டா மம்மாவிவ் வேதனைகள்—தேவி
விதித்த விதியென்று தேர்வா யம்மா. 3.

குஞ்சுக் கிரைதேடச் சென்றபுறா—வேடன்
கூரிய வாளிக்குட் பட்டு விட்டால்
பஞ்சையாம் குஞ்சுகள் நிலைமையென்ன—இந்தப்
பாரில் இதுபோல் பலவே யம்மா. 4.

கொட்டு முழக்கொடு மணமகனும்—ஆசை
கூறிய மாங்கல்யந் தனை யெடுத்து
சூட்டிட முற்படு போதினிலே—ஆவி
சோர்ந்து வீழ்ந்துமே போனா னடா. 5.

நேற்றைக் கிருந்தாரே யம்மனிதர்—வேத
நீண்டபல் வாதங்கள் நிகழ்த்தி னாரே
சாற்றுதற் கொண்ணா விந்தையாக—அவர்
சவமாய் இன்றுமே சாய்ந்தாரடா. 6.

தூக்குத் தண்டனை விதித்திடவே—ஜட்ஜு
துரிதமாய் மன்றத்தைக் கிட்டையிலே
ஊக்கமாய் உயிர்க்கிளி சிறகடித்து—உடற்
கூட்டைவிட் டோடிப் போனதடா. 7.

நெஞ்சை யடைத்து உயிர்துறந்தான்—மடு
நீரில் விழுந்து மாண்டு போனான்
பஞ்சைக் குழந்தைகள் பரிதபிக்க—அந்தப்
பாவியும் மறைந்து போனானடா. 8.

என்றிடும் அனுபவ வாசகங்கள்—இந்த
இநிலந் தன்னில் அனந்த மம்மா
ஒன்றுபின் ஒன்றாய் உணர்ந்த வம்மா—நெஞ்சை
உருக்குந் துயரினை ஆற்று யம்மா. 9.

வல்லார் வகுத்த நெறிகளெல்லாம்—தேடு
வாரற்றுப் போனதி னாலே யம்மா
நில்லாத யிந்த வாழ்வினையே—மாந்தர்
நினைந்து நினைந்து தியங்கு கின்றார். 10.

நாட்டுக்கு நாடு பகைகளம்மா—இந்த
நாற்ற உடல்வாழ்வை நம்பி யம்மா
வீட்டுக்கு வீடு போட்டி யம்மா—இந்த
விந்தைகள் விளம்பிடப் போகா வம்மா. 11.

வீரியப் பேச்சுகள் கோடியம்மா—வீண்
விதண்டா வாதங்கள் வெகுவே யம்மா
ஓரிதை நீயுந் தானேயம்மா—உள்ளம்
உக்கி உக்கி நை யாதே யம்மா. 12.

காலை யெழுந்த இளம்பரிதி—நன்கு
கதிரை விரித்து வளரு தம்மா
மாலை தளர்ந்து தளர்ந்துவம்மா—மேற்கே
மறைந்து போதலுங் கண்டிலையோ. 13.

சென்றதை யெண்ணி வருந்தாதே—இனிச்
சேர்வன நினைத்துந் தளராதே
அன்றன்று வாழ்வில் அடைபவற்றை—நாம்
அகமகிழ்ந் தேற்றலே இன்ப மம்மா. 14.

ஆவி யுலவிடும் நாள்வரையில்—தேவி
அடியினை வாழ்த்தித் துதிப்போ மம்மா
கூவி யவள்நம்மை அழைத்துவிடின்—அவள்
கொய்மலர்ச் சேவடி குறுகிடுவோம். 15.



1939

டிசம்பர்

30 பிரான்ஸுக்கும் பெல்ஜியத்திற்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் நடைபெற்றிருக்கிறது.

பாபு ராஜேந்திர பிரசாதும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் மகாத்மா காந்தியை இன்று பேட்டி கண்டார்கள்.

31 துருக்கியில் பூகம்பம் ஏற்பட்ட பிறகு, பெரிய வெள்ளப் பெருக்கெடுத்து அதிக சேதம் உண்டாயிற்று.

பிரெஞ்சு அரசாங்கம், துருக்கியில் ஏற்பட்ட பூகம்பம் முதலிய சேதங்களை முன்னிட்டு, துருக்கி அரசாங்கத்திற்கு ஐம்பது லட்சம் பிராங்குகள் நன்கொடையாக அளித்திருக்கிறது.

1940

ஜனவரி

1 ஜப்பானுடைய ஆதிக்கத்தில், மத்திய சீனாவில் ஒரு பொம்மை அரசாங்கம் ஏற்படுத்தும் விஷயமாக எல்லா ஏற்பாடுகளும் முடிவு பெற்று விட்டன வென்று ஒரு பத்திரிக்கைச் செய்தி கூறுகிறது.

வட மஞ்சூரியா ரெயில்வே சம்பந்தமாக ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் இருந்த தகராறு தீர்ந்து விட்டது.

ரோமா புரியிலுள்ள போப்பரசர் மாளிகையில் பெரிய தீவிபத்து ஏற்பட்டது.

2 சென்னை காங்கிரஸ் மாளிகையில் நடைபெற்ற பொருட் காட்சிக்கு தீவிபத்து ஏற்பட்டது. காங்கிரஸ் மாளிகையின் ஒரு பாகமும் தீப்பற்றி எரிந்தது.

சென்னையில் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி மகாநாடு ஆரம்பமாயிற்று. சென்னைச் சர்வ கலாசாலையின் உப அக்கிராசனரான எஸ். இ. ரங்கநாதம் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார்.

பின்லாந்து அரசாங்கத்தின் தலைவராகிய காலியோ என்பவர், உலகத்தாருடைய அநுதாப மெல்லாம் தங்களுக்கு இருக்க வேண்டு மென்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

சீன—ஜப்பானிய யுத்தம் ஆரம்பத்திலிருந்து இதுவரை 70,000 ஜப்பானியர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்களென்று ஜப்பானிய அறிக்கை யொன்று கூறுகிறது.

ஜெர்மனியின் உதவியை ருஷ்யா நாடுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

3 அமெரிக்க காங்கிரஸ் இன்று கூடியது. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அப்பொழுது பேசுகையில், உலகத்தின் மற்ற நாடுகள் ஒன்றைக் கொன்று போரிட்டுக் கொண்டிருக்கும் பொழுது அமெரிக்கா சும்மா யிராதென்றும், ஆனால் அதற்காக மற்ற நாட்டுச் சண்டையில் தலையிட்டுக் கொள்ளாதென்றும், உலக சமாதானத்திற்காக அஃது எப்பொழுதும் பாடு பட்டு வருமென்றும் அவர் கூறினார்.

பின்லாந்தின் முக்கிய துறைமுகப் பட்டினமாகிய ஆபோ என்னும் நகரம் இன்று ருஷ்ய ஆகாய விமானங்களால் தாக்கப் பட்டது.

4 சீன-ஜப்பானிய யுத்தத்தில், க்வாங்டங் மாகாணத்தில் பெரிய யுத்தம் நடைபெற்றதென்றும், பதினாயிரம் ஜப்பானியர்களுக்கு மேல் கொல்லப்பட்டார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது,

யுத்த சம்பந்தமாக ஜெர்மனியில் நடைபெறும் சிக்கன ஏற்பாடுகள் சம்பந்தமான எல்லா விவகாரங்களையும் தளபதி கோரிங் தாமே நிருவகிக்கத் தொடங்கியிருக்கிறார்.

ருஷ்யாவில் உணவுப் பொருள்கள் குறைவு காரணமாக கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று ஒரு செய்தி கூறுகிறது.

ருஷ்யாவுடன் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜப்பானிலிருந்து ஒரு வியாபாரப் பிரதிநிதிக் கூட்டம் மாஸ்கோ நகரத்திற்குச் சென்றிருக்கிறது.

1939ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் மட்டும் ஸ்வீடனுக்கு பதினேரு கப்பல்கள் சேதமடைந்திருக்கின்றன.

சென்ற காங்கிரஸ் மாளிகை தீப்பற்றி எரிந்து போனதன் காரணமாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஆகிய இவற்றின் காரியாலயங்கள் இன்று சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள மஹாஜன சபைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

5 தென்னாப்பிரிக்கா யூனியன் அரசாங்கமானது, நாஜி கட்சிக்கு ஆதரவாயிருக்கும் சுமார் ஆயிரம் பேரைக் கைது செய்திருக்கிறது.

பின்லாந்தில் பலத்த குளிர். இதனால் பின்லாந்து—ருஷ்யப் போராட்டம் தடைப் பட்டிருக்கிறது. ஆயினும் ருஷ்யப் பிரதேசத்தில் சுமார் பதினைந்து மைல் வரை பின்லாந்து துருப்புகள் முன்னேறிச் சென்றிருக்கின்றனவென்று ஒரு செய்தி கூறுகிறது.

'கைராட்டினமும் நல்லெண்ணமும் அஹிம்சா தர்மத்திற்கு அடிப்படையாயிருப்பன. முழு நம்பிக்கையோடு சட்ட மறுப்பியக்கம் தொடங்க வேண்டுமானல், இந்த அடிப்படையான காரியங்கள் பூர்த்தி செய்யப் பட வேண்டும்' என்று மகாத்மா காந்தி இன்று 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதுகிறார்.

6 பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் யுத்த மந்திரியாக இருந்த ஹோரே பெலிஷாவும், வியாபார மந்திரியாக இருந்த ஸர் ஆண்ட்ரூஸ் டங்கனும் விளம்பர மந்திரியாயிருந்த லார்ட் மாக்மில்லனும் ராஜீநாமா செய்து விட்டார்கள்.

ஹாலந்தின் மீது படையெடுக்கப்பட்டால், அதனைப் பலமாக எதிர்த்து நிற்குமென்று ஹாலந்து அரசாங்கம், ஜெர்மனிக்கு ஓர் எச்சரிக்கை கொடுத்திருக்கிறது.

ஜெர்மனியில் உணவுப் பொருள் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்றும், அநேக துணிமணிக் கடைகள் மூடப்பட்டு விட்டனவென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

துருக்கி பூகம்ப கஷ்ட நிவாரண நிதிக்காக நைஜாம் மன்னர், பதின் மூன்று லட்சம் பிராங்குகள் நன்கொடையாக அளித்திருக்கிறார்.

7 ஹிந்து—முஸ்லீம் சமரஸத்தை முன்னிட்டு ஜனப் ஜின்னவும், பண்டித ஜவஹர்லால் நேருவும் கலந்து பேசுவதாக இருந்ததல்லவா? ஆனால் டிசம்பர் மாதம் 22ந் தேதி முஸ்லீம்கள் 'விமோசனக் கொண்டாட்டம்' கொண்டாட வேண்டுமென்று ஜனப் ஜின்னா அறிக்கை விடுத்ததன்பயனாக, இந்தச் சம்பாஷணை முறிந்து போயிற்று. இது சம்பந்தமாக ஜனப் ஜின்னவுக்கும் பண்டித ஜவஹருக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்து இன்று பிரசுரமாகியிருக்கிறது.

8 ருஷ்யா பின்லாந்து போராட்டத்தில், ருஷ்யப் படைகளுக்குப் பெரிய தோல்வி

ஏற்பட்டு விட்டதென்றும் சுமார் ஆயிரம் ருஷ்யப் போர்வீரர்கள் சிறைப் பட்டார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

வின்ஸ்டன் சர்ச்சில் இன்று மேற் கரங்கத்துப் போர்முனைக்கு விஜயஞ் செய்தார்.

9 முஸ்லீம் லீக்கோடு இனி காங்கிரஸ் சமரஸம் பேச முடியாதென்று சர்தார் படேல் இன்று ஆமதாபாத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்.

இன்று நெவில்லி சேம்பர்லேன் லண்டன் மான்ஷன் ஹவுஸ் என்ற இடத்தில் பேசிய போது பின்லாந்துக்கு இங்கிலாந்தின் உதவி கிடைக்குமென்றும், தேசத்தில் அனைவரும் யுத்தம் காரணமாகச் சிக்கனத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஜெர்மனியால் ஆக்ரமிக்கப் பட்டுள்ள போலந்தில், யூதர்கள் பகல் வேளைகளில் வீதிகளில் செல்லக்கூடாதென்றும், எல்லா யூதர்களும் அரசாங்கத்திற்காகக் கட்டாயம் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமென்றும், ஜெர்மன் அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிற தென்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

10 பாபு சுபாஷ் சந்திரபோஸ் இன்று சென்னைக்கு விஜயஞ் செய்தார்.

தஞ்சை திருச்சி ஜில்லாக்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டதன் காரணமாக சென்னை அரசாங்கத்தார் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வரிவஜா செய்திருக்கின்றனர்.

டன்பார் என்ற பெரிய பிரிட்டிஷ் கப்பல் இன்று மூழ்கி விட்டது.

இந்தியாவின் அரசியல் அந்தஸ்து குடியேற்ற நாட்டந்தஸ்தாக இருக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கமென்று ராஜப் பிரதிநிதி இன்று பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசினார்.

பால்கன் பிரதேசங்களாகிய துருக்கி, கிரீஸ், ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சமீபத்தில் ஒரு மகாநாடு கூடுவார்களென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

11 ஜெர்மன் ஆகாய விமானங்கள் இன்று ஸ்காத்லாந்தின் வட பாகத்தில் வட்டமிட்டன.

துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாகச் சுமார் இருபத்தையாயிரம் பேர் மரணம்.

பின்லாந்துக்கு எல்லாவித உதவிகளையும் ஸ்வீடன் செய்யுமென்று ஸ்வீடன் மன்னர் கூறினார்.

12 இங்கிலாந்தின் கிழக்குப் பாகத்தில் சென்று கொண்டிருந்த ஒரு பிரிட்டிஷ் கப்பலை ஜெர்மன் ஆகாய விமானங்கள் தாக்கின.

13 புலாபாய் தேசாய் இன்று ராஜப் பிரதிநிதியிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்படியே ஜனாப் ஜின்னாவும் பேசிக் கொண்டிருந்தார்.

மேற்குப் போர் முனையில் ஜெர்மன் ஆகாய விமானங்களுக்கும் பிரிட்டிஷ் ஆகாய விமானங்களுக்கும் பெரிய யுத்தம் நடைபெற்றது.

எகிப்தில் 51 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டு பந்தோபஸ்தில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

பல்கேரியா, தற்போதைய யுத்தத்தில் நடுநிலைமையே வகிக்கும் என்று ஒரு செய்தி கூறுகிறது.

14 பின்லாந்தின் தலை நகரமான ஹெல்சிங்கியின் மீது 400 சோவியத் ஆகாய விமானங்கள் பறந்து சென்றன.

ஜப்பானிய மந்திரிச் சபை ராஜிநாமா செய்து விட்டது.

ஹாலந்து எல்லைப் புறத்தில் ஜெர்மன் துருப்புகள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன வென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

15 ஸ்வீடன் தேசத்திலுள்ள சில நகரங்களின் மீது ஆகாய விமானங்கள் குண்டுகளெறிந்

தன வென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

மேற்காங்கத்துப் போர் முனையில் ஜெர்மானியர்கள் நீண்ட தூரப் பீரங்கிகளைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றனர்.

பின்லாந்தின் பல பாகங்களின் மீதும் சோவியத் ஆகாய விமானங்கள் குண்டுகளை எறிந்தன.

இன்று வார்தாவில் காங்கிரஸ் தலைவர்கள் பலர், மஹாத்மா காந்தியைக் கண்டு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

16 ஜப்பானில் பெரிய தீவிபத்து. 8000 வீடுகள் நாசமாயின. 40,000 பேர் வீடின்றித் தவிக்கின்றனர்.

தற்போதைய இந்திய அரசியல் நிலைமையில் ஏற்பட்டிருக்கும் சிக்கலைத் தீர்த்து வைக்க ராஜப் பிரதிநிதி எல்லா வகையிலும் முயன்று கொண்டிருப்பதாக காமன்ஸ் சபையில் சொல்லப் பட்டது.

பின்லாந்தின் மீது அறுபது ருஷ்ய ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன.

பிரிட்டிஷ் யுத்த மந்திரியான ஹோரே பெலிஷா ராஜிநாமா செய்ததைப் பற்றி நெவில்லி சேம்பர்லேன் இன்று பார்லிமெண்டில் விளக்கிக் கூறினார்.

17 ஐரோப்பா கண்ட முழுவதும் சொல்லொணாத குளிர். கடல்கள் பனியால் உறைந்து போயிருக்கின்றன. சுமார் 1200 கப்பல்கள், உறைபனி காரணமாக ஒரே இடத்தில் நிலைத்து நிற்கின்றன.

18 ஈராக் அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரி இன்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரினால் சுடப்பட்டு பலத்த காயமடைந்தார்.

ஹாலந்தைச் சேர்ந்த ஜெர்மானிய எல்லைப் புறத்தில் ஜெர்மானியர்கள் முள்வேலி போட்டு பந்தோபஸ்து செய்து வருகின்றனர்.

19 இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் வார்தாவில் கூடியது.

20 இன்று. பர்மா அரசாங்கத்தின் பழைய மந்திரிச் சபை கலைந்து போய், புதிய மந்திரிச் சபை அமைந்தது. ஊ பூ நான் பிரதம மந்திரி. பழைய மந்திரிகளில் ஒருவரான ஊ பா பே புதிய மந்திரிச் சபையில் அங்கத்தினராயில்லை.

இன்றும் வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது.

ஸர் ஏ. டி. பன்னீர் செல்வம், இந்தியா மந்திரிச் சபையில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

21 கிரென் வில்லே என்ற பிரிட்டிஷ் கப்பல் முழுகடிக்கப்பட்டது.

சீனாவில், ஜப்பான் ஏற்படுத்த விரும்பும் பொம்மை அரசாங்கத்திற்கு இத்தலி ஆதரவு கொடுக்கு மென்று கவுண்ட் சியானோ ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்.

ஓரேஸியோ என்ற 11,669 டன் நிறையுள்ள இத்தாலியக் கப்பல் தீப்பற்றி எரிந்தது.

22 சீன-ஜப்பானிய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த, சீன அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

23 பாதர்வெஸ்கி என்ற பிரபல பிடகர். போலிஷ் அரசாங்கத்தின் தலைவராகத் தெரிந் தெடுக்கப் பட்டிருக்கிறார்.

ஜெர்மனியுடன் போடும் சண்டையை நிறுத்திக் கொண்டு அதனுடன் சமாதானம் பேசவேண்டு மென்று, தளபதி ஹெர்ட்ஸாக் தென்னாப்பிரிக்கா பார்லிமெண்டில் ஒரு தீர்மானங் கொண்டு வந்தார்.

24 பெல்ஜியம் தாக்கப்பட்டால், பிரிட்டனும் பிரான்ஸும் அதற்கு ஆதரவு கொடுக்கு மென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூறப்பட்டது.

ராஜ கோட்டை சமஸ்தானத்துத் திவான் தர்பார் வீரவல்லா இன்று இறந்து போனார்.

25 ருஷ்ய—பின்லாந்து யுத்தத்தில், ருஷ்யப்படைகள் அதிக சேதத்தை அடைந்து விட்டன.

26 இந்தியாவிலும், லண்டன், பர்மா முதலிய இடங்களிலும் சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது.